DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1402
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday February 17, 2023

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

# John Tory leaves the Mayor's office at Toronto City Council Friday at 5pm

## ரொறன்ரோ மேயராகப் பணியாற்றிய ஜோன் ரோரி தனது அலுவலகத்தை விட்டு வெள்ளிக்கிழமை மாலை நிரந்தரமாக விலகுகின்றார்



ரொறன்ரோ மாநகர மேயராகப் பணியாற்றிய ஜோன்டோரி நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை தனது ராஜினாமா கடிதத்தை நகர எழுதுநரிடம் **(City Clerk)** சமர்ப்பித்தார். தான் பதவி விலகுவதாக அறிவித்த நாளிலிருந்து தொடர்ச்சியாக பல நெருக்கடிகள் நிலவி வந்த நிலையில் கனடாவின் தேசிய ஊடகங்கள் கொடுத்த அழுத்ததங்கள் காரணமாக 17ம் திகதி வெள்ளிக்கிழமையன்று மாலை 5 மணிக்கு மேயர் அலுவலகத்தை விட்டு அவர் வெளியேறுவார் என்பது உறுதியளிக்கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)



# Establish a five-year review of the Federal Health Care Plan

**- Ontario Premier urges Canadian Prime Minister**

## ஒன்றாரியோ மாகாணத்திற்கு கனடிய மத்திய அரசு வழங்கும் சுகாதார சேவைகளுக்கான நிதி சார்ந்த ஐந்தாண்டு திட்டத்தை நிறுவுங்கள்

### – கனடிய பிரதமருக்கு ஒன்றாரியோ முதல்வர் கடிதம் மூலம் வேண்டுகோள்

ஒன்ராறியோ மாகாணத்திற்கு கனடாவின் மத்திய அரசு வழங்கும் சுகாதா சேவைகளுக்கான நிதி தொடர்பாக அதன் நிலைத்தன்மையையும் உறுதியையும் நிரந்தரமான திட்டத்தின் கீழ் கொண்டுவர எமது அரசு விரும்புகின்றது, இது சுகாதார சேவை சார்ந்த பயன்பாடுகளை மேம்படுத்துவதில் எங்களின் தற்போதைய பணிக்கு பலமானதாக இருக்கும் . இதன் மூலம் இப்போதும் எதிர்காலத்திலும் ஒன்றாரியோ வாழ் மக்களின் தேவைகளை எங்கள் சுகாதாரப் பாதுகாப்பு திட்டத்தின் வாயிலாக பூர்த்தி செய்ய முடியும் என்பதை உறுதிசெய்வதற்கு நாங்கள் விரைவில் ஒரு உடன்பாட்டுக்கு வருவோம் என்று நான் நம்புகிறேன்.

(உள்ளே 6ம் பக்கத்தில் தொடர்ச்சி)

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX COMMUNITY

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI

# யாழ்ப்பாணத்தில் கனேடிய மையம் ஒன்றை அமைக்க வேண்டுகோள்

## (உதயன் பிரத்தியேகச் செய்தி)

- நடராசா லோகதயாளன்



யாழ்ப்பாணத்தில் அண்மையில் திறந்துவைக்கப்பட்ட இந்திய கலாசார மையம் போன்ற ஒரு ஏற்பாட்டை கனடாவும் யாழ்ப்பாணத்தில் விரைவாக அமைத்துத்தர வேண்டும் என்று யாழ் மாநகர முதலவர் கனே-டியத் தூதரிடம் வேண்டியுள்ளார்.

இலங்கைக்கான கனேடியத் தூதர் எரிக் வால்ஷ் முதல் முறையாக யாழ்ப்பாண குடாநாட்டிற்கான பயணம் ஒன்றை மேற்கொண்டு திங்கட்கிழமை (13) வந்தார். முதல் சந்திப்பாக யாழ் மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னால்டைச் சந்தித்து உரையாடினார் என்று அங்கிருந்த எமது செய்தியாளர் கூறுகிறார்.

கனேடிய அரசு யாழ்ப்பாண மாநகர சபை மூலமாக அபிவிருத்திக்கான "வரைவு திட்டம்" (master plan) ஒன்றை தயாரித்து வருவதையும் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றும் செய்யப்படுகிறது என்பதையும் தூதருக்கு மாநகர முதல்வர் நினைவூட்டினார்.

கனேடிய தமிழ் காங்கிரஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கேரி ஆனந்தசங்கரி ஆகியோரின் அனுசரணை மற்றும் ஒருங்கிணைப்புடன் அந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் அதை விரைவுபடுத்த தூதர் நடவடிக்கைகளை எடுக்கவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கனடாவில் வாழும் யாழ்ப்பாணத் தமிழர்கள் கனேடிய தமிழ் காங்கிரஸ் மூலம் அந்நாட்டின் உதவியை பெற்றுக்கொடுக்க முன்வந்துள்ளது மிகவும் ஆறுதல் அளிப்பதால் உள்ளது என்றும், அண்மையில் அவர்கள் ஒருங்கிணைப்புடன் தலைநகர் ஒட்டாவாவில் நாட்டின் நிதியமைச்சர் ஒருவருடன் தான் சந்தித்ததையும் - அவர்கள் நிதியுதவி எதையும் அளிக்க முடியாது என்று கூறினாலும்-அந்த திட்டத்தை நிறைவேற்றுவதில் ஒத்துழைப்புகளை வழங்க முடியும் என்று கூறியதையும் கனேடியத் தூதரிடம் ஆர்னால்ட் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் "கனேடிய கோர்னர்" என்ற ஒரு மையம் அமையுமாயின் மாநகர வளர்ச்சி, கனடாவிலுள்ள தமிழர்களுடன் யாழிலிருந்து கனடா செல்வதற்கான விசா விண்ணப்பங்களை விரைவாக பரிசீலிப்பது, வர்த்தக முதலீடுகள் மற்றும் உறவுகளை மேம்படுத்துவது, தாய் நாடு வரும் கனேடியத் தமிழர்களின் நலன்களை பாதுகாப்பது உள்ளிட்ட பல விடயங்களை இந்த மையம் கவனிக்க முடியும் என்று மாநகர மேயர் தூதருக்கு விளக்கினார்.



இந்த வேண்டுகோள் தொடர்பில் தமது அரசுடன் பேசுவதாக தூதர் தெரிவித்தார்.

யாழ் மாநகர சபை அலுவலகத்தில் (மாலை 5 மணி அளவில்) இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது மாநகர சபையின் தற்போதைய நிலவரம் நாட்டின் பொருளாதார நெருக்கடியினால் மாநகர சபை எதிர்கொள்ளும் நெருக்கடி நிலைமை தொடர்பிலும் மாநகர முதல்வர் கனேடியத் தூதுவருக்கு முதல்வர் எடுத்துக் கூறினார்.

1983ஆம் ஆண்டு நிலைக்கு 13ஆம் திருத்தச் சட்டம் என ஒன்று உருப்படி இல்லாமல் கொண்டு வந்தபோதும் 36 வருடங்கள் பல வடிவங்களில் பல லட்சம் பேரின் இறப்பிற்குப் பின்பும் அந்த 13ஐ பற்றியே பேசும் நிலையிலேயே கொழும்பு உள்ளது.

1990ஆம் ஆண்டு குடாநாட்டில் பதினோரு லட்சம் மக்கள் வாழ்ந்தனர், எனினும் தற்போது ஏழு லட்சத்திற்கும் குறைவானவர்களே வாழ்வதாகவும், கனடாவில் நான்கு லட்சம் பேர் வாழ்கிறார்கள் என்றும் கூறிய மாநகர முதல்வர், இலங்கையில் நிலவும் அரசியல், சமூக, பொருளாதார சீரழிவு மற்றும் ஸ்திரமற்ற நிலையே இதற்குக் காரணம் என்பதையும் அவரிடம் குறிப்பிட்டார்.

அனைத்து அதிகாரங்கள் மற்றும் முடிவுகள் தமது வசமே இருக்க வேண்டும் என்று கொழும்பு ஆட்சியாளர்கள் எண்ணுகிறார்கள் என்றும் இதன் காரணமாக தமிழர் தாயகப் பகுதிகளின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது என்பதையும் ஆர்னால்ட் தூதர் எரிக் வால்ஷிடம் கூறினார்.

### யாழ் பல்கலைக்கழகத்திற்கும் விஜயம்

கனேடியத் தூதுவர் எரிக் வல்ஸ் திங்கட்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் சென்றார். கனேடிய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் யாழ்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடத்தின், மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறையினால் நடாத்தப்படும் என்லீப் செயற்றிட்டத்தின் மீளாய்வுக்காகவே கனேடியத் தூதுவர் தலைமையிலான குழு பல்கலைக் கழகத்துக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தது.

இந்த விஜயத்தின் போது, துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் மற்றும் மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.கே. கண்ணதாஸன் ஆகியோருடனும், மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறை மாணவர்களுடனும் கனேடியத் தூதுவர் கலந்துரையாடி, நிலைமைகளைக் கேட்டறிந்தார்.



# "இனவிடுதலையுடன் போதை விடுதலைக்கும் போராட வேண்டும்": மாவை வேண்டுகோள்

- எமது யாழ் செய்தியாளர்



இலங்கையில் தமிழர் தாயகப் பகுதிகளில் போதைப் பொருட்களின் பாவனை அதிகரித்து வருவது தொடர்பில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் "மாவை" சோ. சேனாதிராஜா கவலை வெளியிட்டுள்ளார்.

இன விடுதலைக்காக உழைக்க முன் வந்த வேட்பாளர்கள் எமது இளம் சந்ததி போதையில் இருந்தும் விடுதலை பெற உழைக்க வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்தார்.

போர் முடிந்த பிறகு தமிழ் மக்களிடையே போதைப் பொருட்கள் பாவனை படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது அவதானிக்கப்படுகிறது. இந்திய - இலங்கை கடற்பரப்பில் கடத்திவரப்படும் போதைப் பொருட்கள் வடக்கு மாகாணத்தின் வழியாகவே நாட்டின் இதர பகுதிகளிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்ற கவலை பொதுமக்களிடையே அதிகரித்துள்ளன.

### உள்ளூராட்சித் தேர்தல் கூட்டம்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட உள்ளூராட்சி சபை வேட்பாளர் அறிமுக கூட்டம் கடந்த ஞாயிறு (12) அன்று இளங்கலைஞர் மண்டபத்தில் அவர் தலைமையில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே தமிழ் இளைஞர்கள் மத்தியில் போதைப் பொருட்கள் பாவனை பற்றிய தனது கவலையை வெளியிட்டார்.

அரசியலில் இருப்போர் தமிழ்ச் சமூகம் மற்றும் இளையோரின் நலன் மட்டும் மேம்பாட்டிற்காகப் பாரிய பங்காற்ற வேண்டிய தேவை உள்ளது, அதை அவர்கள் காத்திரமாகச் செய்ய வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக் கட்சி ஏன் தனித்துப் போட்டியிடுகிறது என்பது குறித்தும் அக்கூட்டத்தில் அவர் விளக்கினார்.

"உள்ளூராட்சி சபைக்காக 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் பெற்ற அனுபவத்தின் மூலம் தனித்து போட்டியிட வேண்டும் என்ற தீர்மானத்திற்கமையவே இம்முறை தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுகின்றது. இதேநேரம் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளாக இருப்போர் வேறாகப் போட்டியிடும் நிலையில் நிச்சயமாக இந்த புதிய உத்தியில் பெரும்பான்மையைப் பெற முடியும். இந்த முடிவிலும் சிலரிடம் மாறுபட்ட கருத்து இருக்கலாம் ஆனால் இதன் நன்மை, தீமையை வாக்களிப்பின் பின்பே தீர்மானிக்கும்" என்றார்.

இக் கலந்துரையாடலில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், சிரேஸ்ட தலைவர் சீ.வி.கே. சிவஞானம் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்கள், வேட்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ்ப்பாண மாநகர சபையின் 2023ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் மீண்டும் தோற்கடிப்பு

- எமது யாழ் செய்தியாளர்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் செவ்வாய்கிழமை (14) ஈ.பி.டி.பி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, மணிவண்ணன் அணி மற்றும் புளட் என்பன கூட்டாக எதிர்ப்புத் தெரிவிக்க 8 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டமானது இன்று சபையில் மாநகர முதல்வர் இ.ஆனல்ட்டினால் முன்வைக்கப்பட்டது.


இதன்போது 1,712 மில்லியன் ரூபா பெறுமதியிலான வரவு செலவு திட்டமே முன்மொழியப்பட்டு விவாதம் நிறைவடைந்த பின்பு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

இன்றைய வாக்களிப்பில் 40 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதில் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 16 வாக்குகளும் எதிராக 24 வாக்குகளும், அளிக்கப்பட்டன.

மாநகர சபையில் பிரதி முதல்வராக இருக்கும் ரெலோ கட்சியின் சார்பில் தமிழ்த் தேசியக் து. ஈசன், புளொட்டைச் சேர்ந்த பி. தர்சானந், சு. சுபாதீஸ் ஆகிய இரண்டு உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் எஸ். சாந்தரூபன் ஆகியோர் கூட்டத்துக்குச் சமூகமளிக்கவில்லை.

யாழ் மாநகர சபையில் இதற்கு முன்னர் முதல்வராக இருந்த மணிவண்ணன் சமர்ப்பித்த வரவு-செலவு திட்டமும் தோற்கடிக்கப்பட்டு அவர் பதவியிலிருந்து விலகும் நிலை ஏற்பட்டது. அப்படியான சூழல் இப்போது மீண்டும் உருவாகலாம் என்று கணிக்கப்படுகிறது.

மாநகர சபையில் உள்ள உறுப்பினர்கள் மக்கள் நலனைக் கருதி செயற்படாமல், சுய லாபம் மற்றும் கட்சி சார்ந்த அரசியலை முன்னெடுக்கின்றனர் என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாகியுள்ளனர். உறுப்பினர்களிடையே மக்கள் நலம் தொடர்பில் ஒற்றுமை இல்லாததால் யாழ்




மாநகரில் பல பணிகள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று பொதுமக்கள் மனம் வருந்துகின்றனர்.

அரசியல் கட்சிகள் தமது பொறுப்புகளை உணர்ந்து செயற்படாவிட்டால், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் அவர்களிற்கு தக்கபாடம் புகட்டப்படும் எனவும் யாழ் மாநகர மக்கள் எச்சரித்துள்ளனர்.

Canada
We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# எதிர்காலத்தில் எரிபொருளுக்கு பதிலாக நாம் பயன்படுத்தவுள்ள "சக்தி" எது?

உலகின் பல நாடுகளில் புதைந்து கிடக்கும் எரிபொருள் வளம் அந்தந்த நாடுகளை செல்வத்தில் மூழ்கியுள்ளவையாக மாற்றியிருக்கின்றன. இதனால் அந்த நாடுகளை நோக்கி வறிய நாடுகளிலிருந்தும் தொழிலாளர்களும் மற்றும் துறை சார் நிபுணர்களும் பயணிப்பது தொடர்ச்சியாக பல ஆண்டுகளாக இடம்பெற்றுவரும் ஒரு நிகழவாகும்.

ஆனால் நிலத்தில் புதைந்து கிடக்கும் படிப்படியாகக் குறைந்து கொண்டு வருகின்றது என்ற விஞ்ஞான பூர்வமான தகவல்களும் தொடர்ச்சியாக வெளிவந்த வண்ணமே உள்ளன. அத்துடன் எரிபொருள் பாவனையால் பூமியில் வெப்பமயமாதல் அதிகரிப்பதையும் இதனால் இயற்கை அழிவுகள் இடம்பெறுவதையும் செய்திகள் வாயிலாக நாம் அறிகின்றோம்.

இவற்றை நன்கு நோக்குகையில், நிலத்தின் கீழுள்ள அந்த எரிபொருள் வளம் இன்னும் சில நூற்றாண்டுகளுக்கு தாக்குப் பிடிப்பது கூட சந்தேகம்தான் என்கின்றனர் விஞ்ஞானிகள். அதன் பின்னர் உலகம் மாற்றுவழியொன்றுக்குச் செல்ல வேண்டியிருக்கும் என்று அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

அதே நேரத்தில் மேற்குலக நாடுகளில் மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை தயாரிக்கும் திட்டங்கள் மிகவும் விரைவாக மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் கனடா அமெரிக்கா மற்றும் அவுஸ்த்திரேலியா போன்ற நாடுகளில் எரிபொருளில் இயங்கும் வாகனங்களின் பாவனை முற்றாக தடைசெய்யப்படும் என்றும் அதன் முதற்கட்டமாக சாதாரணமான கார் போன்ற சிறிய ரக வாகனங்கள் கட்டாயம் மின்சாரத்தில் இயங்கும் வகையில் மக்கள் அனைவரும் அவற்றை கொள்வனவு செய்யும் அளவிற்கு தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அரச அறிவிப்புக்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மூலம் விடுக்கப்பட்டு வருவதாகவும் அறியப்படுகின்றது.

திண்ம நிலையிலுள்ள நிலக்கரி மற்றும் திரவ நிலையிலுள்ள எரிபொருள் போன்றவையெல்லாம் குறிப்பிட்டதொரு கொள்ளளவிலேயே பூமிக்கு உள்ளே காணப்படுகின்றன. மனிதன் தனது தேவைக்காக அவற்றை வெளியே எடுத்துக் கொண்டே இருக்கின்றான். அவை அள்ள அள்ள குறைந்து விடாமல் இருக்கப் போவதில்லை. எரிபொருள் வளம் படிப்படியாக குறைந்து கொண்டுதான் செல்கின்றது என்பதை உலக நாடுகள் உணர்ந்து கொள்ளத் தொடங்கியுள்ளன.

எதிர்காலத்தில் அந்த எரிபொருள் வளம் முற்றாகவே இல்லாமல் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் உலகின் சனத்தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ப நவீன யுகத்துக்கான தேவைகளும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. எரிபொருளும் மின்சாரமும் மக்களுக்கு அதிகம் தேவைப்படுகின்றன. எனவே புவியின் உள்ளேயுள்ள எரிபொருள் மிக அதிகமாகவே அகழ்ந்தெடுக்கப்படுகின்றது. இந்த விடயம் இயற்கைக்கு மாறானது என்பதை தற்போது தான் விஞ்ஞானிகளும் அரசாங்கங்களும் உணர்ந்து செயற்படத் தயாராகியுள்ளன.

எதிர்கால சூழ்நிலைக்கு மனிதன் இப்போதே தயாராக வேண்டுமென்பதுதான் விஞ்ஞானிகளின் அறிவுரையாகும். அதாவது எரிபொருளுக்குப் பதிலாக மாற்றுவழியொன்றைத் தேட வேண்டியது அவசியமென்பதுதான் அக்கருத்தாகும். புதுப்பிக்கத்தக்க சக்திகள் மற்றும் மாற்று எரிபொருள் கண்டுபிடிப்புகள் பற்றி அறிவியல் உலகம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டுமென அவர்கள் கூறுகின்றனர். இந்த எண்ணக்கருவானது சமீப காலமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இறக்குமதி செய்யப்படுகின்ற எரிபொருளில் மாத்திரம் நாம் முற்றுமுழுதாக தங்கியிருக்கக் கூடாது என்பதை மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் நாடுகள் தற்போது உணரத் தலைப்பட்டுள்ளன. மின்சார உற்பத்திக்கும் ஏனைய தேவைகளுக்கும் மாற்றுவழிகளை சிறிதளவேனும் நாட வேண்டியது அவசியம் என்பதுதான் அந்த ஆலோசனையாக உள்ளது. ஏனெனில் எரிபொருள் இறக்குமதிக்காக அதிக நிதியை செலவு செய்ய வேண்டியுள்ளது. சில நாடுகளில் வாகனங்களை இயக்குவதற்காக மட்டுமன்றி , மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காகவும் எரிபொருளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறாக அரசாங்கங்கள் திட்டங்கள் தீட்டுகின்ற வேளையில் மக்களும் கால மாற்றத்திற்கு ஏற்ப தங்களை தயார் செய்ய வேண்டும் என்பதும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற அமைப்புக்களின் எதிர்பார்ப்பாகும்.

# John Tory leaves the Mayor's office at Toronto City Council Friday at 5pm

## ரொறன்ரோ மாநகர மேயராகப் பணியாற்றிய ஜோன் ரோரி தனது அலுவலகத்தை விட்டு வெள்ளிக்கிழமை மாலை நிரந்தரமாக விலகுகின்றார்

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஜோன் ரோரி அவர்களின் விலகலுக்குப் பின்னர் துணை மேயர் பதவியை வகிக்கவுள்ள ஜெனிபர் மெக்கெல்வி மேயரின் ஆசனத்தை அலங்கரிப்பார் என்றும் அவரது சில பொறுப்புகளை எடுத்துக்கொள்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தனது இராஜினாமாக் கடிதத்தை கையளித்த பின்னர் ஜோன் ரொரி ஊடகவியலாளர்களிடம் பேசிய போது "2014 முதல் மேயராக தேர்ந்தெடுத்து என் மீது நம்பிக்கை வைத்திருந்த ரொறன்ரோ மக்களுக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். நான் தொடர்ந்தும் எனது பதவி விலகல் பற்றி மிகவும் வருந்துகிறேன் மற்றும் ரொறன்ரோ மக்களிடமும் மற்றும் எனது செயல்களால் பாதிக்கப்பட்ட அனைவரிடமும் பகிரங்கமாக மன்னிப்பு கேட்கிறேன்," என்றார் ஜோன் ரொரி.

அவர் தொடர்ந்து பேசுகையில் "எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக இந்த அற்புதமான நகரத்தின் மக்களுக்கு சேவை செய்யும் வாய்ப்பைப் பெற்றதால் நான் மிகவும் மதிக்கப்படுகிறேன். நான் உண்மையிலேயே நேசிக்கும் நகரத்திற்கு சில நன்மைகளை பெற்றுக் கொடுத்துள்ளேன் என்று பூரணமாக நம்புகிறேன்."

இவரது இராஜினாமா தொடர்பாக கருத்து வெளியிட்ட நகர எழுதுநர்- **City Clerk -** அலுவலகம் பின்வருமாறு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது

"மேயரின் ராஜினாமாவால் பெரிதான பாதிப்புக்கள் எதுவும் இல்லை. மற்றும் குழுக்கள் அல்லது பிற அமைப்புகளுக்கான செயற்பாடுகளையும் இது பாதிக்காது. இன்றுவரை ஜோன் ரோரியினால் எடுக்கப்பட்ட அனைத்து முடிவுகளும் நடைமுறையில் இருக்கும்" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ரொறன்ரோ நகர சட்டத்தின்படி, அடுத்த மேயரை தேர்வு செய்ய இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

எதிர்வரும் மார்ச் 29-ம் தேதி நடைபெற உள்ள மாநகர சபையின் அடுத்த கூட்டத்தின் போது மேயர் அலுவலகம் காலியாக உள்ளதாக அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்பெற்று இடைத்தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்படும்.

வேட்பாளர்கள் எப்போது வேட்புமனு தாக்கல் செய்யலாம் என்பதற்கான காலக்கெடுவை எழுதுர் நிர்ணயிப்பார். முனிசிபல் தேர்தல் சட்டத்தின்படி, வேட்புமனு தாக்கல் முடிந்து 45 நாட்களுக்குப் பிறகு தேர்தல் நாள் நடைபெறும்.

கடந்த வெள்ளிக்கிழமை, ஜோன் ரோரி கடைசி நிமிட செய்தி மாநாட்டின் போது மேயர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்தார், அங்கு அவர் தொற்றுநோய்களின் தாக்கம் தீவிரமாக இருந்த போது தனது அலுவலகத்தில் பணியாற்றிய ஒரு பெண் ஊழியருடன் தான் கொண்டிருந்த அனுமதிக்கப்படாத உறவின் தாக்கங்களை அவர் வெளிப்படுத்தினார்.

"நான் மேயராகவும் குடும்ப மனிதராகவும் பேண வேண்டிய தரத்தை பூர்த்தி செய்யாத" உறவுதான் அது. ஆனால் தற்பொழுது அது முடிவுக்கு வந்துள்ளது. எனவே நான் பதவியை விட்டு விலக தீர்மானித்துள்ளேன்"என்றார்.

"நான் மிகவும் நேசித்த ஒரு மாபெரும் நகரத்தில், நான் விரும்பும் ஒரு பதவியை விட்டு விலகியதற்கு நான் மிகவும் வருந்துகிறேன், என் இதயத்திற்கு ஒரு தாக்கமாக இருக்கும் என்பது எனக்கு தெரியும் நம்புகிறேன்," என்றும் கவலையும் தெரிவித்தார் பதவி விலகிச் செல்லும் ஜோன் ரோரி.

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் படைப்பாளிக்கு தமிழகப் பதிப்பகம் நடத்திய குறுநாவல் போட்டியில் இலங்கைப் பணம் ஒரு இலட்சம் ரூபாய் பரிசு

தமிழகத்திலுள்ள ஸீரோ டிகிரி பதிப்பகம் கடந்த வருடம் சிறுகதை, குறுநாவல், நாவல் போட்டிகளை நடத்தியது. குறுநாவல் போட்டியில் இலங்கை சாவகச்சேரியைச் சேர்ந்த தாட்சாயணி என்னும் பெண் படைப்பாளியின் குறுநாவலான "தீநிழல்" பரிசு பெற்றது.

யாழ்ப்பாணம், சாவகச்சேரியைச் சேர்ந்த இவர் பிரதேச செயலாளர் பதவி வகிப்பவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



இந்தப் போட்டியில் டி வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு சென்னையில் அண்மையில் நடைபெற்றது. விழாவில் நேரடியாக கலந்து கொள்ள இயலாத காரணத்தால் தாட்சாயணி அவர்களுக்குரிய விருது, மற்றும் பரிசுத்தொகை இந்திய ரூபா இருபதாயிரம் மற்றும் குறுநாவல் தொகுப்பு ஆகியவற்றை எம். ஜி. ஆர். ஜானகியம்மாள் கல்லூரி முனைவர் குமார் ராஜேந்திரன் பெற்று இலங்கைப் பதிப்பாசிரியர் எச். எச் விக்கிரமசிங்க அவர்களிடம் கையளித்திருந்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு சென்றிருந்த எழுத்தாளரும் சமூக ஆர்வலருமான எச். எச் விக்கிரமசிங்க பரிசுத்தொகை இலங்கைப் பெறுமதி ஒரு இலட்சம் ரூபாவினையும், விருதையும், பரிசு பெற்ற குறுநாவல் பிரசுரமான நூலையும், தாயகத்து படைப்பாளி தாட்சாயணியிடம் வழங்கினார்.

அப்பொழுது எடுக்கப்பெற்ற படம் இங்கு காணப்படுகின்றது- பரிசு பெற்ற படைப்பாளி தாட்சாயிணியை கனடா உதயன் ஆசிரிய பீடம் வாழ்த்துகின்றது

-------------------------------------------

தகவல்- எச். எச். விக்கிரமசிங்க- கொழும்பு

இந்தியா செய்திகள் India News

# "வரும் ஏப்ரல் மாதம் மக்கள் தொகையில் சீனாவை இந்தியா முந்தி விடும்"

## ஐ.நா நிபுணர் குழு கணிப்பு

இன்னும் 2 மாதங்களில் மக்கள் தொகையில் சீனாவை இந்தியா முந்திவிடும் என்று ஐ.நா. நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

ஐநா மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கிய 1950 முதல் உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக சீனா இருந்து வருகிறது. இந்த பெயரை அது இன்னும் 2 மாதங்களில் இழக்கும் என்றும், வரும் ஏப்ரலில் உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா உருவெடுக்கும் என்றும் ஐ.நா. நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

ஐநாவின் அறிக்கை மற்றும் பிற அமைப்புகள் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின் உதவியோடு ஆய்வறிக்கை வெளியாகியுள்ளது. அதன் விவரம்:

"இந்தியாவில் 2011க்குப் பிறகு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. எனவே, அதன் உண்மையான மக்கள் தொகை தெரியவில்லை. எனினும், தோராயமாக இந்தியாவின் மக்கள் தொகை 140 கோடிக்கும் அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது ஒட்டுமொத்த ஐரோப்பாவைவிட (74.4 கோடி) அதிகம் ஒட்டுமொத்த அமெரிக்காவைவிட (104 கோடி) அதிகம்.

சீனாவிலும் 140 கோடிக்கும் அதிகமாக மக்கள் இருக்கிறார்கள். என்றாலும், சீனாவில் மக்கள் தொகை பெருக்கம் குறைந்து வருகிறது. இந்தியாவில் அதிகரித்து வருகிறது. இதனால், வரும் ஏப்ரலில் சீன மக்கள் தொகையைவிட இந்திய மக்கள் தொகை அதிகமாகும். வரும் 2030க்குள் இந்தியாவின் மக்கள் தொகை 150 கோடியாக உயரும். வரும் 2047 வரை இந்தியாவில் மக்கள் தொகை மெதுவாக உயர்ந்து கொண்டே இருக்கும்.

வரும் 2068ம் ஆண்டு இந்தியாவில் மக்கள் தொகை 200 கோடியைத் தாண்டும். எனினும், 2047க்குப் பிறகு மக்கள் தொகை விகிதம் குறைந்து 2100ம் ஆண்டில் அது மீண்டும் 100 கோடியாக குறையும்.

இந்தியாவில் இளைஞர் சக்தி

இந்திய மக்கள் தொகையில் 40 சதவீதம் பேர் 25 வயதுக்கு கீழ் உள்ளவர்களாக இருக்கிறார்கள். உலகில் 25 வயதுக்கு கீழ் உள்ள இளைஞர்களில் 5ல் ஒருவர் இந்தியாவில் இருக்கிறார். மக்கள் தொகை பெருக்கம் காரணமாக இந்திய மக்களின் சராசரி வயது 28 ஆக உள்ளது. அமெரிக்காவில் இது 38 ஆகவும், சீனாவில் இது 39 ஆகவும் உள்ளது. இந்திய மக்கள் தொகையில், 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் 7 சதவீதம் இருக்கிறார்கள். சீனாவில் 14 சதவீதமும், அமெரிக்காவில் 18 சதவீதமும் இருக்கிறார்கள்.



சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளோடு ஒப்பிடுகையில் இந்தியாவில் குழந்தை பிறப்பு விகிதம் அதிகமாக இருக்கிறது. இந்திய பெண்கள் சராசரியாக 2 குழந்தைகளை பெற்றுக்கொள்கிறார்கள். சீனாவில் இது 1.2 ஆகவும், அமெரிக்காவில் இது 1.6 ஆகவும் இருக்கிறது. கடந்த காலங்களோடு ஒப்பிடுகையில் இந்தியாவில் பெண்கள் குழந்தை பெற்றுக்கொள்வது குறைந்து வருகிறது.

1950ல் இந்தியாவில் சராசரியாக ஒரு பெண் பெற்றுக்கொள்ளும் குழந்தைகளின் விகிதம் 5.9 ஆகவும், 1992ல் 3.4 ஆகவும் இருந்தது. இதேபோல், இந்தியாவில் அனைத்து மதப் பெண்களும் குழந்தை பெற்றுக்கொள்ளும் எண்ணிக்கை குறைந்துள்ளது. எனினும், மற்ற மதப்பெண்களைக் காட்டிலும் இஸ்லாமிய பெண்கள் குழந்தை பெற்றுக்கொள்வது சற்று அதிகரித்து காணப்படுகிறது. 1992ல் அவர்கள் சராசரியாக 4.4 குழந்தைகளை பெற்ற நிலையில் அது தற்போது 2.4 ஆக குறைந்துள்ளது.

நகரங்களில் வாழும் பெண்கள் குழந்தை பெற்றுக்கொள்வதற்கு ஒன்றரை ஆண்டுகள் முன்பாக கிராமத்தில் வாழும் பெண்கள் குழந்தை பெற்றுக்கொள்கிறார்கள். மத ரீதியாக பார்க்கும்போது சமண மதத்தைச் சேர்ந்த பெண்கள் முதல் குழந்தையை 24.9 வயதிலும் முஸ்லிம் பெண்கள் 20.8 வயதிலும் பெற்றுக்கொள்கிறார்கள்".

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலை விபத்தில் இருவர் பலி

குருந்து கஹஹெதெக்மவில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 14-02-2023 இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

வேகமாக வந்த கார் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியின் பின்பகுதியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பின்னதுவையிலிருந்து கொட்டாவ நோக்கிச் சென்ற லொறி இயந்திரக் கோளாறு காரணமாக நிறுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தின் போது லொறியின் சாரதி வாகனத்தை சோதனை செய்து கொண்டிருந்தார்.

இந்த விபத்தில் காரின் சாரதி, அவரது தந்தை மற்றும் இரு குடும்ப உறுப்பினர்கள் காயமடைந்துள்ளனர்.

சாரதியின் தந்தையும் அவரது மாமாவும் நாகொட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் 70 மற்றும் 75 வயதுடைய திருக்கோவில் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

சடலங்கள் தற்போது நாகொட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.







மேலே காணப்படும் இந்த விபத்து செய்தி தொடர்பாக தனது முகநூல் பக்கத்தில் நண்பர் கோவிலூர் செல்வராஜன் பதிவொன்றை இட்டுள்ளார். இந்த விபத்தில் கொல்லப்பட்டவர்கள் தனது உறவினர்கள் நண்பர்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். நண்பர் கோவிலூர் செல்வராஜ அவர்கள் தற்போது இங்கிலாந்தில் வாழ்ந்து வருகின்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இலங்கையில் இடம்பெற்ற இந்த விபத்தில் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் கனடாவில் வசித்து வருபவர் என்றும் விடுமுறைக்காக இலங்கைக்குச் சென்று நாடு திரும்புவதற்காக கொழும்பு சென்றபோதே விபத்து ஏற்பட்டதாக அறியப்படுகின்றது.

திருக்கோவிலை சேர்ந்த இருவர் (14.02.23) கொழும்பு, கழுத்துறை அதிவேக நெடு ஞ்சாலையில் நடந்த வாகன விபத்தில் உயிர் இழந்துள்ளார்கள். மேலும் இருவர் படுகாயம் அடைந்துள்ளார்கள் என்ற செய்தி எனக்கு கனடாவிலிருந்து இன்று காலை கிடைத்தது. இதை நான் திருக்கோவிலுக்கு எனது உறவுக்காரர் ஒருவருடன் தொடர்பு கொண்டு உறுதி செய்துகொண்டேன்.உயிர் இழந்தவர்கள் திருக்கோவில்லை சேர்ந்த அண்ணனும். தம்பியும். அண்ணன் கேதாரவரதசுந்தரம் (வாவா).

தம்பி நாகசுந்தரம். அண்ணன் திருக்கோவிலில் வாழ்ந்தவர். தம்பி புலம்பெயர்ந்து கனடா நாட்டில் வாழ்ந்தவர். இவர் குடும்பத்துடன் விடுமுறைக்காக ஊர் சென்று மீண்டும் கனடா திரும்புகையில் இந்த விபத்தில் உயிர் இழந்துள்ளார். அண்ணா வழியனுப்ப வந்த நேரம் அவரும் மரணத்தை தழுவியுள்ளார். இவர்கள் முன்னாள் திருக்கோவில் முருகன் ஆலய வண்ணக்கராக இருந்த தங்கராஜா (ஓவசியர்) அவர்களின் புதல்வர்கள் ஆவார்கள். இவர்களது உடல்கள் நாளை நாகொடா வைத்திய சாலையிலிருந்து திருக்கோவிலுக்கு கொண்டுவரப்பட இருக்கின்றன. கனத்த இதயங்களுடன் கனடாவில் வாழும் மற்றும் நான்கு சகோதரர்கள் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொள்ள பயணிக்க இருப்பதாகவும் அறிய முடிந்தது. மனதை உலுக்கிய இந்த விபத்தால், உயிர் இழப்புகளால் ஊரே சோகத்தில் மூழ்கி உள்ளதாகவும் அறிந்து வருந்தினேன். மரணித்தவர்கள் எனக்கு ஒரு வழியில் உறவுக்காரரே. இவர்களை இழந்து நிற்கும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தையும். இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதுடன். இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றேன். ஓம் சாந்தி.

உலக செய்திகள் World News

# துருக்கி பூகம்ப பலி 33 ஆயிரம்: 128 மணிநேரத்திற்குப் பின் 2 மாத குழந்தை உயிருடன் மீட்பு

துருக்கி - சிரியாவில் கடந்த 5-ந்தேதி ஏற்பட்ட பயங்கர நில நடுக்கத்தால் தரை மட்டமான ஆயிரக்கணக்கான வீடு, கட்டிட இடி பாடுகளில் தொடர்ந்து மீட்கும்பணி நடந்து வருகிறது. இந்த நில நடுக்கத்தால் இரு நாடுகளும் பெறும் துயரத்துக்கு உள்ளாகி இருக்கின்றன. கட்டிட இடி பாடுகளில் இருந்து பலியானவர்களின் உடல்கள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

இதனால் இரு நாடுகளிலும் நில நடுக்கத்துக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 33 ஆயிரத்தை தாண்டியது. இதில் துருக்கியில் பலியானோர் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

இடிபாடுகளில் இருந்து உடல்கள் தொடர்ந்து மீட்கப்பட்டு வருவதால் பலி எண்ணிக்கை கூடும் என்று அஞ்சப்படுகிறது. பலி எண்ணிக்கை அதிகரிக்கும் அதே நேரத்தில் கட்டிட இடிபாடுகளில் இருந்து பலர் உயிருடன் மீட்கப்பட்டு வருகிறார்கள். 100 மணி நேரத்துக்கு பிறகு இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்புக் குழுவினர் வெளியே கொண்டு வந்தனர். குறிப்பாக குழந்தைகள், சிறுவர்கள் உயிருடன் மீட்கப்பட்டனர்.

இந்த நிலையில் துருக்கியில் 128 மணி நேரத்துக்கு பிறகு இடிபாடுகளில் இருந்து 2 மாத பச்சிளம் குழந்தை உயிருடன் மீட்கப்பட்டுள்ளது. துருக்கியில் ஹடாய் நகரில் கட்டிட இடிபாடுகளை அகற்றிய போது ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டது. உடனே மீட்புக் குழுவினர் குழந்தையை மீட்க இடிபாடுகளை வேகமாக அகற்றினர். சில வீரர்கள் இடிபாடுகளுக்குள் சென்று பார்த்தனர்.

பின்னர் அந்த பச்சிளம் குழந்தையை 128 மணி நேரத்துக்கு பிறகு உயிருடன் மீட்டு வெளியே கொண்டு வந்தனர். உடனே குழந்தைக்கு முதலுதவி சிகிச்சை அளித்து ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அந்த குழந்தை பிறந்து 2 மாதங்களே ஆகின்றன. அந்த குழந்தையை மீட்டபோது, அங்கிருந்த மீட்புக்குழுவினர், பொது மக்கள் கைகளை தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அக்குழந்தை தற்போது நலமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இடிபாடுகளில் 128 மணி நேரம் தாக்குப்பிடித்து அக்குழந்தை இருந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



அதே போல் 5 நாட்களுக்கு பிறகு இடிபாடுகளில் இருந்து 2 வயது சிறுமி, கர்ப்பிணி பெண், 70 வயது மூதாட்டி ஆகியோரும் உயிருடன் மீட்கப்பட்டனர். காசியான்டெப் மாகாணத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். இதற்கிடையே துருக்கியில் நில நடுக்க பாதிப்புக்கு மத்தியில் திருட்டு சம்பவங்கள் நடந்து வருகின்றன.

கடந்த 4 நாட்களில் திருட்டில் ஈடுபட்ட 48 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "பெண்களுக்கெதிரான வன்முறைகளற்ற வாழ்வை கொண்டாடுவோம்" — மன்னாரில் கவனயீர்ப்பு பேரணி



நூறு கோடி மக்களின் எழுச்சி-2023 பெண்களுக்கு எதிரான வன்முறையற்ற வாழ்வை கொண்டாடுவோம் எனும் கருப்பொருளில் மன்னார் மாவட்ட மாதர் அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்த விழிப்புணர்வு நிகழ்வு செவ்வாய்க்கிழமை (14) காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் இடம் பெற்றது.

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் மாவட்ட இணைப்பாளர் மகாலட்சுமி குருசாந்தன் தலைமையில் இடம்பெற்ற குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டதோடு, மனித உரிமை செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், குடும்ப வன்முறைகள் போன்றவற்றை நிறுத்தி உடல் உள ரீதியாக பெண்களை பாதுகாக்க வேண்டும் மன்னார் மாவட்டத்தில் உள்ள பெண்கள் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இந்த





கவனயீர்ப்புப் பேரணியில் கலந்து கொண்டார்கள்.

இதன் போது பெண்களால் பறை இசை ஒலிக்கப்பட்டு பெண்கள் அமைப்புகளால் உருவாக்கப்பட்ட பாடல்கள் இசைக்கப்பட்டது.

மேலும் மன்னார் பிரதான நகர சுற்று வட்டத்தின் ஊடாக ஊர்வலமாக சென்று பெண்ணியம் சார்ந்து வரையப்பட்டிருந்த சுவர் ஓவியங்களைப் பார்வையிட்டனர்.

அத்துடன் பெண்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக ஒன்றிணைவோம், வன்முறைகளில் இருந்து விடுதலை பெற சமூகங்களுக்காக ஒன்றிணைவோம், முதலாளித்துவத்தின் நுகர்வுப் பண்பாட்டிலிருந்து விடுதலை பெறுவோம் என எழுச்சி கொள்வோம், பூமிக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வர எழுச்சி கொள்வோம், எனும் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் மாவட்ட இணைப்பாளர் மகாலட்சுமி குருசாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மன்னாரில் உள்ள பெண்கள் நலன் சார்ந்த அமைப்பின் தலைவிகளும் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய மகா சிவராத்திரி நிகழ்வு குறித்து அரச அதிபர் தலைமையில் விசே கலந்துரையாடல்



மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய மகா சிவராத்திரி நிகழ்வு குறித்து ஆராயும் விசேட கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை (14) மதியம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற உள்ள மகா சிவராத்திக்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து குறித்த கலந்துரையாடல் அமைந்தது.

குறித்த கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகம், அழைக்கப்பட்ட துரை சார் திணைக்கள அதிகாரிகள், கலந்து கொண்டனர்.

இதன் போது எதிர்வரும் 18 ஆம் திகதி இடம் பெற உள்ள மகா சிவராத்திரி குறித்தும் முன்னெடுக்கப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் பொலிஸ் மற்றும் ராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது அரச தனியார் போக்குவரத்துக்கள், குடிநீர், சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் ஆராயப்பட்டது.

மேலும் பாதுகாப்பு, உணவு உள்ளிட்ட விடையங்கள் குறித்து ஆராயப்பட்டதோடு, சகல ஒழுங்குகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த காலங்களை விட இம்முறை இலட்சக்கணக்கான மக்கள் நாடளாவிய ரீதியில் வருகை தருவார்கள் என எதிர் பார்க்கப்படுகிற மையினால் அதற்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

**- மன்னார் நிருபர்**






# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

கனடிய செய்திகள்
Canadian News

# Establish a five-year review of the federal health care plan

## ஒன்றாரியோ மாகாணத்திற்கு கனடிய மத்திய அரசு வழங்கும் சுகாதார சேவைகளுக்கான நிதி சார்ந்த ஐந்தாண்டு திட்டத்தை நிறுவுங்கள்

### கனடிய பிரதமருக்கு ஒன்றாரியோ முதல்வர் கடிதம் மூலம் வேண்டுகோள்



ஒன்ராறியோ மாகாணத்திற்கு கனடாவின் மத்திய அரசு வழங்கும் சுகாதா சேவைகளுக்கான நிதி தொடர்பாக அதன் நிலைத்தன்மையையும் உறுதியையும் நிரந்தரமான திட்டத்தின் கீழ் கொண்டுவர எமது அரசு விரும்புகின்றது, இது சுகாதார சேவை சார்ந்த பயன்பாடுகளை மேம்படுத்துவதில் எங்களின் தற்போதைய பணிக்கு பலமானதாக இருக்கும். இதன் மூலம் இப்போதும் எதிர்காலத்திலும் ஒன்றாரியோ வாழ் மக்களின் தேவைகளை எங்கள் சுகாதாரப் பாதுகாப்பு திட்டத்தின் வாயிலாக பூர்த்தி செய்ய முடியும் என்பதை உறுதிசெய்வதற்கு நாங்கள் விரைவில் ஒரு உடன்பாட்டுக்கு வருவோம் என்று நான் நம்புகிறேன். ஒன்ராறியோ மக்கள் உட்பட அனைத்து கனேடியர்களும் இதைஅவசியம் செய்து முடிக்க வேண்டும் என்று நம்புகிறார்கள்.

இவ்வாறு ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்கள் கனடிய பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கடிதத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

உறுதியை வழங்குவதற்கும் நீண்ட கால நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும், பின்வரும் மறுஆய்வு செயல்முறைகளை மூலம் மத்திய அரசு தனது திட்டத்தை திருத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே அமலில் உள்ள சுகாதார ஒப்பந்தங்களின் மதிப்பாய்வை நிறுவும் அதே வேளையில் கனடாவின் மத்திய அரசு வழங்கும் சுகாதா சேவைகளுக்கான நிதி தொடர்பான திட்டத்தின் ஐந்தாண்டு மதிப்பாய்வை உடனடியாக நிறுவவும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன் என்றும் எழுதியுள்ளார்.

மேற்படி கடிதத்தின் ஆங்கில மூலம் இங்கே காணப்படுகின்றது.

---

Ontario

Premier of Ontario
Premier ministre de l'Ontario

Legislative Building
Queen's Park
Toronto, Ontario
M7A 1A1

Édifice de l'Assemblée législative
Queen's Park
Toronto (Ontario)
M7A 1A1

February 15, 2023

The Right Honourable Justin Trudeau P.C., M.P.
Prime Minister of Canada
80 Wellington Street
Langevin Block
Ottawa, Ontario
K1A 0A2

Dear Prime Minister Trudeau:

As discussed at the working meeting of First Ministers in Ottawa, Ontario is looking to ensure sustainability and certainty in federal health care funding to support our ongoing work in improving health outcomes. I believe that we will swiftly come to an agreement to ensure that our health care system can meet the needs of Ontarians both now and into the future. All Canadians, including the people of Ontario, are counting on us to get this done.

To provide certainty and ensure long-term sustainability, I ask that the federal government amend its proposal by establishing the following review processes.

1. Establish a review of existing FPT bilateral health agreements

We recognize the importance of supporting necessary improvements to home and community care, mental health and substance use, and long-term care services, and as such agree to engage in a formal review process to assess results and determine next steps for existing bilateral healthcare agreements that will expire on March 31, 2027. This review will be conducted by a joint committee of health and finance officials from each level of government, completed by March 31, 2026.

2. Establish a five-year review of the federal health care plan

We recognize the importance of long-term sustainability for Provincial and Territorial health systems and as such agree to engage in a formal five-year review of the federal healthcare plan outlined on February 7, 2023.

This review would consist of an assessment of both the new tailored bilateral agreements and the CHT investments. The review will consider results achieved thus far in shared health priority areas of family health services, health workers and backlogs, mental health and substance use, and health system modernization, including an assessment of progress-to-date on public reporting to Canadians using common indicators, while always protecting the personal health information and privacy of all Canadians. This review will also consider other health data commitments, as well as current and forward looking FPT investments to support this plan. This review will be conducted by a joint committee of health, finance and intergovernmental officials from each level of government, commencing by March 31, 2027, and concluded by December 31, 2027.

I would like to thank you again, Prime Minister for your ongoing partnership.

Sincerely,

Doug Ford




இலங்கை செய்திகள் Sri Lanka News

# "13 வயதில் கையை வெட்டி தந்தை செல்வாவுக்கு இரத்தத் திலகமிட்டவர்கள் நாங்கள்" என்கிறார் தமிழரசுக் கட்சி வேட்பாளர் தட்சிணாமூர்த்தி

"ஈழத்து காந்தி" என அழைக்கப்படுகின்ற தந்தை செல்வா காரைதீவிற்கு வந்தபோது எனக்கு வயது 13. அன்று நானுட்பட பல இளைஞர்கள் கையை பிளேட்டால் வெட்டி அவருக்கு இரத்த திலகமிட்டவர்கள். அன்றிலிருந்து இன்று வரை நான் தமிழரசுக் கட்சியிலேயே தடம் புரளாமல் இருந்து வருகிறேன்.

இவ்வாறு, காரைதீவு பிரதேச சபைக்காக இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரும் முன்னாள் தவிசாளருமான கணபதிப்பிள்ளை தட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

அவர் காரைதீவில் உள்ள அம்பாறை ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்படி கருத்தை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், பொதுச் சேவையில் சிறுவயதில் இருந்தே என்னை இணைத்துக் கொண்டவன் நான். இம்முறை மூன்றாம் வட்டாரத்தில் போட்டியிடுகிறேன். கடந்த மூன்று தடவைகளில் இலங்கை தமிழரசுக்கட்சி காரைதீவில் ஆட்சி செய்து வந்தது.இம் முறையும் 4 வட்டாரங்களிலும் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்பதில் வேறுபட்ட கருத்துக்களில்லை.

அண்மையில் பசீல் ராஜபக்சே சொன்னார் நாம் வடக்கு கிழக்கில் படகிலும் வீணையிலும் வருகிறோம் என்று. இவர்கள் எதில் வந்தாலும் வடக்குகிழக்கு மக்கள் அவர்களை நிச்சயம் நிராகரிப்பார்கள்.

எமக்கு சவாலாக எந்த கட்சியும் இல்லை. அதற்காக ஏனைய கட்சிகளை தரக்குறைவாக கூறப்போவதும் இல்லை. எமது வெற்றி நிச்சயம்.

196 பேரை நிறுத்தலாம். சதி செய்யலாம்.இலவசங்கள் வழங்கலாம். போலிகள் வரலாம். போகலாம்.

ஆனால் காரைதீவுமக்கள் தெளிவானவர்கள். படித்தவர்கள். அவர்கள் ஏமாற மாட்டார்கள் தமிழ் தேசியத்தில் மதிப்பும் மரியாதையும் உள்ளவர்கள். அதற்கு கௌரவம் அளித்து மதிப்புடன் வாக்களிப்பவர்கள். எனவே வெற்றி நிச்சயம்.




"ஆட்சியமைக்க மேலும் ஆசனம் தேவைப்பட்டால் எந்த கட்சியுடன் இணைவீர்கள்?" என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது அவர் பின்வருமாறு பதிலளித்தார்.

எமது தலைவர் மாவை சேனாதிராஜா அண்மையில் கூறும் பொழுது நாம் தேர்தலுக்காக மட்டுமே பிரிந்து நிற்கின்றோம். பின்னர் இணைந்து ஆட்சி அமைப்போம் என்று. இது அண்ணன் தம்பி பிரச்சனை. இது சாதாரணமான பிரச்சனை. இது நிரந்தர பிரிவல்ல. அவர்கள் கடந்த இருபது ஆண்டுகளாக ஒன்றாக இருந்தவர்கள்.சகல விசயத்திலும் பங்கெடுத்தவர்கள். எனவே சந்தர்ப்பம் வரும்போது நாங்கள் குத்துவிளக்குடன் இணைந்தேதான் ஆட்சி அமைப்போம். இது தலைமைப்பீடத்தின் முடிவு. எனது முடிவும் அதுதான்.

# தோல்வியடையலாம் என்ற அச்சத்தில் ரணில் – மகிந்த அரசாங்கம், தேர்தலை இரத்து செய்ய முயற்சி



தோல்வி அச்சத்தில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கான பல்வேறு சூழ்ச்சிகளை ரணில் - ராஜபக்ச அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக இலங்கையின் பிரபல தொழிற்சங்கம் ஒன்று குற்றஞ்சாட்டியுள்ளது.

தேர்தலை நடத்தாமல் மக்களின் ஜனநாயக உரிமையான வாக்குரிமையை இல்லாது செய்வதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

வாக்குச் சீட்டுகளை அச்சிட முடியாது என இலங்கை அச்சகம் அறிவித்துள்ள விடயமானது சூழ்ச்சியின் ஒரு அங்கமென அந்த சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

"அரச அச்சகத் தலைவரின் ஊடாக இந்த சூழ்ச்சி இடம்பெறுகிறது. வரலாற்றில் ஒரு நாளும் பணம் இல்லையென இவை இடம்பெறவில்லை. பணம் இல்லையென்றே இந்த நாடகம் நடக்கிறது."

இலங்கை மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வினை வழங்காத தற்போதைய அரசாங்கம் வாக்குரிமையையும் இல்லாது செய்வதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதாகவும் எனினும் அதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவது இல்லை எனவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவித்துள்ளார்.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

# முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு எல்லை நிர்ணயக் குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய விஜயம்

- ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்



உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டார எல்லை நிர்ணயத்திற்கான தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய வியாழக்கிழமை (16.02.2023) அன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றினை மேற்கொண்டார்.

இந்த கண்காணிப்பு விஜயத்தின் போது முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு.க. விமலநாதன் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர் தேவராசா ஹென்ஸ்மன், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஜசிந்தன், மாவட்ட புள்ளிவிபரவியலாளர் இ.இராஜசூரி முதலானோருடன் உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# திருமண வீட்டில் குழப்பம்! நால்வர் வெட்டிப்படுகொலை



குருநாகலில் மது போதையில் இரண்டு தரப்பினருக்கிடையே இடம்பெற்ற மோதலில் நால்வர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவத்தில் 22, 25, 35, 41 வயதுடைய நால்வர் உயிரிழந்துள்ளதுடன், மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களில் 25 வயதுடைய இளைஞர் கடந்த 6 நாட்களுக்கு முன்னர் திருமணம் செய்தார் எனவும், அவரின் வீட்டிலேயே நண்பர்கள் நேற்றிரவு ஒன்றுகூடி மதுபானம் அருந்தியுள்ளனர் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன்போது முன்பகை காரணமாக இரு தரப்பினருக்கிடையே வாய்த்தர்க்கமாக ஆரம்பித்த மோதல், இறுதியில் வாள்வெட்டில் முடிந்துள்ளது.

இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த மூவரும் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும் சம்பவம் தொடர்பாக 8 பேர் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போதை மாத்திரைகளுடன் பதுளை வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் கைது

145 போதை மாத்திரைகளை வைத்திருந்த பதுளை வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர் செவ்வாய்கிழமை (14) இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வைத்தியர் பதுளை மைலகஸ்தன்னவில் உள்ள தனது தனியார் வைத்திய நிலையத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் யுவதிகளுக்கு போதைப்பொருள் விற்பனை செய்வதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேகநபரின் காரும் போதைப்பொருளும் பதுளை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகத்திற்குரிய வைத்தியர் புதன்கிழமை (15) பதுளை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.







உதயனின் பிரத்தியேகச் செய்தி

# விநாயகர் விமர்சனம்
# ஐயோ 13........அலறும் பௌத்தம்

## (கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத்தொடர் - பகுதி 4)

**- கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி**



**மே**ற்கத்திய கலாசாரத்தின் நம்பிக்கைகளில் 13 என்னும் இலக்கம் துரதிருஷ்டம் வாய்ந்த எண்ணாக வர்ணிக்கப்படுகிறது. எனவே தான் 13ஆம் இலக்க விமான இருக்கை 13ஆம் இலக்க ஹோட்டல் அறை போன்றவற்றை அங்கு காண முடிவதில்லை. அந்த 13 இலங்கையிலும் துரதிருஷ்டம் பிடித்ததாக மாறியிருக்கிறது கடந்த சில வரங்களாக 46 வருடங்கள் அரதப்பழசான அரசியலமைப்புச் சீர்திருத்தமும் அதன் விளைவாக உருவாகிய மாகாண சபைகளும் அவற்றுக்குரிய அதிகாரப் பகிர்வும் பற்றிய வாய்ச்சண்டைகள் பூஞ்சணம் பிடித்த பழங்கஞ்சியைக் கொதிக்க வைத்து மணந்து பார்க்க வைத்திருக்கிறது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் வந்து சென்றார், ரணில் 13ஐ முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்றார். உடனே ஐயோ 13 என்ற ஒப்பாரி. வீரவன்ச, கம்மன்பில, வீரசேகர, பொன்சேகா, சிரிசேன, சாந்தபண்டார என்று வரிசையாக வரிந்து கட்டிக்கொண்டு வந்து நிற்கிறார்கள். நான்கு பீடங்களையும் சேர்ந்த பிக்குகள் பாராளுமன்ற வீதிக்கு அருகில் வீரவசனம் பேசி ஆர்ப்பாட்டம் செய்து 13ஐ கொளுத்துகிறார்கள். பிக்குகளைத் தவிர வேறெந்த மதத்தலைவர்களாவது இதைச் செய்திருந்தால் பிக்குகளை சும்மா விட்டிருப்பார்களா? அரசியலமைப்பை அவமதித்தற்காக வழக்குப் போட்டு குடியுரிமையைப் பறித்து கம்பி எண்ணிக்கொண்டிருக்க மாட்டார்களா?



பிக்குகளை பகைத்துக் கொண்டு எதையும் செய்ய முடியாது என்கிறார் மைத்திரிபால சிரிசேன. இவர்தான் 2015இல் அரசியலமைப்பின் 19ஆம் திருத்தத்தின் கீழ் தேசிய நல்லிணக்க அமைச்சு என்ற ஒன்றை உருவாக்கி இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணப் போவதாகச் சொன்னவர். அப்போதும் கூட 13உம் இருந்தது மாகாண சபைகளும் இருந்தன. ஆனால் 13 உருவாக்கிய மாகாண சபைகளின் அதிகாரங்கள் பற்றியோ நீதிமன்றத்தீர்ப்புகள் பற்றியோ தெளிவான நிலைப்பாடுகள் இல்லாம வெறும் புகை மண்டலமாகத் தெளிவில்லாமல் காட்சியளிக்கிறது.

1965 ஆம் ஆண்டு ஏ பி நாகராஜன் இயக்கத்தில் கே வி மகாதேவன் இசையில் சிவாஜி கணேசன் உள்ளிட்ட மிகப் பெரிய நட்சத்திரப் பட்டாளத்தை வைத்து எடுக்கப்பட்ட வண்ணப்படம் திருவிளையாடல். இதில் சிவபெருமான் (சிவாஜியும்) தருமி (நாகேஷும்) நக்கீரன் (ஏ பி நாகராஜனும்) தோன்றி-தருமிக்கு பொற்கிழியளிக்கும் நகைச்சுவைக்காட்சிப் பகுதியை மறக்கவே முடியாது. இக்காட்சியில் நாகேஷின் உடல் மொழியைப்பார்த்து அசந்து போய்விட்டதாக சிவாஜி குறிப்பிட்டிருந்தார். இதில் பாட்டில் குறையிருப்பதாக நக்கீரர் கூறவே சிவபெருமான்-அறிந்தது-அறியாதது, புரிந்தது புரியாதது, தெரிந்நது தெரியாதது அனைத்தும் யாம் அறிவோம் அது பற்றி உமது அறிவுரை தேவையில்லை எல்லாம் எமக்குத் தெரியும் என்று கர்ஜிப்பார். நக்கீரரோ ஏல்லாம் தெரிந்துவிட்டால் எழுதும் பாட்டில் குறையிருக்காது என்று அர்த்தமா? அதுபற்றி நான் குறை கூறக்கூடாதா என்று எதிர்வாதம் செய்வார்.

அதுபோல 13ஐப்பற்றி எல்லாம் தெரிந்தது போல இனவாதிகளும் அவர்களது கைக்கூலிகளும் வெளியே குரைத்துக் கொண்டு திரிந்தபோதிலும் உண்மையில் அவர்களுக்கு அதைப்பற்றி ஒன்றுமே தெரியாது. இனவாதத்தில் மூழ்கிப்போயுள்ள அரசியல் வாதிகளுக்கு 13ஆம் திருத்ததினால் நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் இறைமைக்கும் எதுவித அச்சுறுத்தலும் இல்லை என்பது நன்றாகத் தெரிந்திருந்தும் அதை தமது அரசியல் இலாபங்களுக்குப் பயன்படுத்தும் மலினப்பட்ட தந்திரத்தைக் கையாள்கிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

13ஆம் திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாணசபைகளுக்கு வழங்கப்படவிருந்த காணி அதிகாரங்களை நீதிமன்ற தீர்பொன்றின் மூலம் நீக்கி விட்டதாகவும் ஆகவே இல்லாத காணி அதிகாரத்தை ரணில் தமிழர்களுக்கு எவ்வாறு வழங்கமுடியும் என்று கேள்வி எழுப்புகிறார் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைப் போராசியர் நண்பர் சர்வேஸ்வரன். அவரது கூற்றுப்படி கைக்காசு கொடுத்து வாங்கியுள்ள தனியார் காணிகள் தொடர்பிலேயே மாகாண சபைகளுக்கு இப்போது அதிகாரம் உள்ளது. அரசகாணிப்பயன்பாடு தொடர்பில் அதிகாரம் இல்லை. மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்க முடியாது என்று ஏற்கெனவே அவர்கள் அறிவித்து விட்டார்கள். இணைந்திருந்த வடக்குக் கிழக்கையும் நீதிமன்ற தீர்ப்பின் மூலம் பிரித்து விட்டார்கள். அது மட்டுமன்றி மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை மத்திய அரசாங்கம் மீளப்பெறமுடியாது என்று எந்தத் தடைகளும் இல்லை. மாகாண சபைகளின் கழுத்தை நெறிக்க மத்திய அரசு கடும்போக்காளர்களை ஆளுநர்களாக நியமித்து கட்டுப்படுத்தவும் முயற்சிக்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாக மாகாண சபைகளுக்கு தேவையான நிதியை மத்திய அரசே வழங்கவேண்டும். வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக மாகாணங்களுக்கு உரிய நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டாலும் அந்த நிதி உடனடியாகவே மாகாணங்களுக்கு வழங்கப்படுவதில்லை. கட்டங்கட்டமாகவே வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்படும் நிதியை வேண்டுமென்றே காலம் தாழ்த்துவதன் மூலம் மாகாணசபைகளின் செயற்பாடுகளை முடக்க முடியும். உதாரணமாக-வழங்கப்படவேண்டிய நிதியை கடைசிக்காலாண்டில் திறைசேரி மாகாண சபைக்கு வழங்குமாயின் அவற்றால் தமது செயற்திட்டங்களை மூன்று மாதங்களுக்குள் முடிக்க முடியாததால் வருட இறுதியில் நிதி மீண்டும் திறைசேரிக்கே திரும்பி வந்துவிடும். நிதி எப்போது கிடைக்கும் என்று சரியாகத் தெரியாதபடியினால் மாகாண சபைகளால் திட்டங்களை உருவாக்கி உரிய வேளையில் நடைமுறைப்படுத்த முடியாது. காலதாமதம் ஆவதால் திட்டச் செலவினங்கள் அதிகரிக்கும்.



அத்துடன் வருட இறுதியில் நிதியைக் காலந்தாழ்த்தி வழங்குவதால் அவற்றை செலவிடமுடியாமல் அடுத்தவருட ஆரம்பத்தில் திறைசேரிக்கு அனுப்பும் போது மாகாண சபைகள் வழங்கப்பட்ட நிதியில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளாமல் திருப்பி அனுப்பிவிட்டன என்று குற்றம் சாட்டவும் முடியும். ஆகவே இப்போதைய நிலையில் 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்தினாலும் சிறுபான்மையினரின் வாழ்வில் தேனும் பாலும் பெருக்கெடுத்து ஓடப்போவதில்லை. பெரும்பான்மைச் சிங்கள மக்களின் சோற்றுப்பானையிலிருந்தோ கொல்லைப்புறத்திலிருந்தோ எதுவும் பறிபோகப் போவதுமில்லை. நாடு பிரியப் போவதுமில்லை. பல் பிடுங்குப்பட்ட இந்த 13 வது திருத்தத்தை முழுமையாக அமல்செய்யுமாறு வலியுறுத்தும் இந்தியாவுக்கு இந்த விவகாரங்கள் எதுவும் தெரியாது என்று யாரும் நம்பினால் அந்த முட்டாள்தனத்திற்கு நாம் பொறுப்பல்ல.

அவ்வாறாயின் ஏன் இந்தியா 13ஐ அமல்படுத்தக் கோருகிறது? இலங்கை இப்போதுள்ள வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டுவருவதற்கு நீறுபூத்த நெருப்பாக உள்ள இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு வேண்டுமென்று சர்வதேச சமூகம் விரும்புகிறது. யுத்த முடிவின் பின்னரான கடந்த 13 வருடங்களில் காத்திரமானவகையில் இனப்பிரச்சினைக்குரிய தீர்வு தொடர்பில் நம்பிக்கை தரவல்ல எவ்வித நடவடிக்கையையும் இலங்கை எடுத்ததாகத் தெரியவில்லை. எனவே சர்வதேச மட்டத்தில் எதிர்காலத்தில் இலங்கை கடும் நெருக்குவாரங்களைச் சந்திக்க வேண்டி நேரிடலாம். இந்தியா விரும்பாத எதையாவது இலங்கைமீது சர்வதேச சமூகம் திணிக்கவும் கூடும். இரண்டாம் உலகப்போரின் போது யுத்தக்குற்றங்கள் செய்தோரும் ஹிட்லருக்கு ஆதரவாக செயற்பட்டவர்களும் இன்னமும் கண்டுபிடிக்கப்பட்டு தள்ளாத வயதிலும் தண்டிக்கப்படுவதைக் காண்கிறோம். அண்மையில் கனடா இலங்கை அரசியல்வாதிகளுக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் விதித்த பயணத்தடைகளை இதன் ஒரு ஆரம்பக்கட்டமாகக் கூடக்கருதப்படலாம். குறைந்த பட்சம் பிராந்திய வல்லரசான இந்தியா தனது முயற்சியினால் உருவான 13வது திருத்தத்தையும் மாகாண சபைகளையும் முழுமையாக அமல்படுத்துவதன் மூலம் இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தை நேர்க்கணியமாக அணுகுகிறது என்று சர்வதேசத்தை நம்பச் செய்யவைத்து இலங்கையைக் காப்பாற்றும் ஒரு முயற்சியாகக் கூட இது இருக்கலாம்.

என்னதான் உதவிகளைச் செய்தாலும் 4 பில்லியன் டொலருக்கும் கூடுதலான கடனை உடுக்கை இழந்தவன் கைபோல இடுக்கண் களைய உரிய காலத்தில் இலங்கைக்கு வழங்கிய போதிலும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கேற்ப இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்குரிய உறுதிமொழியை முதன் முதலாக வழங்கி உதவி செய்தபோதிலும் இலங்கையின் பேரினவாதம் இந்தியாவை எதிரியாகவே என்றும் நோக்கும். இதனால் இந்தியாவின் இலங்கை தொடர்பான நகர்வுகளை அதன் சுயநலமாக மட்டுமே காணும் ஒவ்வாமை நோய் இலங்கையின் பெரும்பான்மை மக்கள் மத்தியில் உள்ளது. ஆகவே ஒன்றுமே இல்லாத 13 நாட்டை பிளவுபடச் செய்யும் என்றும் வடக்கும் கிழக்கும் இந்தியாவுடன் இணைக்கப்பட்டு நாடு பிரிந்துவிடும் என்று தங்களுடைய கற்பனைக்குதிரைகளைக் கண்டபடி தட்டிவிட்டு போர்க்கொடி தூக்குகிறார்கள். அது போதாதென்று மெத்தப்படித்த தமிழ் அரசியல்வாதி ஒருவர் 13ஐ மட்டுமல்ல சமஷ்டியையும் பெற்றுவிட்டுத்தான் மறுவேலை பார்ப்போம் என்று எரிகிற நெருப்பில் பெற்றோல் ஊற்றிக் கொளுத்துகிறார்.



அதை எங்கிருந்து யார்மூலம் பெறப்போகிறார் என்பதைப்பற்றியெல்லாம் திருப்பி கேள்வி கேட்காத முட்டாள் சனம் நாடு பிரிக்கப்படும் என்று நம்பத் தொடங்கியிருக்கிறது.

**(தொடர்ச்சி 16 பக்கம்)**

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# மனோ சாட்சி -- மனம் திறக்கிறார் மனோ கணேசன்

(கனடா உதயனிற்கான பிரத்தியேகத் தொடர் - அத்தியாயம்-4)

## "ரணிலின் சமாதானமும், சந்திரிகாவின் சமாதானமும்"



- "ரணிலை ஒழுங்காக சமாதான நடவடிக்கையை முன்னெடுக்க விட்டிருந்தால் சமாதானம் வந்திருக்கும் அல்லது போரழிவு இல்லாமல் புலிகள் அழிந்திருப்பார்கள்" என்று சுனேத்ரா பண்டாரநாயக்க, தன் சகோதரி சந்திரிகாவை திட்டினார்.
- "நான் சமாதானத்தை கொண்டு வர 2000ம் வருடத்தில் தீர்வு பொதி கொண்டு வந்த போது, ரணில் பாராளுமன்றத்தில் யூஎன்பி எம்பிக்களை வைத்து சட்டமூலத்தை தீவைத்து கொளுத்தினாரே?" என்று சந்திரிக்கா பண்டாரநாயக்க, பதிலுக்கு கூறினார்.
- "ரணிலும், நீயும், ஒன்றுதான். நீங்கள் கொண்டு வந்தால்தான் சமாதானம். வேறு எவரும் சமாதானத்தை கொண்டு வந்து பெயர் வாங்கி விடக்கூடாது என ஒருவருக்கொருவர் சண்டை போட்டு, பொறாமை பட்டு, ராஜபக்சவை கொண்டு வந்து விட்டீர்கள்" என்றார், சுனேத்ரா.
- யோசித்து பார்த்தால், இவற்றில் தப்பு கணக்குகளை போட்டு, தம் எதிராளியை குறைத்து மதிப்பிட்டு, ஏமாந்தவர்கள், சந்திரிகா, ரணில், பிரபாகரன் ஆகிய மூவருமே!

2003 ஆண்டில் பிரதமர் ரணிலின், ஆட்சியை பலவீனப்படுத்த ஜனாதிபதி சந்திரிகா, அரசாங்கத்தின் முக்கிய அமைச்சுகள் சிலவற்றை பறித்து எடுத்தார். அப்போது பிரதமர் ரணில் அமெரிக்கா போயிருந்தார். அவ்வேளையில் கொழும்பு அரசியல் சூடாக இருந்தது. ரணில் தலைமையிலான எமது அரசின் முக்கியமான அமைச்சுக்களை சந்திரிகா அடாத்தாக பறித்துக்கொண்டதனால் நாட்டில் ஸ்திரமற்ற நிலைமை ஏற்பட்டிருந்தது.

விமல் வீரவன்ச தலைமையில் ஜேவீபி சமாதானத்திற்கு எதிரான கடும் யுத்த பிரச்சாரத்தை முன்னெடுத்தது. சந்திரிகாவின் கட்சிக்குள்ளேயே இருந்த மஹிந்த ராஜபக்ச, சந்திரிகாவை வீழ்த்தி தான் ஆட்சிக்கு வர வேண்டும் என்று, இரகசியமாக ஜேவீபியுடன் கூட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தார்.



இவர்களின் இந்த கயிற்றை சாப்பிட்டுதான் சந்திரிகா ரணில் ஆட்சியின் மூன்று முக்கிய அமைச்சுக்களை பிடுங்கினார். இதன் தொடர்ச்சியாக தான் இன்னும் சில மாதங்களுக்கு பிறகு தனது ஜனாதிபதி அதிகாரத்தை பயன்படுத்தி பாராளுமன்றத்தை கலைத்தார்.

பின்னாட்களில் பலமுறை என்னை சந்தித்த பொழுது, கடைசியாக கடந்த வருடம் கூட, தான் அந்நேரத்திலே விமல் வீரவன்சவின் கயிற்றை சாப்பிட்டு முட்டாள்தனமாக ரணிலின் ஆட்சியைக் கவிழ்த்து தவறு செய்து விட்டதாக சந்திரிகா ஒப்புக்கொண்டார். இல்லாவிட்டால் அடுத்து வரும் தேர்தல்களில் மகிந்த ஆட்சிக்கு வரும் சூழல் நாட்டிலே உருவாகி இருக்காது என்றும் சொன்னார்.

அதைவிட சுவாரசியம் என்னவென்றால் சந்திரிகாவின் சகோதரி சுனேத்ரா பண்டாரநாயக்க ஒரு முறை எனக்கு முன்னாலேயே ஒரு பகிரங்க இடத்தில் இந்த காரணத்தை சொல்லி சந்திரிகாவை திட்டி தீர்த்தார். அப்போது ராஜபக்சவின் ஆட்சிக் காலம். இது நடந்தது அமெரிக்க தூதரகத்தின் ஒரு இரவு விருந்தின் போதாகும்.

அப்போது ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சி நடக்கிறது. நானும், சந்திரிகாவும், சுனேத்ராவும், பாக்கியசோதி சரவணமுத்துவும் உரையாடிக்கொண்டு இருந்தோம். சந்திரிகா தான் ஜனாதிபதியாக இருந்த பொழுது செய்த காரியங்களை பெரும் எடுப்பில் எங்களுக்கு எடுத்துக்கூறிக்கொண்டு இருந்தார். அந்த இடத்தில் எங்களுடன் அமைதியாக இருந்த சுனேத்ரா ஒரு கட்டத்தில் பொறுமை இழந்தார்.

"சும்மா இரு. நீதான் இன்றைய கொடுங்கோல் ஆட்சிக்கு காரணம். ரணிலை ஒழுங்காக சமாதான நடவடிக்கையை முன்னெடுக்க விட்டிருந்தால் இந்நேரம் நாட்டில் சமாதானம் வந்திருக்கும். அல்லது பெரும் போரழிவு இல்லாமலே, புலிகள் இல்லாமல் போயிருப்பார்கள். எப்படியும் மஹிந்த வந்திருக்க மாட்டார். அந்த முட்டாள் விமலின் கயிற்றை சாப்பிட்டு முட்டாள் தனமாக நாட்டை அழித்தவர் இவர்தான்." என்று சந்திரிகாவை சுட்டிக்காட்டி உரக்க கோபமாக சொன்னார்.

அதுவரை சத்தமாக சிரித்து பேசிக்கொண்டிருந்த சந்திரிகாவின் முகத்தில் அசடு வழிந்தது.

"நான் சமாதானத்தை கொண்டு வர 2000ம் வருடத்தில் தீர்வு பொதி கொண்டு வந்த போது, ரணில் பாராளுமன்றத்தில் யூஎன்பி எம்பிக்களை வைத்து சட்டமூலத்தை தீவைத்து கொளுத்தினாரே? மறந்து விட்டதா?" என்று திருப்பி கேட்டு விட்டு சந்திரிக்கா அதன்பிறகு கப்சிப் ஆகிவிட்டார்.

"ரணிலும், நீயும், ஒன்றுதான். நீங்கள் கொண்டு வந்தால்தான் சமாதானம். வேறு எவரும் சமாதானத்தை கொண்டு வந்து பெயர் வாங்கி விடக்கூடாது என ஒருவருக்கொருவர் சண்டை போட்டு, பொறாமை பட்டு, இன்று ராஜபக்சவை கொண்டு வந்து விட்டீர்கள்" என தொடர்ந்து ஆங்கிலத்தில் சுனேத்ரா திட்டிக்கொண்டு இருந்தார்.



பக்கத்தில் இருந்த பாக்கியசோதி சிரித்தபடி என்னை பார்த்தார். நான் அவரை பார்த்தேன். என்னைவிட பாக்கியசோதி சந்திரிகாவிற்கும், சுனேத்ராவிற்கும் நெருக்கமானவர். சுனேத்ராவின் கூற்றை ஆமோதிப்பதாக தான் பாக்கியசோதியின் முகபாவனை இருந்தது.

ரணிலை தோற்கடிக்க, வடகிழக்கிலே பகிஸ்கரிப்பை நடத்தி மஹிந்த ராஜபக்சவை வெற்றிபெற செய்தது பிரபாகரன். இது ஒன்று தான் ரணில் தோற்க அல்லது மஹிந்த வெற்றிபெற காரணம் என நினைத்துக்கொண்டு இருந்தேன்.

ஆஹா.., இதற்கு இன்னொரு "சந்திரிகா டைமென்'ன்" இருக்கின்றதை கவனிக்கவில்லையே என்று நான் சிரித்தபடி நினைத்துக்கொண்டேன்..

அதே வேளை சுனேத்ராவின் கூற்றிலே ஒரு விஷயம் எனக்கு புரிந்தது. "ரணிலை ஒழுங்காக சமாதான நடவடிக்கையை முன்னெடுக்க விட்டிருந்தால் சமாதானம் வந்திருக்கும் அல்லது போரழிவு இல்லாமல் புலிகள் அழிந்திருப்பார்கள்" என்று அவர் சொன்னது ஞாபகம் வந்தது.

அன்று, புலிகள் ரணிலை தோற்கடிப்பதற்கு கூறிய ஒரு காரணத்துடன் இது ஒத்துப்போகிறது. சர்வதேச வலையொன்றை பின்னி, சமாதான பொறியொன்றை வைத்து தங்களை ரணில் அழிக்க போகின்றார், என புலிகள் சொன்னார்கள். ஆகவேதான் ரணிலுக்கு எதிரான பகிஸ்கரிப்பு. அது புலிகளின் அன்றைய தர்க்கம்.

மீண்டும் விட்ட இடத்தில் இருந்து வருகிறேன்.

ரணிலின் அமைச்சுக்களை சந்திரிக்கா பறித்த சூடான சூழ்நிலையில் தான் ரணில் நாடு திரும்பினார். வழமையாக கட்டுநாயக்கவில் இருந்து கொழும்பிற்கு அதிவேக சாலை இல்லாத அந்த நேரத்தில் கூட அரை மணித்தியால நேரத்தில் வந்துவிடலாம். ஆனால் அன்று விமான நிலையத்தில் இருந்து அலரி மாளிகைக்கு வருவதற்கு ரணிலுக்கு எட்டு மணித்தியாலம் ஆனது.

வழியெங்கும் ஐக்கிய தேசிய முன்னணி ஆதரவாளர்கள், கூட்டம் கூட்டமாக ரணிலை வரவேற்றார்கள். நமது திட்டம் அப்படியே கூட்டமாக சென்று சந்திரிகாவின் வாசஸ்தலத்தை சுற்றிவளைத்து, அவர் பிடுங்கிய அமைச்சுக்களை மீண்டும் பெறுவதாகும்.

ஆனால் ரணில் அதை விரும்பவில்லை. பேசாமல் அலரி மாளிகைக்கு போய் இறங்கி, எங்களை பார்த்து கும்பிடு போட்டுவிட்டு, "வீட்டுக்கு போங்கள்" என்று சொல்லிவிட்டு ஓய்வெடுக்க போய்விட்டார்.

இது ரணிலின் ஜனநாயக கொள்கை என்று சிலர் வர்ணிப்பார்கள். ஆனால் என்னை பொறுத்தவரை இது ரணிலின் கோழைத்தனம் என நினைக்கின்றேன். ஜனநாயகம் என்றால் வெறும் பாராளுமன்ற ஜனநாயகம் மட்டும் அல்ல. ஜனநாயக விரோதமான முறையிலே ஒரு அரசாங்கத்தின் அமைச்சுக்களை அடாத்தாக பிடுங்கி எடுத்த ஜனாதிபதிக்கெதிராக மக்களை அணிதிரட்டி சென்று போராடுவதும் ஜனநாயகம் தான். இந்த தெருப்போராட்டம் ரணிலுக்கு எப்போதும் ஒத்துவரவில்லை.

பின்னாளில் வேறு சில விமர்சகர்கள் சொன்னது போல, அன்று இருந்த மக்கள் எழுச்சியை பயன்படுத்தி சந்திரிகாவை சுற்றி வளைத்திருந்தால், ரணில் தனது ஆட்சியை ஸ்தீரப்படுத்தி இருக்கலாம். சந்திரிகாவையும் திருத்தி எடுத்திருக்கலாம். அந்த சந்தர்ப்பத்தை ரணில் தவறவிட்டு விட்டார்.

"2000ம் வருடத்தில், நீலன் திருச்செல்வம் துணையுடன், தான் கொண்டு வந்த தீர்வு திட்ட காகிதங்களை, பாராளுமன்றத்தில் தீவைத்து எரித்து தமது எதிர்ப்பை ரணில் காட்டினார். அன்றைய அந்த சமாதான திட்டம் நிறைவேறி இருந்தால், நான் நோபல் பரிசு பெருமளவிற்கு உயர்ந்திருப்பேன். அப்படியானால், அடுத்து வரும் தேர்தலில் யூஎன்பி வேட்பாளராக தன்னால் வெல்ல முடியாது என்று ரணில் நினைத்தார். ஆகவேதான் தனது சமாதான திட்டத்தை ரணில் எதிர்த்தார்" என சந்திரிக்கா பலமுறை என்னிடம் புலம்பி உள்ளார்.

சந்திரிகாவின் 2000ம் வருட சமாதான திட்டத்தை அன்று புலிகளும் எதிர்த்தார்கள். அதனால் சபையில் சம்பந்தனும் எதிர்த்தார் அல்லது ஆதரவளிக்கவில்லை. சிங்கள தீவிரவாதிகளும் எதிர்த்தார்கள். எதிர்கட்சி அரசியல் செய்து ரணிலும் எரித்து எதிர்த்தார்.

ஆனாலும் சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த பொழுது, ரணில் 2000ம் ஆண்டிலே தனது தீர்வு பொதியை எதிர்த்தார் என்பதையும் மறந்துவிட்டு, பிரதமர் ரணிலுடன் ஒத்து போகவே விரும்பியிருந்தார். ஆனால் ரணிலின் அமைச்சரவையில் இருந்த இரண்டு அமைச்சர்கள் சந்திரிகாவுடன் தொடர்ந்து முரண்பட்டுக்கொண்டே இருந்தனர். ஒருவர் ரவி கருணாநாயக்க. மற்றவர் ராஜித சேனாரத்ன.

ஜனாதிபதி சந்திரிகா அமைச்சரவை கூட்டங்களுக்கு வரும் பொழுது தனது கைப்பையிலே ஒலிப்பதிவு கருவியை கொண்டுவந்து அமைச்சரவை நடவடிக்கைகளை ஒலிப்பதிவு செய்கிறார் என ரவி கருணாநாயக்க சந்திரிகா மீது குற்றம் சாட்டியிருந்தார்.

ரவிக்கும், சந்திரிகாவுக்கும், ஸ்ரீமணி அத்துலத்முதலி தொடர்பில் பழைய கோபம் ஒன்று இருந்தது. யூஎன்பிக்கு வரமுன் ரவி அத்துலத்முதலியின் கட்சியிலேயே இருந்தார்.

சந்திரிகாவுக்கும், ரணிலுக்கும் இப்படி முரண்பாடு முற்ற அதை பயன்படுத்தி விமல் வீரவன்ச சந்திரிகாவை தன்வசப்படுத்திக்கொண்டார்.

ஆகவே சந்திரிகாவின் சமாதான திட்டத்தை, அன்று 2000ம் ஆண்டு ரணில் தீவைத்து ஒழித்தார். பிறகு, ரணிலின் சமாதான திட்டத்தை, 2004ம் ஆண்டில் ரணில் ஆட்சியை கலைத்து, 2005ம் ஆண்டு முதன்முதலில் மஹிந்த ஜனாதிபதியாகும் வரை கொண்டு வந்து விட்டு, சந்திரிகா ஒழித்தார். இரண்டு ஒழிப்பிலும் புலிகளுக்கு பெரும் பங்கு இருக்கின்றது.

கடைசியில் எல்லோருமாகச் சேர்ந்து பெரும் சிங்கள பௌத்த தேசியவாத அரசாங்கத்தை ராஜபக்சர்கள் தலைமையில் கொழும்பில் உருவாக்கிவிட்டனர். யோசித்து பார்த்தால், இவற்றில் தப்பு கணக்குகளைப் போட்டு, தம் எதிராளியைக் குறைத்து மதிப்பிட்டு, ஏமாந்தவர்கள், சந்திரிகா, ரணில், பிரபாகரன் ஆகிய மூவருமே!



எல்லோரையும் முட்டாளாக்கி, காய் நகர்த்தி வெற்றி பெற்றவர் யார்? மஹிந்த ராஜபக்சதான்..!

கடைசியில் வரலாறு இன்று மஹிந்த ராஜபக்சவை தோற்கடித்து உள்ளது. ஆனால், அதற்கு கொடுக்கப்பட்ட விலை அளப்பரியது.

# யாழில் சுதந்திர தின நிகழ்விற்கு எதிரான போராட்டத்திற்கு நீதிமன்றம் தடை

- எமது யாழ் செய்தியாளர்




யாழ்ப்பாணம் மாநகரில் சனிக்கிழமை (11) அன்று சுதந்திர தின விழாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போராட்டத்துக்கு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் தடை கட்டளை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி முன்வைத்த விண்ணப்பத்துக்கு ஏற்ப நீதிமன்றம் இந்த தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் நடைபெறும் சுதந்திர தின விழாவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பங்கேற்கிறார். இந்த நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்திருந்தது.

இந்த நிலையில் இந்த போராட்டத்துக்கு தடை உத்தரவு கோரி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி க.சுகாஷ் உள்ளிட்ட எட்டு பேருக்கு எதிராக இந்த தடை உத்தரவு கோரப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதிவான் பொலிஸாரின் விண்ணப்பத்தை முகத்தோற்றளவில் ஏற்று தடை கட்டளையை வழங்கினார்.

# “பிக்குகள் விரும்பாததை செயற்படுத்த முடியாது – தமிழர்கள் இறங்கிவர வேண்டும்” - மைத்திரிபால சிறிசேன

- எமது யாழ் செய்தியாளர்



இலங்கையில் மகாசங்கத்தினர் எதிர்ப்பதை நடைமுறைபடுத்த முடியாது, எனவே தமிழ்த் தலைவர்களே இறங்கிவர வேண்டும் என்று நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் வாக்கு ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்டு நாட்டின் அனைத்து மக்களிற்குமான ஜனாதிபதியாக இருந்த ஒருவரின் இப்படியான கருத்து தமிழ்ச் சமூகத்திடம் கடும் அதிருப்தி மற்றும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

“இலங்கை பௌத்த நாடு. மகாசங்கத்தினருடன் மோத முடியாது. பௌத்த பிக்குகள் மற்றும் சிங்கள சக்திகள் எதிர்க்கும் விடயத்தை செய்யவும் முடியாது. எனவே, வடக்கு அரசியல் தலைவர்கள் சமஷ்டியில் தொங்கிக்கொண்டிருக்காது நடுநிலைபோக்குக்கு இறங்கிவர வேண்டும்” என்று திருவாய் மலர்ந்துள்ளார் மைத்ரிபால சிறிசேன.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மைத்திரிபால சிறிசேன இவ்வாறு கூறினார்.

நாட்டின் அரசியல் சாசனத்தில் உள்வாங்கப்பட்டுள்ள 13ஆவது திருத்த சட்டத்தின்படி அதிகாரப் பகிர்வை அளிக்க இயலாது என்பதே அவரது உரையின் மையமாக இருந்தது. நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாணக்கியன் ராஜபுத்திரன் தெரிவித்த கருத்துக்களிற்கு பதிலளிக்கும் வகையிலேயே அவரது கருத்து இருந்தது.

“எனக்கு முன்னர் உரையாற்றிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சமஷ்டி வேண்டும் எனக் கூறினார். அவரின் இந்த அறிவிப்பு சிங்கள மக்களையும், பௌத்த தேரர்களையும் கொதிப்படைய வைக்கக் கூடியது. அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அப்போதைய சூழ்நிலைக்கு மத்தியில் ஜே.ஆர். ஜயவர்தன கொண்டுவந்திருந்தாலும் அதன் பின்னர் அவரோ அல்லது நான் உட்பட ஜனாதிபதி பதவிகளை வகித்தவர்களோ அதில் கைவைக்கவில்லை. ஏனெனில் சிங்கள, பௌத்த மக்களை பகைத்துக்கொண்டு செய்ய முடியாது என்பது தெரியும். எனினும், தற்போதைய ஜனாதிபதி ஏன் கைவைத்துள்ளார் என்பது தெரியவில்லை”.

நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ஒருவர், அதிலும் தமிழ் மக்களின் வாக்குகள் மூலம் தேர்வானவர் இப்படி பேசியது சிங்கள மக்களிடையே கூட பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

முன்னாள் ஜனாதிபதி ஒருவர் சுயலாபத்திற்காக இனவாதத்தைக் கக்கியுள்ளார் என்றும் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் அவரது அஜாக்கிரதை மற்றும் புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்காமல் கடமை தவறியதற்காக அவருக்கு உச்ச நீதிமன்றம் 100 மில்லியன் ரூபாய் அபராதம் விதித்து இந்தாண்டு ஜனவரி மாதம் தீர்ப்பளித்தது. அதிலிருந்து தன்னை காப்பாற்றிக் கொள்ளவே மைத்ரி மீண்டும் இனவாதத்தை கையில் எடுத்துள்ளார் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.



பௌத்த மதகுருமார்கள் எதிர்க்கும் எந்த செயலையும் நாட்டில் செய்ய முடியாது என்பதை அவர் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளது சிங்கள கடும்போக்கு உறுப்பினர்களுக்கு ஊக்கமளிப்பது போலுள்ளது என்ற கவலைகள் எழுந்துள்ளன.

“இந்நாட்டில் பிக்குகள் எதிர்க்கும் விடயத்தை ஒருபோதும் செய்ய முடியாது. அதனால்தான் செல்வநாயகம் - பண்டாரநாயக்க உடன்படிக்கை கூட கொளுத்தப்பட்டது. மகாசங்கத்தினருடன் மோத முடியாது. இது பௌத்த நாடு. சிங்கள சக்திகளையும், பௌத்த பிக்குகளையும் பகைத்துக்கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது”.

மேலும் தான் ஜனாதிபதியாக இருந்தபோது வடக்கில் 95 சதவீத காணிகளை விடுவித்ததாக கூறிய அவர் மாவட்ட அபிவிருத்தி சபை முறைமையே சிறந்தது என்றும் நாடாளுமன்றத்தில் கூறினார். ஆனால் காணி விடுவிப்பு தொடர்பில் அவர் கூறுவது உண்மை இல்லை என்று தமிழர் தரப்பினர் வாதிடுகின்றனர். எந்த தரவுகளின் அடிப்படையில் அவர் 95% நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன என்று கூறுகிறார் என்று தமிழர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதுமட்டுமின்றி தமிழ் அரசியல் தலைவர்களை இழிவுபடுத்தும் வகையில் “வடக்கு அரசியல் தலைவர்கள் முழு இறாத்தல் இறைச்சியும் வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நிற்காமல், நடுநிலை போக்குக்கு வரவேண்டும்” என்றும் கூறியுள்ளார்.

அதேவேளை சிங்கள பெரும்பான்மை மக்களிடம் தமிழ் மக்களிற்கு அரசியல் சாசனத்தில் உள்வாங்கப்பட்டுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் உரிமைகளை அளிக்க அவர் ஏன் குரல்கொடுக்கவில்லை என்றும், அவரது செயல்பாடும் பேச்சும் தமிழர்களின் முதுகில் குத்துவது போலவும் முற்றாக துரோகம் இழைக்கும் செயலாகவுமே உள்ளது என்று தமிழர்கள் வருந்துகின்றனர்.

# யாழ்ப்பாணத்தில் சுதந்திர தின எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் – பலர் கைது

- எமது யாழ் செய்தியாளர்



இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை இரண்டாவது முறையாக யாழ்ப்பாணத்தில் அனுசரிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அங்கு வந்திருந்த போது, அவருக்கும் அந்த நிகழ்விற்கும் எதிராக தமிழர்கள் பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி சுகாஷ் உட்பட பலர் இழுத்துச் செல்லப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

ரணிலின் யாழ் விஜயம் மற்றும் சுதந்திர தின நிகழ்விற்கு எதிரான போராட்டத்திற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உட்பட பல அமைப்புகள் அழைப்பு விடுத்திருந்தன.

கருப்புக் கொடிகளை ஏந்தி போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முயன்ற போது, யாழ் நகரின் வைத்தியசாலை வீதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரை இ.போ.ச பேருந்து நிலையம் முன்பாக பொலிசாரும் விசேட அதிரடிப் படையினரும் தடுத்து நிறுத்தினர்.

எனினும் போராட்டத்தை தொடர்ந்த போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி கனகரட்னம் சுகாஸ் உட்பட ஏழு பேர் பொலிசாரினால் அமுக்கிப்பிடித்து இழுத்துச் சென்று வாகனங்களில் வலுக்கட்டாயமாக ஏற்றிச் செல்லப்பட்டனர்.

இதேநேரம் நகரின் மணிக்கூட்டு வீதி - வைத்தியசாலை வீதி சந்திக்கு முன்பாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம் தலைமையில் ஓர் அணியினர் போராட்டத்தில் ஈடுபட்டதனால் அங்கும் பொலிசார் குவிக்கப்பட்டனர். இதனால் நகரின் மத்தியில் தொடர் பதற்றம் நிலவியது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அடித்து விரட்டப்பட்டதோடு வீதியில் நின்ற ஊடகவியலாளர் ஒருவரின் மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது. இந்தப் போராட்டம் சுமார் இரண்டு மணிநேரம் நீடித்தது.

சனிக்கிழமை (11) நடைபெற்ற இந்த போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உட்பட பல தரப்பினர் அழைப்பு விடுத்திருந்த நிலையில், வெள்ளிக்கிழமை இரவு இதற்கு எதிரான தடையாணையை யாழ்ப்பாணப் பொலிசார் உள்ளூர் நீதவான் நீதிமன்றத்தில் பெற்றனர். ஆனாலும், அதையும் மீறி பொதுமக்களும், மக்கள் பிரதிநிதிகளும் இந்த கருப்புக்கொடி போராட்டத்தில் பங்குபெற்றனர்.

நாட்டில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கை தனது 75ஆவது சுதந்திர தினத்தை சுமார் 200 மில்லியன் ரூபா செலவில் அனுசரித்தது. இதேவேளை வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களில் தமிழர்கள் இந்த நாளை கரிநாள் என்று கூறி அதை புறக்கணித்து போராட்டங்களில் ஈடுபட்டனர்.

சில நாட்களிற்கு முன்பு அதிகாரப் பகிர்வு, பரவலாக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை வலியுறுத்தி வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி தமிழ் மக்களும் சிவில் அமைப்புகளும் ஊர்வலம் ஒன்றை முன்னெடுத்தனர். அந்த ஊர்வலம் யாழ்ப்பாணத்தில் தொடங்கி மட்டக்களப்பில் முடிவடைந்தது.





# சுதந்திர தினத்தை தமிழர்கள் எப்படி அனுஸ்டித்தார்கள்?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

"**சி**வாஜிலிங்கம் தனது ஆதங்க ஆவேசத்தை வெளிப்படுத்துகிறார். இது அவரது உரிமை. அவரது ஆவேச கோரிக்கைகள் தமிழ் மக்களின் ஆவேச கோரிக்கைகள்தான். எனக்கு அதில் மாற்று கருத்து தெரியலை. ஆனால் இவர் இப்படி தன்னந்தனி மனிதராக இதை செய்யும்போது, அவர் முன்வைக்கும் கோஷங்களும் பலவீனமடைகின்றனவே? தவிர்க்க முடியாமல் ஒரு கோமாளி தோற்றப்பாடும் ஏற்படுகிறதே? இவற்றை இன்னமும் கட்சி, இயக்கரீதியாக பலமாக திட்டமிட்டு அமைப்புரீதியாக செய்ய முடியாதா?"

இவ்வாறு கேட்டிருப்பவர் மனோகணேசன். சுதந்திர தினத்தையொட்டி யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வில் பங்குபற்றுவதற்காக வருகை தந்த ஜனாதிபதிக்கு எதிராக சிவாஜிலிங்கமும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்களும் எதிர்ப்புக் காட்டியிருந்தார்கள். இதில் சிவாஜி லிங்கம் தனி ஒரு ஆளாக நின்று கோஷம் எழுப்பும் காணொளியை பார்த்துவிட்டு மனோகணேசன் மேற்கண்டவாறு கேட்டார்.

இயல்பிலேயே சிவாஜிலிங்கம் ஒரு தனிமனித ராணுவந்தான். நினைவேந்தலிலும் அவர் அப்படித்தான், எதிர்ப்புப் போராட்டங்களிலும் அப்படித்தான். பெரும்பாலான அவருடைய துணிச்சலான அரசியல் செயற்பாடுகளில் அவர் தனியாகத்தான் முன்செல்கிறார். அதை ஒரு குழுச் செயல்பாடாகவோ, அல்லது கட்சிச் செயற்பாடாகவோ, அல்லது மக்கள் மயப்பட்ட ஒரு செயற்பாடாகவோ ஒழுங்குபடுத்தவேண்டும் என்று அவர் யோசிப்பதில்லை. சில சமயம் அவ்வாறு மற்றவர்களைக் கூட்டுச் சேர்ப்பது கடினமானது என்று அவர் கருதுகிறாரா?

ஆனால் எதிர்ப்பைக் காட்டும்போது அதை ஏதோ ஒரு விதத்தில் உலகத்தையும் ஊடகங்களையும் கவரும்விதத்தில் படைப்புத்திறனோடும், புத்திசாலித்தனமாகவும் ஒழுங்கமைக்கவேண்டும். ஆனால் தமிழ் அரசியல்பரப்பில் அவ்வாறு அரசியல் எதிர்ப்புப் போராட்டங்களில் படைப்புத்திறனோடு கூடிய கூட்டுச் செயற்பாடுகளை அனேகமாக காணமுடிவதில்லை.

அவ்வாறு மக்கள்மயப்படாத போராட்டங்கள் உரிய செய்தியை, உரிய தாக்கத்தோடு, உரிய தரப்புகளுக்கு உணர்த்தத் தவறுகின்றன. யாழ்ப்பாணத்தின் முக்கிய சந்தைகளில் வெள்ளை உடுப்போடு ஒரு ஸ்பீக்கரை கையில் வைத்துக்கொண்டு மதபோதனையை முன்னெடுக்கும் ஒருவரை பெரும்பாலானவர்கள் கண்டிருக்கிறோம். அது அவருடைய நம்பிக்கை. ஆனால், அதைப்போல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் செயற்பட முடியாது.

சுதந்திர தினத்திலன்று பல்கலைக்கழக மாணவர்கள் வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி ஊர்வலமாக போனார்கள். அதில் உதிரிகளாக கட்சி பிரமுகர்கள் காணப்பட்டார்கள். சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாளர்களோடு கலந்து கொண்டார்கள். முன்பு நடந்த பீ2பி போராட்டத்தைப் போல பெருந்திரளான எண்ணிக்கையில் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அதில் பங்குபற்றவில்லை. அதாவது அந்த எதிர்ப்பு பேரணியில் கட்சிகளின் பங்களிப்பு ஒப்பீட்டளவில் குறைவாக காணப்பட்டது. ஏன் அதிகம் போவான் அதில் பங்கு பற்றிய பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கையே நூற்றுக்கும் குறைவு.

மாணவர்களின் போராட்டம் தொடங்கமுன்பே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் மாணவர்களுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் தோன்றின. மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் போராட்டத்தை தொடங்கியபொழுது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனியாக ஒரு போராட்டத்தை நடத்தியது. அதே நாளில் மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சி தனியாக ஒரு போராட்டத்தை நடத்தியது. அப்போராட்டமானது அரசாங்கத்துக்கு எதிரானது மட்டுமல்ல, குறிப்பாக குத்துவிளக்கு சின்னத்தின் கீழ் காணப்படும் டெலோ இயக்கத்துக்கும் எதிரானது.

இவ்வாறாக சுதந்திர தினத்தையொட்டி நடந்த போராட்டங்களை தொகுத்துப் பார்த்தால் தமிழ்மக்கள் கூட்டாகவும் செயல்பட மாட்டார்களா? படைப்புத்திறனோடு போராடவும் மாட்டார்களா? என்று கேட்கத் தோன்றுகிறது. மட்டக்களப்பில், சுமந்திரனும் சாணக்கியனும் அவர்களுடைய ஆதரவாளர்களும் காந்தி குல்லாயோடு காட்சியளித்தமை ஒரு படைப்புத்திறனாகப் பார்க்கப்படவில்லை. மாறாக அது ஒரு பகிடியாகப் பார்க்கப்பட்டது.

இவ்வாறாக கடந்த சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழ்ப் பகுதிகளில் நடந்த போராட்டங்கள் அனைத்திலும் கூட்டுச் செயற்பாடு குறைவாக இருந்தது. தனிமனித முனைப்பு அல்லது கட்சி முனைப்பு துருத்திக் கொண்டு தெரிந்தது. படைப்புத்திறன் இருக்கவில்லை. பழைய சலித்த அதே போராட்ட வழிமுறைகள். போலீசார் கைது செய்தபடியால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் போராட்டத்திற்கு ஒரு கவனிப்பு கிடைத்தது. அதுவும் பிணை கிடைத்தவுடன் கொதிப்பு அடங்கிவிட்டது.

இவ்வாறு உலகின் கவனத்தை ஈர்க்கமுடியாத போராட்டங்களால் ஒரே ஒரு நன்மை உண்டு. குறிப்பிட்ட கட்சியின் ஆதரவாளர்களை ஓரளவுக்கு கூட்டிக் கட்டி வைத்திருக்க அது உதவும். ஆனால் அதைவிட ஆழமான பொருளில் தமிழ் மக்களை ஒரு தேசமாக திரட்ட மேற்படி போராட்டங்களால் முடிந்திருக்கிறதா?

புலம்பேந்து வாழும் ஒரு நண்பர் அண்மையில் கேட்டார்... "போராட்டம் என்று சொன்னால் தமிழ் மக்கள் எப்பொழுதும் வீதியிலே நிற்க வேண்டுமா? ஒரு மக்கள் கூட்டம் ஆண்டு முழுவதும் எதிர்ப்பு போராட்டங்களையும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் நடத்திக் கொண்டிருக்க முடியுமா?" என்று. பொருத்தமான கேள்வி.

ஓர் உடனடிக் பிரச்சினையை முன்வைத்து நிகழும் மக்கள் போராட்டங்கள் அவற்றின் இலக்கை அடையும்வரை தொடர்வது தவிர்க்க முடியாது. உதாரணமாக டெல்லியில் நடந்த விவசாயிகளின் போராட்டம். ஆனால் ஒரு மக்கள் கூட்டத்தின் விடுதலைக்கான ஒரு போராட்டத்தை பொறுத்தவரை குறிப்பாக அறவழிப் போராட்டம் என்று வரும்பொழுது ஆண்டு முழுக்க போராட முடியாதுதான். ஏன் அதிகம் போவான் காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எத்தனை நாள் போராடியிருக்கிறார்கள் என்பது இடைக்கிடை ஊடகங்களில் வெளிவரும். ஆனால் அப்போராட்டங்கள் எந்தளவு தூரத்துக்கு உலகத்தின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன? அல்லது எந்த அளவுக்கு சொந்த மக்களை சென்றடைந்திருக்கின்றன?

ஆயுதப் போராட்டத்தில் மட்டுமல்ல அறவழிப் போராட்டத்திலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை போராட்டம் எனப்படுவது இறுதியிலும் இறுதியாக தேசத்தை நிர்மாணிப்பதுதான். தேசத்தை நிர்மாணிப்பது என்பது ஒரு மக்கள் கூட்டத்தை தேசமாக வனையும் அடிப்படை மூலக்கூறுகளை பலப்படுத்துவது தான். அதற்குரிய கட்டமைப்புகளை உருவாக்குவதுதான். ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கருநிலை அரசு இருந்தது. அது தேச நிர்மாணத்துக்கு வேண்டிய கட்டுமானங்களை ஏதோ ஒரு விகிதமளவுக்கு கட்டியெழுப்பிக் கொண்டிருந்தது. ஆனால் கடந்த 13 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறு தேசநிர்மாணத்துக்கு தேவையான கட்டமைப்புகள் எவையும் கட்டி எழுப்பப்படவில்லை. பதிலாக அவ்வப்போது காட்டப்படும் சிறிய மற்றும் பெரிய எதிர்ப்புகளுக்கூடாக கட்சிகளைத்தான் கட்டியெழுப்பி வருகிறார்கள்.

எனவே தமிழ் மக்கள் போராட்டம் என்பதனை தனிய எதிர்ப்பு அரசியலாக மட்டும் சுருக்கி பார்க்காமல் அதைவிட பரந்தகன்ற அர்த்தத்தில் அதை தேச நிர்மாணமாக விளங்கிக் கொள்ள வேண்டும். ஒரு மக்கள் கூட்டத்தை தேசமாகத் திரட்டும் அடிப்படை அம்சங்களைப் பலப்படுத்தும் விதத்தில் உரிய கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். அவ்வாறான கட்டமைப்புகளில் ஒன்றாக போராட்டத்திற்கான மக்கள் அமைப்பும் கட்டி எழுப்பப்பட வேண்டும்.

தமிழ் கட்சிகளில் பெரும்பாலானவற்றிடம் மாணவ அமைப்புகள் இல்லை. யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள சிங்கள மாணவர்கள் மத்தியில் தென்னிலங்கையில் இயங்கும் ஜேவிபி போன்ற கட்சிகளுக்கு உறுப்பினர்கள் உண்டு. சிறிய அளவில் கட்டமைப்புகளும் உண்டு. ஆனால் போரா-டும் தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறான கட்டமைப்புகள் கிடையாது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரன் அவ்வாறு மாணவர் போராடடத்திற்கூடாக மேலெழுந்த ஒருவர். ஆனால் அக்கட்சியிடமும் பலமான மாணவ அமைப்புக்கள் கிடையாது, அப்படிப்பட்ட கட்டமைப்புகள் இல்லாத ஒரு வெற்றிடத்தில்தான், பல்கலைக்கழக மாணவர்களின் ஊர்வலத்தைப் பலப்படுத்தி பிரம்மாண்டமானதாக கட்டமைக்க வேண்டும் என்ற அக்கறை கட்சிகளிடம் இருக்கவில்லை மாணவர்களிடமும் இருக்கவில்லை.

தமிழகத்தில் உள்ள கட்சிகள் எல்லாவற்றுக்கும் மாணவ அமைப்புகள், மகளிர் அமைப்புகள் என்று வெவ்வேறு வயது மட்டங்களுக்கு ஏற்ப கட்டமைப்புகள் உண்டு. குறிப்பாக கேரளா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் கொமியூனிஸ்ற் கட்சிக்கு இளையோர் மத்தியில் மூன்றுக்கும் குறையாத கட்டமைப்புகள் உண்டு. பள்ளி மாணவருக்கு ஒரு கட்டமைப்பு, பல்கலைக்கழக மாணவருக்கு ஒரு கட்டமைப்பு, மாணவப் பருவத்தைக் கடந்தவர்களுக்கு ஒரு கட்டமைப்பு, என்றெல்லாம் கட்டமைப்புகள் உண்டு. ஆனால் தமிழ் கட்சிகளுக்கு அப்படியெல்லாம் கட்டமைப்புகள் இல்லை. ஆனால் ரோட்டரிக் கிளப் போன்றவற்றுக்கு அப்படிப்பட்ட கட்டமைப்புகள் உண்டு.

இப்பொழுது உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான அறிவிப்புகள் வந்தபின் பெண் வேட்பாளர்களை தேடி கட்சிகள் ஓடத்தொடங்கி விட்டன கிராம மட்ட மகளிர் அமைப்புகள் பலமாக இருந்தால் அதற்குள் இருந்தே உள்ளூர் தலைமைத்துவங்கள் மேலெழுந்து வரும். அப்படிப்பட்ட கட்டமைப்புகள் இல்லாத வெற்றிடத்தில்தான் தேர்தல் என்று வந்ததும் வேட்பாளர்களைத் தேடி அலையும் ஒரு நிலை. அதிலும் பெண்கள் பொறுத்து உள்ளூராட்சித் தேர்தல்களில் 25 விகிதம் பெண் வேட்பாளர்கள் இருக்க வேண்டும் என்று சட்ட ஏற்பாடு உருவாக்கப்பட்ட பின்னர்தான் கட்சிகள் பெண்களை வேட்பாளர்களாக இணைக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மற்றும்படி பால் சமநிலையை பேண வேண்டும் என்று எத்தனை கட்சிகள் சிந்திக்கின்றன?

எனவே கடந்த 13 ஆண்டுகளாக தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்ட முடியாத தமிழ்க் கட்சிகள் குறைந்தபட்சம் கட்சிகளைக்கூட உரிய கட்டமைப்புகளுக்கூடாகக் கட்டியெழுப்பவில்லை. இருக்கின்ற சில கட்டமைப்புகளும்கூட விசுவாசக் கட்டமைப்புகளே தவிர, அரசியல் மயப்படுத்தப்பட்ட கட்டமைப்புகள் அல்ல. இவ்வாறான ஒரு வெற்றிடத்தில்தான் போராட்டம் என்று வரும்பொழுது தனிமனித முன்னைப்புகள் துருத்திக்கொண்டு தெரிகின்றன. படைப்புத்திறன் குறைந்த போராட்டங்கள் மக்களையும் ஊடகங்களையும் வெளியுலகத்தையும் போதிய அளவுக்கத் ஈர்க்கத் தவறுகின்றன.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# யாழ் கலாச்சார மைய திறப்பு விழாவில் இடம்பெற்ற திரைமறைவு சம்பவங்கள்

## (கனடா உதயனின் சிறப்பு ஆய்வுக் கட்டுரை)

- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்



“யாழ்ப்பாண மக்களின் கலாச்சாரத்தை ஊக்குவித்து மேலும் வளர்க்கவும் இலங்கையின் வடக்கு மாகாண மக்களின் கலாச்சார விழுமியங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கிலேயே இந்திய அரசால் யாழ் மாநகர சபைக்கு சொந்தமான இடத்தில் கலாச்சார மண்டபம் கட்டப்படும்” என்று தான் இந்திய அரசிற்கும்-இலங்கை அரசிற்கும் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

அப்படிக் கட்டப்பட்டுள்ள அந்த கலாச்சார மையத்திற்கான நிலம் யாழ் மாநகர சபைக்கு சொந்தமானது. அதாவது யாழ் மாநகர சபைக்கு சொந்தமான இடத்தில், இலங்கை அரசுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி ஒரு பில்லியன் இந்திய ரூபாய் செலவில் (ஒரு கோடியே இருபது லட்சம் டொலருக்கும் அதிகமான தொகை) கட்டப்பட்டு சில நாட்களிற்கு முன்னர் இலங்கையிடம் கையளிக்கப்பட்டது.

இந்த மண்டபம் தொடர்பில் பல கேலிக் கூத்துகள் அரங்கேறின. இதன் திறப்பு விழாவும் கூட இருமுறை இடம்பெற்றது.

யார் நிலத்தில், யார் கட்டி, யாரிடம் கையளிப்பது என்பதே பெரும் சர்ச்சையாகி, இதோ அதோ என்று கையளிப்பு வைபவம் இடம்பெற்றது. இதில் நிலத்தை அளித்த யாழ் மாநகர சபையின் முதல்வருக்கு உரிய அழைப்போ மரியாதையோ அளிக்கப்படவில்லை என்பது வேறு கதை.

யாழ் மக்களிற்காக, யாழ் கலாச்சார மேம்பாட்டிற்காக கட்டப்பட்ட மையத்தை மத்திய அரசி திட்டமிட்டு கபளீகரம் செய்துவிடக் கூடும் என்கிற அச்சம் இப்போது எழுந்துள்ளதாக வட மாகாண மக்கள் கவலைப்படுகின்றனர்.

இந்த மையத்தின் கட்டுமானம் மிக வேகமாக இடம்பெற்று 2020ஆம் ஆண்டு பணிகள் அனைத்தும் முழுமையாக நிறைவடைந்தன. ஆனால் கொரோனா தொற்று இதன் திறப்பு விழா அல்லது கையளிப்பு விழாவிற்குத் தடையாக இருந்தது. அதனால் கட்டுமானப் பணிக்காக இந்தியாவில் இருந்து வந்த பணியாளர்களே கட்டடத்தை பராமரிக்கும் நிலை ஏற்பட்டது. அதேவேளை இங்கு குளிரூட்டிகள் மட்டும் 100ற்கும் மேற்பட்டவை இருந்தன. அவை இயங்காவிட்டால் பாவனைக்கு முன்பே உத்தரவாதக் காலம் முடிவடைந்து விடும். மேலும் மின் இணைப்பு வயர்களை எலி நாசம் செய்யும் என்பதால் அதனைத் தடுக்க மின்சார இணைப்பை வழங்கியே ஆக வேண்டும் என்ற நெருக்கடி. இதையடுத்து குளிரூட்டியை இயங்க விடுவதற்கு முடிவானது.

பிறகு “எமது பணியாளர்கள் நாடு திரும்ப வேண்டும், எனவே இக்கட்டிடத்தை உத்தியோகபூர்வமாக பொறுப்பெடுங்கள்” என இந்திய தூதரகம் கோரிக்கை விடுத்தது.

“பொறுப்பேற்க தயாராகவுள்ளோம் தாருங்கள்” என யாழ் மாநகர சபையும் கோரியது.

“அதை ஒப்பந்தத்தின் வழியிலேயே வழங்க முடியும்” என இந்தியத் தூதரகம் பதிலளித்தனர். அதாவது மத்திய அரசின் மூலமே அதை வழங்க முடியும் என்பதே இந்திய நிலைப்பாடு.

உடனே சர்ச்சை ஆரம்பித்து வெடித்தது.

கட்டி முடிக்கப்பட்ட கட்டடத்தை பார்வையிட்ட மத்திய அரசு அதிகாரிகள், தெற்கு அரசியல்வாதிகள் அதனால் ஈர்க்கப்பட்டு தமது அமைச்சின் பணிகளை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கும்போது இக்கட்டடத்தை முழுமையாக இலவசமாகப் பயன்படுத்த திட்டமிட்டனர். அந்த மண்டபம் மாநகர சபையிடம் இருக்கும், ஆனால் பராமரிப்பு மற்றும் நிர்வகிக்க ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்று குறி கொழும்பு முட்டுக்கட்டை



போட்டது. இதற்கு 2021ஆம் ஆண்டில் அப்போது மாநகர சபை ஒப்புக்கொண்டது.

அந்த கலாச்சார மண்டபத்தை தொடர்ந்து பராமரிப்பதற்கான திட்டத்தை தயாரித்து அதற்கு தேவையான ஆளணி மற்றும் அதற்கு ஏற்படும் செலவினங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றையும் கொழும்பிற்கு அனுப்பினர். உடனே தான் நேரடியாக தலையீடு செய்யும் வழியை மத்திய அரசு சிந்தித்தது. பணியாளர் சம்பளம், பராமரிப்பு ஆகியவற்றிற்கு மாதாந்தம் 4 முதல் 5 மில்லியன் ரூபா செலவு ஏற்படும் அதனால் இதனை மத்திய அரசிடம் விட்டு விடுங்கள் என்ற கோணத்தில் அணுக முயன்றது. இதற்கு யாழ்ப்பாணம் மாநகர சபை முழுமையாக மறுப்புத் தெரிவித்தபோது அவ்வாறானால் உத்தியோக பூர்வமாக கையளிக்கும் வரையில் இராணுவத்தின் தொண்டர் படையணி பராமரிக்கட்டும் என தெரிவித்தனர். இதையும் மாநகர சபை எதிர்த்தது.

“தமிழ் மக்களிற்காக கட்டப்படுவதாகவே இந்திய அரசினால் உத்தியோகபூர்வமாக தெரிவித்தே பணிகளை ஆரம்பித்தோம் தற்போது இதனை தெற்கு அல்லது மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் செல்வதனை எம்மாலும் ஏற்க முடியாது ஏனெனில் அது இந்திய நாட்டில் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதனை இலங்கை அரசு புரிந்துகொள்ள வேண்டும்” என இந்தியத் தரப்பால் உறுதிப்படத் தெரிவிக்கப்பட்டது.



இத்தனையும் தாண்டி அனைவர் கண்ணிலும் எவ்வாறு மண்ணவத் தூவலாம் என காத்திருந்த கொழும்பு மாநகர சபையில் நிலவும் இழுபறியைச் சாதகமாக்க முயன்றது. இதற்கமைய யாழ்ப்பாணம் கலாச்சார மண்டபத்தை கையளிக்கும் நிகழ்வு கடந்த 11ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டு ஏற்பாடுகள் முன்னெடுத்த சமயம், இந்திய அரசு இலங்கை அரசிடம் கையளிக்க அதை மத்திய அரசு மாநகர சபையிடம் கையளிப்பதாகவே ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டபோதும் மத்தியினால் மாநகர சபையிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வை தடுக்க மறைமுக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதை இலங்கை அரசிடம் கையளிக்கும் நிகழ்வை ஏற்பாடு செய்து மேற்பார்வை செய்ய இலங்கையின் புத்தசாசன அமைச்சர் யாழ்ப்பாணம் வந்ததோடு கலாச்சார மண்டபத்திற்கும் நேரடியாக சென்று அங்கே மேற்கொள்ள வேண்டிய பணி-களை அதிகாரிகளை அழைத்து தானே நேரடியாக கட்டளைகளை வழங்கி முழுமையாக மத்தியின் அதிகாரப் பிடிக்குள் கொண்டு வரும் முயன்றார். இதை அறிந்த மாநகர முதல்வர் இ. ஆனால்ட் அங்கு சென்ற போது மேலும் அதிர்ச்சி காத்திருந்தது.

அங்கு புத்தசாசன அமைச்சருடன் யாழில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரி, வடக்கு மாகாண கல்வி பண்பாட்லுவல்கள் மற்றும் கலாச்சார அமைச்சின் செயலாளர், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர் ஆகியோரும் அங்கே கூடியிருந்தனர். மாநகர சபை ஓரங்கட்டப்படுவதை அறிந்த ஆனால்ட் அமைச்சருடன் நேரடியாக மோதும் நிலை ஏற்பட்டது.


“இக்கட்டிடம் மாநகர சபைக்காக எமது காணியில் இந்தியாவால் கட்டப்பட்டதோடு எம்மிடமே கையளிப்பதாகவே ஒப்பந்தம். ஆனால் அந்த இடத்தில் நிகழ்வை நடாத்தி கையளிப்பிற்கான ஏற்பாட்டை எமக்குத் தெரியாமல், முன் அனுமதயின்றி நீங்கள் எவ்வாறு மேற்கொள்வீர்கள். அப்படியானால் இதில் மாநகர சபையின் பங்கு என்ன? இங்கே நினைவுக் கல்வெட்டு வைப்பதாக கூறுகின்றீர்கள் அதில் மாநகர சபையின் வகிபாகம் எந்த வகையில் உறுதிப்படுத்தப்படுகின்றது. அதில் வெறுமனே ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்களுடன் இந்திய தூதுவரின் பெயர் மட்டுமே என்று கூறுகின்றீர்களே அவ்வாறானால் மாநகர சபையில் இருந்து முழுமையாக பறிக்கும் முயற்சியா? எனக் கேட்கப்பட்டபோது குழுமியிருந்த அதிகாரிகள் அதிர்ந்தனர்.

உடனே புத்தசாசன அமைச்சர், “இதனை என்னிடம் கேட்க வேண்டாம் நீங்கள் பிரதம செயலாளரிடம் கேளுங்கள் அவர் கூறியே நான் வந்தேன்” என்றபோது வாக்குவாதம் மேலும் முற்றியது.

“அவருக்கும் எமக்கும் என்ன தொடர்பு, எம்மை அவர் கட்டுப்படுத்தவும் முடியாது அவரிடம் நாம் ஏன் இது தொடர்பில் பேச வேண்டும்” என்று ஆனால்ட் குரலை உயர்த்த அமைச்சர் விதுர விக்ரமநாயக்க அதிர்ந்து போனார்.

“அவ்வாறானால் நீங்கள் ஆளுநருடன் பேசுங்கள்”.

“அது சரி எமக்கு உங்களிடம் என்ன பேச்சு நான் ஆளுநரிடம் கேட்கின்றேன்”.



பின்னர் சமாளிப்பில் ஈடுபட்டார் அமைச்சர். இதனையடுத்து ஆளுநர் செயலகத்தில் ஓர் கூட்டம். அதில் கல்வெட்டில் மாநகர சபையுடன் முதல்வரின் பெயர் பொறிக்கப்படுவதோடு நிகழ்வில் வரவேற்புரை அமைச்சருக்கு வழங்கியதனால் நன்றியுரை என்ற வகிபாகம் மாநகர முதல்வருக்கு வழங்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது.

ஆனால் நிகழ்ச்சி ஏற்பாட்டுக் கூட்டம் அமைச்சர் தலைமையில் கூடியபோது அதிலே நன்றியுரை பிரதம செயலாளருக்கு என்று மாற்றப்பட்டது.

இதனால் குறித்த விடயங்கள் மாநகர முதல்வரினால் மீண்டும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதனால் ஜனாதிபதி செயலகத்தின் நிர்ப்பந்தம் காரணமாக நினைவுக் கல்லில் மாநகர சபையின் முதல்வரின் பெயரும் சேர்க்கப்பட்டது.

இதையடுத்து தனது நிலைப்பாட்டை தெரிவிக்க பேச்சிற்கும் அனுமதிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அவசரமாக தகவல் வழங்கப்பட்டதோடு மாநகர சபையிடம் கட்டடம் வருவதனை உறுதி செய்ய வேண்டும் எனவும் கோரப்பட்டது.

ஜனாதிபதி செயலகம் இணங்கியபோதும் சில இனவாதிகள் குறுக்கிட்டு தடையை ஏற்படுத்தினர்.

கையளிப்பு நிகழ்வு 11ஆம் திகதி இடம்பெறவிருந்த சமயம் 10ஆம் திகதி இரவு 10மணிக்கும் உறுதியான உத்தரவாதம் இன்மையால் நிகழ்வை முழுமையாக புறக்கணிப்பதனை தவிர வேறு மார்க்கம் இல்லை என்ற தகவல் இந்திய தூதரகம், ஜனாதிபதி செயலகம், ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட்டபோது இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த இணை அமைச்சர் எல்.முருகன் மற்றும் தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் அண்ணாமலை ஆகியோரின் காதுகளிலும் எட்டியது. சூழலை கையை மீறிச் செல்வதை உணர்ந்த இந்தியத் தரப்பு இரவு 10 மணியளவில் அண்ணாமலைக்கும் மாநகர முதல்வருக்கும் இடையில் 15 நிமிட சந்திப்பை ஏற்படுத்தியது.




“அது மாநகர சபைக்குரியது அதனை மீறி இலங்கை அரசு செயல்படுமாக இருந்தால் நானும் அமைச்சரும் மட்டுமன்றி அனைத்து தரப்பின் ஊடாகவும் இது பாரதப் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். அது இலங்கைக்கான எதிர்கால திட்டங்கள் வரையில் தாக்கத்தை செலுத்தியே தீரும் அதனால் நல்லது நடக்கும் என நம்புகின்றேன்” என அண்ணாமலை பதிலளித்தார்.

இந்த நிலையில்தான் கையளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது மாநகர முதல்வரும் பங்கேற்றார். இருப்பினும் எதிர்பார்த்தமை போன்றே மாநகர சபை புறக்கணிக்கப்பட்டது. நன்றியுரைக்கு பிரதம செயலாளரே அழைக்கப்பட்டார்.

இதன் நிறைவில் கருத்துரைத்த முதல்வர் ஆனால்ட் மாகாணத்தின் சுய அதிகாரத்தை பேண வேண்டும் என்பவர்கள் உடபட சில இனவாதிகள் மாநகர சபைக்கு கிடைக்க வேண்டிய சொத்தை கபளீகரம் செய்ய முயல்வதாகவே கூறவேண்டியுள்ளது. இதனை இந்தியாவும் கைகட்டி வேடிக்கை பார்க்க முடியாது அதனால் எமது அதிருப்தியை பகிரங்கமாகவே பதிவு செய்கின்றோம். இவ்வாறுதான் இடம்பெறலாம் என்பதனால் நிகழ்வையே புறக்கணிக்க இருந்தபோதும் அது இந்தியாவை பகைத்ததாக அமையக்கூடாது என்பதனால் பங்குகொண்டேன் என்றார்.

# எங்கள் குடும்ப விளக்கின் 16ம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்



அன்னையிடம்:

17 - 03 - 1952

அழைத்தவனிடம்:

31 - 01 - 2023

## திருமதி. நவரட்ணதேவி உருத்திரசீலன் (மணி)

(நாரந்தனை, கரம்பொன், கொழும்பு)

**யாழ்ப்பாணம் நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், கரம்பொன் கிழக்கு, புதுச்செட்டித்தெரு கொழும்பு ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி. நவரட்ணதேவி (மணி) உரத்திரசீலன் (கொழும்பு ஐங்கரன் ஸ்ரோர்ஸ் முன்னாள் பங்காளி) அவர்களின் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்.**

அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வு 13-02-2023 அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அன்னையின் அஸ்தி சங்கமமாகியதை தொடர்ந்து, 15-02-2023 அன்று யாழ் வீதி இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று, நீராவியடி பிள்ளையார்கோவிலும் அன்னதானம் வழிங்கப்பெற்று, கொழும்பு அன்னையில் இல்லத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெற்றது.

எங்கள் குடும்பத்தலைவியின் துயரச்செய்தியறிந்து நேரிவும், தொலைபேசிமூலமும் தங்கள் அனுதாபங்களையும், அஞ்சலிகளையும் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், பல நாடுகளிலிருந்தும் மலர்வளையங்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிகள் அனுப்பியவர்களுக்கும், அறிவித்தல்கள் உணவு வகைகள் வழங்கியவர்கள், இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றிய உறவினர், நண்பர்கள் அனைத்து உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்புத்தெய்வத்தின் பிரிவால் வாடும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துன, மைத்துனிகள் பெறாமக்கள் உற்றார், உறவினர். நண்பர்கள்.

அன்னையின் ஆத்மா சாந்திபெற அன்பு மலர்தூவி இறைவனை வேண்டுகின்றோம்.

------------------------

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:**
**உதயன் (மகன்): (416) 857-4809**
**(416) 551-4128**
**சதீஸ் (மகன்): 614 0585 1340**
**செல்வன் (மகன்): 614 34 217459**



***அம்பாளைப் போல எம் மத்தியில் வீற்றிருந்து அன்பைப் பகிர்ந்தீர்களே!***

---

*கடல் தாண்டிய தங்கள்பயணத்தில் சில மாதங்களுக்கு முன்னர் கனடாவில் கால் பதித்தீர்கள்*

*உற்றார், உறவினர், நண்பர்கள், குழந்தைகள் என அனைவரோடும் அன்பு பாராட்டி நாட்களை கழித்தீர்கள்*

*விடைபெற்று தாயகம் திரும்பியவரை மீண்டும் விரைவில் சந்திப்போம் என்று தானே வழியனுப்பினோம்*

*இவ்வளவு விரைவாக உங்கள் விண்ணுலகப் பயணம்*
*இடம்பெறும் என்பதை உணர முடியவில்லையே.*

*பிறந்த ஊர் நோக்கி பெற்ற பிள்ளைகள் குடும்பத்தினரோடு மீண்டும் பயணித்த வேளையில்*
*தங்களை குறிவைத்தானோ கொடிய காலனவன்*

*குல தெய்வத்தை வணங்க குடும்பத்தோடு சென்றிருந்த எம் குலக் கொழுந்தை மண்ணிலிருந்து பிடுங்கி எறிந்தார்களே!*

*கலங்குகின்றோம் நாமெல்லாம் சேர்ந்து எப்போதும் கலகலவென சிரிப்புச் செல்வத்தை உதிர்த்து மகிழ்ந்து எம்மையும் குதூகலிக்கச் செய்தவரை இழந்ததனால்*

*துணையை இழந்த துயர் நெடுநாளாய் வாட்டி நிற்க*
*பாலூட்டி வளர்த்த பிள்ளைகள் பிற நாட்டில் வாழ*
*உற்றார் உறவினர்கள் உலகெங்கும் பரந்திருக்க தனிமையில் தவித்த துயர் மற்றவர்க்கு தெரியாதிருக்க*
*எப்போதும் சிரிக்கும் வதனத்துடன் வாழ்ந்த நாட்களை வசந்தங்களாய் ஏற்று நின்றீர்களே!*


*சிங்காரமாய் சேலை தரிக்கும் அழகு சீரிய பார்வை இவ்வாறாய் அம்பாளைப் போல எம் மத்தியில் வீற்றிருந்து அன்பைப் பகிர்ந்தீர்களே*

*"மணி" என்று மற்றவர்கள் மதிப்புடன் அழைத்து மகிழ்ந்த*
*மாசற்ற தாயாய் சித்தியாய் மாமியாய் அப்பம்மாவாய் அம்மம்மாவாய் நண்பியாய் எம் மத்தியில் உலாவிய நீங்கள் இல்லாத பூமி வெறுமையாய்த் தெரிகிறது*
*சென்ற இடத்தில் சிறப்போடும் இம் மண்ணில் உதிர்த்த சிரிப்பலைகளோடும் வாழ்வீர்கள் என்பது உறுதி தாயே!*


SUBRA
SUBRA MORTGAGE FINANCIAL
MORTGAGE SOLUTIONS
✦ RESIDENTIAL ✦ COMMERCIAL ✦ INDUSTRIAL
✦ VACANT LAND ✦ CONSTRUCTION
Know the basic things on Mortgage to find a better way for your Future!
CONTACT US TODAY
NESAN
416-908-5656
1st & 2nd Mortgages
Purchase
Refinance
Renewal
Switches
Equity lind of Credit
Pre-approvals
Self-employed
Multi-rental properties
New immigrants
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
1585 Markham Rd, Unit #406, Toronto, M1B 2W1
www.subra.com
WE DEAL WITH ALL BANKS
Brokerage #10330
Powered By
MORTGAGE ALLIANCE
Scotiabank
radius financial
EQUITABLE BANK
RMG mortgages
TD Canada Trust
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
HOME TRUST
MCAP

# Sri Lankan fishermen fear livelihood loss after India's top court clears use of banned fishing nets

- Siva Parameswaran



A judgment of the Indian Supreme Court permitting the use of banned purse-seine fishing could potentially affect the lives of thousands of Tamil fishermen along the Northern Coast of Sri Lanka fishermen of the island nation fear.

Although the order comes with certain restrictions, it gives the Indian-Tamil Nadu fishermen a fillip to use banned nets which have been globally condemned and criticised as it wipes out marine lives causing irreversible aquatic and environmental damage.

Sri Lankan fishermen are apparently worried and rightly so that the judgment would strengthen the claim of the Indian Fishermen aka Tamil Nadu fishermen to fish around the Kacchativu islet area-which has been a thorn in the relations not only between the South Asian nations but also the Tamil fishermen brethren across the Palk straits.

The Tamil Nadu government banned the use of purse-seine nets for fishing on the 17th of February 2022. That ban has now been overturned by the Supreme Court upon an appeal by the Tamil Nadu fishermen.

A bench of Justices A S Bopanna and Sudhanshu Dhulia ordered allowing the use of the 'banned' purse-seine fishing net beyond the territorial waters albeit with certain conditions. The order permitted such fishing beyond the territorial waters but within the Exclusive Economic Zone (EEZ).

"The vessels will be allowed to operate only twice a week ie., on Monday and Thursday, and shall leave the coastline on or after 8 AM and shall return to the designated place positively by 6 PM on the same day," the order said.

Appealing against the order of the state government the fishermen from Tamil Nadu moved the Supreme court contending "that the fishing season is only a 3-month season, and the ban has affected around 1.5 million fishermen in the state".

The petitioners had submitted before the Supreme Court that the fishing season is only a 3-month season, and the ban has affected around 15lakhs fishermen in Tamil Nadu. Tamil Nadu fishermen further argued the ban by the state government was 'arbitrary' and was against the policy of the Central government.

"The law had been passed by the state without considering the expert committee and the fishermen and as a result, 1.5 million people had lost their job". Legal analysts point out that the loss of jobs is not corroborated by scientific data backed with proof.

Sri Lankan fishermen say if 1.5 million Indian (Tamil Nadu) fishermen argued about the fear of being out of jobs if the ban is not overturned by the Supreme Court-they would be even more vulnerable if they cross the International Maritime Boundary Line and enter Sri Lankan Territorial waters where the aquatic resources are already depleted due to poaching by the Tamil Nadu fishermen.

"This is a legal blow to us when we are fighting for one square meal a day amidst the ongoing economic crisis and the continuing impact of the war. Our marine resources are depleted, and we don't have the capacity to go for deep sea fishing as we lack the infrastructure and the financial backing needed for it. Our government is not capable of taking our long pending issues with the Indian side and finding a permanent solution. In fact, they act as their mouthpiece as they depend on India for resurrecting the country" a fishermen leader from the Northern Province said on condition of anonymity and fear of reprisal.

However, TN fishermen are divided in their opinion. While people from Rameswaram - the closest coast to Sri Lanka's Talaimannar - say although the 12 nautical mile condition is very tricky along the IMBL they don't use the banned net and as such they neither gain nor lose due to the judgment. But, the fishermen from other coasts in the Pudukottai, Nagapatnam, Karaikal, and Cuddalore districts say though part of them use such nets venturing into Sri Lankan territorial waters may happen.

War-affected Tamil fishermen of Sri Lanka's Northern Province are not convinced by the comments of their counterparts from Tamil Nadu. "There's every possibility that the Indian fishermen would continue to poach in our waters armed with the Supreme Court from their country and our fishermen's misery would be an unending saga".

Although the order is only an interim one, Justice Bopanna has observed that it has a humanitarian angle.

"The order is based on the philosophy of Live and let live. We can't take all contingencies into consideration. This order is to ensure that everybody should survive kind of policy. Nothing more than that".

But fisheries industry people in Sri Lanka point out their primary concern is about allowing the use of purse-seine nets which will adversely affect aquatic resources in the areas around their coastal zone. They also point out the Tamil Nadu government was right to ban such nets thirty years back. Moreover, while the TN fishermen were able to fish in their territorial waters but the Northern Province fishermen were denied permission by the Sri Lankan Navy to venture into the sea for their livelihood.

Tamil fishermen of the Northern Province say they are yet to get back to full normal even after the civil war came to a bloody end almost 14 years back. The deadly Covid impact since 2019 and the continuing economic crisis without an end in sight, have also directly affected those fishermen who are either unable to venture into the sea or come back with a meager catch.

Fishermen crossing borders has been a major thorn in the bilateral diplomatic issues between India and Sri Lanka. Sri Lankan fishermen point out that whenever their counterpart from Tamil Nadu crosses the IMBL and gets apprehended by Sri Lankan Navy and detained pressure from Tamil Nadu starts mounting on the Indian Federal Government urging them to take action and release them, following which Delhi writes to Colombo and the fishermen are released while their boats are detained and sold in a public auction.

Now, it is feared by the Northern Province fishermen that though the judgment allows the use of purse-seine nets only for trawlers beyond 12 nautical miles, other fishing boats too may take advantage of using such nets.

The Judges of the Indian supreme court are set to hear the matter for an in-depth consideration later. After delivering the interim order Justice Bopanna said, "The court is passing these orders after thinking about it and taking the interest of all sides into consideration".

However, the big question for Sri Lankan fishermen is whether they too are part of the 'all sides'.



*(9 பக்கத் தொடர்ச்சி)*

# விநாயகர் விமர்சனம்

## ஐயோ 13........அலறும் பௌத்தம்

பெரும்பான்மை இனப் புத்திஜீவிகள் மத்தியில் ஓரிரண்டு குரல்கள் 13 இற்கு ஆதரவாக வெளிவந்த போதிலும் அவை இனவாதிகளின் கூச்சல்களை மீறி ஒலிக்கச் செய்யும் அளவுக்குப் பலமானதாக இல்லை. மறுபுறம் சில தமிழ் அரசியல் வாதிகள் 13ஐ முழுமையாக ஆதரிக்கிறார்கள் அதையே தீர்வெனவும் நம்புகிறார்கள். வேறுசிலர் மதில் மேல் பூனையாக முதலில் அமல் படுத்துங்கள் அதன் பிறகு பார்க்கலாம் என்கின்றனர். கடந்த நான்கு தசாப்த கால அனுபவத்தின் அடிப்படையில் அலசிப்பார்க்குமிடத்து பாதிக்கப்பட்ட சிறுபான்மை மக்கள் 13ஐ இனப்பிரச்சினைக்கான தீர்வாகக் கருதவில்லை என்பதை சுலபமாக அறிய முடியும். அவர்கள் 13இற்கு அப்பாற்சென்ற சமஷ்டித்தீர்வை விரும்புகிறார்கள். ஆனால் அந்தத்தீர்வை இலங்கை விரும்பவில்லை.

ஆகவே சிங்கள மக்கள் பெரும்பான்மையானோர் 13ஐ விரும்பவில்லை சிறுபான்மை மக்களிலும் பெரும்பாலானோரும் அதனை விரும்பவில்லை என்றால் யாருடைய தேவைக்காக 13ஐப்பற்றி இப்போது பேசப்படுகிறது என்ற கேள்வி எழுகிறது. இருதரப்பும் 13ஐ விரும்பவில்லை ஆகவே இதனை நீக்கிவிடலாம் என்று இறுதியில் ரணில் முடிவெடுக்கலாம். ஆனால் அதனை இந்தியா விரும்பாது. இவ்வாறு முக்கோணக் காதல் கதை மாதிரி இந்தப் பிரச்சினை தொடர்கிறது. அரசியலமைப்புத் திருத்தத்தின் இந்தப் பதின்மூன்றை விட இன்னொரு பதின்மூன்று பெரும் உலுக்கலை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த 13ஆம் திகதி தஞ்சையில் பழ.நெடுமாறன் புலிகளின் தலைவர் நலமாக இருக்கிறார் என்று வெளியிட்ட அறிவிப்புதான் அது. அடுத்த மணித்தியாலங்களில் இந்திய மற்றும் சர்வதேச ஊடகங்களில் அது தலைப்புச் செய்தியாக இருந்தது. இலங்கை ராணுவமும் ராஜபக்ஷ்வும் அதற்கு மறுப்பறிக்கை விட்டனர். அதே 13ஆம் திகதி மட்டக்களப்பில் உள்ள பௌத்த பிக்குவின் இருப்பிடத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப் பட்டதாகவும் சுட்டவர் தப்பிச் சென்று விட்டதாகவும் பத்திரிகைச் செய்தியொன்று கூறியது. நடந்துள்ள இவ்விடயங்களை உற்றுநோக்குமிடத்து இலங்கையில் இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சீரழிவுகளுக்கு மத்தியிலும் ஏற்பட்டுள்ள பூகோள மற்றும் பிராந்திய அரசியல் நகர்வுகளும் இலங்கையின் உள்நாட்டு அரசியல் திருகுதாளங்களும் இலங்கையை பொருளாதார மீட்சிப்பாதையிலிருந்து வெகுதூரம் நகர்த்திவிடக் கூடிய ஏது நிலைகளை தென்படுகின்றன. இவை சிறுபான்மைத் தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமன்றி எதையும் சீர்தூக்கி ஆராயாமல் சுயபுத்தியின்றி சொல்புத்தியில் உணர்ச்சிவசப்பட்டு முடிவெடுக்கும் சிங்கள மக்களுக்கும் ஒருபோதும் நன்மை தராது.

எவ்வித அச்சமுமின்றி நெற்றிக்கண்ணைத் திறக்கும் ஒருவர் இப்போது நாட்டிற்கு தேவை.

# பிரபாகரன் மரணிக்கவில்லை!



வி.தேவராஜ்
மூத்த
ஊடகவியலாளர்

• தலைவரின் உயிப்பு யாருக்குத் தேவை?
• தமிழ் மக்களை பேரழிவுக்குள் சிக்க வைக்கப் போகின்றார்கள்

தஞ்சாவூர் மாவட்டம் வில்லாரில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் தமிழ் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் செய்தியாளர்களிடம் பேசுகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வி. பிரபாகரன் இன்னும் உயிருடன் இருக்கிறார் என்று தெரிவித்துள்ளார். இந்தச் செய்தி இலங்கையைவிட இந்தியாவிலேயே பரபரப்பாகப் பேசப்பட்டது. இந்திய ஊடகங்களில் தலைப்புச் செய்திகளாகவும் மாறியது.

பழ.நெடுமாறன் அவர்கள் மேற்படி அறிவிப்பை பெப்ரவரி 13 ஆம் திகதி வெளியிடப் போகின்றார் என்ற செய்தி தமிழகத்தில்மாத்திரமல்ல புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் முதல் நாளான 12 ஆம் திகதியே பரவத் தொடங்கியது.

புலம்பெயர் தமிழர்கள் பலர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் குறித்த மேற்படி அறிவிப்பை வெளியிட வேண்டாமென பழ நெடுமாறன் அவர்களிடம் கேட்டுக் கொண்டதாக தற்போது செய்திகள் வெளிவந்துள்ளன. அத்தகைய வேண்டுகோள்களைப் புறம் தள்ளி பழ நெடுமாறன் அவர்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். தற்போது இந்த அறிவிப்பு பேசுபொருளாக மாறியுள்ளது.

வல்லுநர்கள் நெடுமாறனின் அறிக்கையை ஒதுக்கித் தள்ளுகிறார்கள், அவர் கடந்த காலங்களிலும் இதே போன்ற கூற்றுக்களை தொடர்ச்சியாகக் கூறி வந்துள்ளார் என்று "த இந்து" குறிப்பிட்டுள்ளது.

• தமிழர்களுக்கு நன்மை பயக்கும் தாக்கத்தை ஏற்படுத்தாது

அந்தச் செய்தியில் மூத்த தமிழ் ஊடகவியலாளர் வி.தனபாலசிங்கம், இலங்கையின் அரசியலில் இந்த அறிக்கையால் ஏற்படக்கூடிய பாதகமான தாக்கம் குறித்து கவலை தெரிவித்துள்ளார்.

"இலங்கை ஆயுதப் படைகளின் பலத்தைக் குறைப்பதற்கும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகளை எதிர்க்கும் இனவாத சக்திகளின் கரங்களை இந்த அறிக்கை பலப்படுத்தலாம். இது தமிழர்களுக்கு எந்த விதத்திலும் நன்மை பயக்கும் தாக்கத்தை ஏற்படுத்தாது" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மறுபுறம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் மகள் துவாரகா தலைமையில் ஈழ விடுதலைக்கான அரசியல் இயக்கம் தொடங்கப்படலாம் அதனை மத்திய பாஜக அரசு ஆதரிக்கலாம். இதற்காகவே பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்கிற செய்திகள் பரப்பிவிடப்பட்டிருக்கலாம் என பிரபாகரனுக்கு நெருக்கமான தமிழ்நாட்டு அரசியல் தலைவரான தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கோவை ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். என்ற செய்தியும் வெளிவந்துள்ளது.

• சுபாஷ் சந்திரபோஸின் செய்தியைப் போலவே பிரபாகரனின் மரணமும் மர்மமாகவே இருக்கும்.

உள்நாட்டுப் போருக்குப் பிறகு உடனடியாக இலங்கை அரசால் அறிவிக்கப்பட்ட போர்க்களத்தில் பிரபாகரன் இறந்தார் என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியாது. அவரது மரணத்தை உறுதிப்படுத்துவது இலங்கை அரசாங்கத்தின் அரசியல் மற்றும் இராணுவ நோக்கத்திற்காக இருந்தது. பிரபாகரன் போர்க்களத்தில் இறந்திருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். அவரது மரணத்தில் உச்சக்கட்ட சந்தேகங்கள் இருப்பதால், இந்திய தேசியவாத மாவீரன் சுபாஷ் சந்திரபோஸின் செய்தியைப் போலவே அவரது மரணமும் தொடர்ந்து மர்மமாகவே இருக்கும். என்று மலேசியாவின் பினாங்கு துணை முதல்வர் பேராசிரியர் ராமசாமி தெரிவித்துள்ளார்.

போஸைப் போலவே பிரபாகரனும் சாதாரண தலைவர் இல்லை. போர் 2009, இல் மௌனிக்கப்படும்வரை உலகின் கடுமையான தேசிய விடுதலை இயக்கங்களில் ஒன்றான விடுதலைப் புலிகளின் தலைவராக இருந்தார். பிரபாகரன் மீதான மரியாதை மற்றும் மரியாதையைக் கருத்தில் கொண்டு, அவரது மரணம் உண்மையாக இருந்தாலும் கூட, உணர்வு ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாத பிரிவினர் தமிழர்களிடையே உள்ளனர். நிச்சயமாக, பிரபாகரன் சாகவில்லை என்பதை இன்னும் சில தமிழ் தேசியவாத இயக்கத்தின் தமிழ்நாட்டின் சில தலைவர்கள் அவரை உயிரோடு வைத்திருக்கிறார்கள். நெடுமாறன் அப்படிப்பட்ட தலைவர். என்றும் பேராசிரியர் ராமசாமி குறிப்பிடுகின்றார்.

பிரபாகரன் இறக்கவில்லை என்ற உண்மையை உயிருடன் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் உளவியல் கூறுகளைக் கொண்டுள்ளது. ஆனால் அரசியல் நோக்கமும் உள்ளது. எனக் கூறும் பேராசிரியர் ராமசாமி

• இது இந்தியாவில் மட்டுமல்லாது ஏனைய நாடுகளிலும் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கான நகர்வுகளை சிக்கலாக்கி ஏமாற்றமடையச் செய்யலாம்.
• இரண்டாவதாக, பிரபாகரனின் உடனடித் திரும்புதல் பற்றிய தவறான நம்பிக்கையை இலங்கையிலும் பிற இடங்களிலும் உள்ள தமிழ் அமைப்புகளுக்கு வழங்கலாம்.
• பிரபாகரன் இறந்தாலும், உயிரோடு இருந்தாலும் பரவாயில்லை. தற்போதைய தமிழினத் தலைமைகள் பல்வேறு பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சூழ்நிலைகளின் கீழ் விடுதலைப் போராட்டத்தைத் தக்கவைப்பதற்கான வழிகளையும் வழிமுறைகளையும் கண்டறிய வேண்டும் என்றும் தாயக தமிழ்த் தலைமைகளுக்கு அவர் அறிவுரையும் வழங்கியுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ

இலங்கையில் சிங்கள அரசியல்வாதிகள் ஒருமித்த குரலில் பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார் என்றே கூறி வருகின்றனர். இந்நிலையில் 2009-ம் ஆண்டு பிரபாகரன் மரணம் அடைந்ததாக சொல்லப்பட்ட காலத்தில் இறுதி யுத்தத்தை முன்னெடுத்த இலங்கை பாதுகாப்புத் துறை செயலரும் பின்னாளில் ஜனாதிபதியானவருமான கோத்தபாய ராஜபக்சேவும் கருத்து தெரிவித்துள்ளார்.

மனநோயாளிகள்தான் பிரபாகரனை முன்வைத்து அரசியல் செய்வார்கள். பிரபாகரனின் உடலை கைப்பற்றி எரித்த 2009-ம் ஆண்டே அத்தனையும் முடிந்து போய்விட்டது. முடிவுக்கும் வந்துவிட்டது. பிரபாகரன், மனைவி, மகள், மகன்கள் அனைவருமே 2009-ம் ஆண்டு இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டுவிட்டனர். ஆகையால் பிரபாகரனை முன்வைத்து அரசியல் செய்கிற மனநோயாளிகளுக்கு நாம் பதிலளிபது வெட்கக் கேடானது என கூறியுள்ளார்.

• முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

இதேபோல் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பிரபாகரன் உயிரோடு இருப்பதை நிராகரித்துள்ளார். 2009-ம் ஆண்டு பிரபாகரன் மரணம் அடைந்துவிட்டார். அப்போதே உறுதி செய்துவிட்டோம் என்றார்.

• சரத் பொன்சேகா

இலங்கை முன்னாள் ராணுவ தளபதி சரத் பொன்சேகா, 14 ஆண்டுகளாக பழ.நெடுமாறன் பொய்யையே திரும்ப திரும்ப சொல்லி வருகிறார். இ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் கடைசி துப்பாக்கி குண்டு வரை எதிர்கொண்டார். அதனால் அவர் மீது எனக்கு மிகுந்த மரியாதை எப்போதும் இருக்கிறது. என கூறியுள்ளார்.

இவ்வாறு தமிழக ஊடகங்களின் பெரும் பகுதியை பழ நெடுமாறன் ஐயா நிரப்ப வைத்துவிட்டார்.

ஆனால் இந்திய ஊடகங்களில் குறிப்பாக தமிழக ஊடகங்களில் காணப்பட்ட சலசலப்பை இலங்கை ஊடகங்களில் காண முடியவில்லை.

• தலைவரின் உயிப்பு யாருக்கு வேண்டும்

இந்தச் செய்திகளுக்குள் தேசியத் தலைவரின் உயிப்பு திடீரென இப்போதைக்கு யாருக்குத் தேவைப்படுகிறது என்ற ஆராய்ச்சிகளும் ஊடகங்களில் காணலாம்.

• இராணுவ ஆய்வாளர் அருஸ்

இலண்டன் இராணுவ ஆய்வாளர் அருஸ் "தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் இறந்துவிட்டார் என்று தமிழ் அமைப்புக்கள் உறுதிப்படுத்தவில்லை. இலங்கை அரசாங்கமே அவருடைய இறப்பை உறுதிப்படுத்தியுள்ளது.

நெடுமாறன் அவர்களின் கூற்றில் பின்புலம் உள்ளது. இதன் பின்னணியில் இந்தியாவே உள்ளது. இந்தியா இன்று முகம் கொடுக்கின்ற இன்றைய உள் நாட்டு நெருக்கடிகள் மற்றும் பூகோள அரசியல் நிலைமைகளால் ஏதாவது நகர்வை மேற்கொண்டாக வேண்டும் என்ற நிலையில் பழ நெடுமாறனின் கூற்றின் பின்புலத்தில் உள்ளது.

இந்த அறிக்கை மூலம் தமிழ் மக்களுக்கும் உலக நாடுகளுக்கும் இடையில் பிரச்சனைகளை ஏற்படுத்துவதாகவே உள்ளது. இதற்கும் அப்பால் தமிழ் மக்களை இந்திய நலன்களுக்காக பேரழிவுக்குள் சிக்க வைக்கப் போகின்றார்கள்" என்றும் பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளையில் இந்த விவகாரம் குறித்த தமிழ் மக்களின் உணர்வலைகள் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

• இந்த அறிவிப்பு தமிழீழ விடுதலைப் புலிகள் மூலமாக ஏன் வெளிவரவில்லை. தலைவர் மூலமாகவோ அல்லது விடுதலைப் புலிகள் மூலமாகவோ இந்த அறிவிப்பு வெளிவராமல் மூன்றாம் தரப்பின் மூலம் வெளிவருவது மர்மம் நிறைந்ததாக உள்ளமை சிந்திக்க வேண்டியதாக இருக்கின்றது.
• பிரபாகரன் என்ற குண்டைத் தூக்கிப்போட்டு அதானி விவகாரத்தை மூடிமறைத்துவிட்டார்கள்.
• தமிழ் மக்களை மீண்டும் பலி கொடுக்க இந்தியா தயாராகிவிட்டது
• தமிழக மக்களே இதனை நம்பாதீர்கள்.
• ஈழத் தமிழர்களை மீண்டும் புதைகுழிக்கு இழுத்துச் செல்லாதீர்கள். இந்திய அரசியல் நலன்களுக்குள் தமிழர் வாழ்வை புதைக்காதீர்கள்.

இவ்வாறு பல விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றன.

மொத்தத்தில் தமிழ்மக்களை மீண்டும் ஒரு முள்ளி வாய்க்கால் நோக்கி இழுத்துச் செல்வதாகவே இந்திய அரசின் பின்பலத்திலான பழ நெடுமாறன் ஐயா அவர்களின் அறிவிப்பு அமைந்துள்ளது.

ஆனால் பழ நெடுமாறன் ஐயா கூறியதில் ஒரு உண்மை தொக்கி நிற்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் மரணிக்கவில்லை என்பது உண்மைதான்.

2009 ஆம் ஆண்டு மே 19 ஆம் தகதி அதிகாலையில் இலண்டனில் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு எனக்கு வந்தது. அந்த அழைப்பை ஏற்படுத்தியவர் எனது பல்கலைக்கழக சகாவான பத்தர். அதாவது கேபி என்று அழைக்கப்படும் பத்மநாதன். "தலைவர் இறந்துவிட்டார். தமிழ் உலகம் அவருக்கு மாபெரும் அஞ்சலி செலுத்த வேண்டும்" என்றார். அவ் வேளையில் எனது மனதும் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தது.

இந்தச் சம்பவம் நடைபெற்று சிறிது காலத்திற்குப் பிறகு எனது "கேசரி" இளம் பத்திரிகையாளர்களுடன் போர் நடந்த பகுதிகளுக்கு செய்தி சேகரிப்புக்காகவும் மக்களின் போர்க்கால நேரடி அனுபவங்களையும் பெறுவதற்காக சென்றிருந்தோம்.

அவ்வேளையில் அனுமதிக்கப்பட்ட நந்திக் கடல் பகுதியில் ஒரு உருவம் கடலை வெறித்து பார்த்துக் கொண்டிருந்தது. போரின்போது ஷெல்கள் அவரது உடம்பைப் பதம் பார்த்ததுடன் ஒரு காலையும் ஊனமாக்கி இருந்தது. தமது உறவுகளையும் சுற்றத்தாரையும் இழந்து தனி மரமாக நின்று கொண்டிருந்த அவரை அணுகினேன்.

• "தலைவரின் வரவுக்காகக் காத்திருக்கின்றோம்"

"இளைஞர்களின் வீரம் விளைந்த மண் இது என்றார். "ஷெல் வீச்சுக்குள்ளும் நாம் எல்லோரும் சுதந்திரக் காற்றை சுவாசித்தோம். அந்த சுதந்திரம் முழுமையாக எமக்குக் கிடைக்காது போய்விட்டது. இந்தக் கனம் எம் முன் அவர் வந்து நின்றால் நாங்கள் அணைவரும் அணிவகுத்து அவர் பின்னால் போய்விடுவோம்" என்றவர் "தலைவரின் வரவுக்காகக் காத்திருக்கின்றோம்" என்று கூறி முடித்தார்.

• "தலைவர் மரணிக்கவில்லை"

இவருக்கு தலைவர் மரணிக்கவில்லை. இதே மன நிலையில்தான் ஒட்டு மொத்த தமிழினமும் உள்ளது என்பதை "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்ற வாசகத்தை போரின் எச்சமாக நின்றபோதும் நெஞ்சை நிமிர்த்தி அவரின் வரவுக்காகக் காத்திருக்கின்றது அந்த ஜீவன்.

தலைவர் மரணிக்கவில்லை.காலத்தை வென்று தமிழ் மக்களின் மனங்களில் வாழ்கின்றார் என்பதையே பழ நெடுமாறன் ஐயாவின் கூற்று 2009 க்குப் பிறகு உணர்த்தி நின்றது.

ஆனால் இன்றைய அவரது கூற்று?

Email : vathevaraj@gmail.com

# இலங்கை: “F” சொல்பற்றிய அதிகாரப் பகிர்வு, பிரிவினை மற்றும் தற்போதைய விவாதங்கள்

*(கடந்த வாரத் தொடர்ச்சி)*

கூட்டாட்சி: இலங்கையில் ”**F**” வார்த்தை

1983 ஆம் ஆண்டில், ஆயுதமேந்திய தமிழ்-பிரிவினைவாத இயக்கத்தின் முதல் ஆண்டுகளில், பிரிவினைவாத எதிர்ப்பு ஏற்பாடு அரசியலமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்டது. பிரிவு 157**A** (4) ன் படி இலங்கையின் எல்லைக்குள் ஒரு தனிநாடு அமைப்பதை மற்றச் சங்கங்கள் அல்லது அமைப்பின் எந்தவொரு அரசியல் கட்சியும் அதன் நோக்கங்களில் ஒன்றாகவோ அல்லது நோக்கமாகவோ இருந்தால், எந்தவொரு நபரும் அத்தகைய அரசியல் கட்சியை அறிவிப்பதற்காக உச்ச நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யலாம். இத்தகைய அறிவிப்பு வெளியிடப்பட்டவுடன், அரசியல் கட்சி அல்லது அமைப்பு தடைசெய்யப்பட்டு, அத்தகைய கட்சி அல்லது அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவர் நாடாளுமன்றத்தில் தனது இருக்கையை காலி செய்ய வேண்டும். .

சேனாதிராசாவுக்கு எதிராக மனுதாரர் சந்திரசோமா தொடுத்த வழக்கில் இலங்கையின் எல்லைக்குள் தனிநாடு அமைப்பதை பெடரல் கட்சி தனது நோக்கங்களாகவும் ஆட்சேபனையாகவும் கொண்டுள்ளது என்று அறிவிக்க வேண்டும் என்று கோரினார். உச்ச நீதிமன்றம், கட்சியின் அரசியலமைப்பு மற்றும் கட்சி அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்பட்ட பிரமாணப் பத்திரங்கள் மூலம், கூட்டாட்சி கட்சி ஐக்கிய இலங்கைக்குள் ஒரு கூட்டாட்சி அரசை நிறுவப்படுவதை ஆதரிக்கிறது அல்லது வாதிடுகிறது, ஆனால் தனிநாடு அல்ல என்று கூறியது. தற்போதுள்ள நாட்டிற்குள் ஒரு கூட்டாட்சி அரசாங்கத்தை ஆதரிப்பது பிரிவினைவாதத்தை ஆதரிப்பதாகக் கருத முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

இலங்கை அரசியலில் கூட்டாட்சி என்பது ஒரு ‘அழுக்கான வார்த்தை“ யாக மாறியுள்ளது. மக்கள் கூட்டணி அரசாங்கத்தின் 1997 முன்மொழிவுகள் அரசை ‘பிராந்தியங்களின் ஒன்றியம்’ என்று வர்ணிக்க முற்பட்டபோது பலத்த எதிர்ப்பு உருவானது. இதற்குப் பதிலளிக்கும் வகையில், பொதுசன முன்னணியின் அரசியலமைப்பு சட்டமூலம் 2000 முன்மொழியப்பட்ட உறுப்புரை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது: “இலங்கைக் குடியரசு ஒரு தன்னுரிமை, இறையாண்மை மற்றும் சுதந்திரமான அரசாகும், இது மத்திய மற்றும் பிராந்தியங்களின் நிறுவனங்களை உள்ளடக்கிய அரசியலமைப்பு.“ இந்த மசோதாவுக்கு நாடாளுமன்றத்தில் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை சேகரிக்க முடியவில்லை. வல்லுநர் குழுவின் பெரும்பான்மை அறிக்கை பின்னர் உடன்பாட்டில் கூறியது போல், அரசின் இயல்பை விவரிப்பதில் ஒற்றையாட்சி, கூட்டாட்சி, பிராந்தியங்கள்/ மாகாணங்களின் ஒன்றியம் போன்ற தனித்துவமான வெளிப்பாடுகளைப் பயன்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும்.

எந்தவொரு அதிகாரப் பகிர்வையும் எதிர்க்கும் சிங்கள தேசியவாதிகள் அதிகாரப் பகிர்வைக் கூட்டாட்சி வாதத்துடன் சமப்படுத்துகின்றார்கள். மேலும் அதிகாரப் பகிர்வானது பிரிவினைக்கு வழிவகுக்கும் என்ற காரணமில்லாத வீண் பயத்தை எழுப்பியுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் கூட்டு அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட தற்போதைய அரசியலமைப்பு சீர்திருத்த செயல்பாட்டில் இது ஒரு பெரும் சிக்கலாக மாறியுள்ளது. அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கிய அரசியலமைப்பு பேரவையானது, தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறக்கூடிய புதிய அரசியலமைப்பு சட்டமூலத்தை முன்மொழிவதற்கு பணிக்கப்பட்டுள்ளது.

”ஒற்றையாட்சி அரசு” மற்றும் பிரிவினை

ஒரு அரசை ”ஒற்றையாட்சி அரசாக” அங்கீகரிப்பது அதன் ஆட்புல உறுதிப்பாட்டை மற்றும் பிரிக்கமுடியாத தன்மையை உறுதி செய்கிறதா? இது தற்போதைய விவாதத்தில் எழுப்பப்பட்ட முக்கிய சிக்கலாகும். அரசியலமைப்பு சபையின் வழிகாட்டுக் குழு தனது அண்மைக்கால இடைக்கால அறிக்கையில் கூறியதாவது:

ஒரு மாநிலத்தை ஒரு ”ஒற்றுமை கொண்ட மாநிலமாக” அங்கீகரிப்பது அதன் நிலப்பரப்பு முழுமை மற்றும் பிரிக்கமுடியாத தன்மையை உறுதி செய்கிறதா? இது தற்போதைய விவாதத்தில் எழுப்பப்பட்ட முக்கிய பிரச்சினையாகும். அரசியலமைப்பு சபையின் இயக்குநரகம் தனது சமீபத்திய இடைக்கால அறிக்கையில் கூறியதாவது:



**ஜெயம்பதி விக்ரமரத்ன**

அரசியலமைப்பு பேரவையை அமைக்கும் தீர்மானத்தின் மீது உரையாற்றிய சனாதிபதி, தெற்கில் உள்ள மக்கள் “கூட்டாட்சி“ **('Federal')** என்ற சொல்லுக்கு அஞ்சும் அதே வேளையில் வடக்கில் உள்ள மக்கள் ஒற்றையாட்சி **('Unitary')** என்ற சொல்லுக்கு அஞ்சுவதாகக் குறிப்பிட்டார். அரசியலமைப்பு என்பது மக்கள் பயப்பட வேண்டிய ஆவணம் அல்ல. “ஒற்றையாட்சி அரசு“ என்ற ஆங்கிலச் சொல்லுக்கான மரபுசார்ந்த **(classical)** வரையறை மாறிவிட்டது. ஐக்கிய இராச்சியத்தில், இப்போது வடக்கு அயர்லாந்து மற்றும் ஸ்கொட்லாந்து யூனியனில் இருந்து விலகுவது சாத்தியமாகும். எனவே, **‘Unitary State’** என்ற ஆங்கிலச் சொல் இலங்கைக்கு ஏற்புடையதாக இருக்காது. ‘ஏக்கிய ராஜ்ய’ என்ற சிங்களச் சொல் பிரிக்கப்படாத மற்றும் பிரிக்க முடியாத நாட்டைச் சிறப்பாக விவரிக்கிறது. இதற்கு இணையான தமிழ் “ஒருமித்த நாடு”.

ஐக்கிய இராச்சியம் நீண்ட காலமாக ஒரு முன்மாதிரியான ஒற்றையாட்சி நாடாகக் கருதப்படுகிறது. நாடாளுமன்ற இறையாண்மை பற்றிய பிரிட்டிஷ் கோட்பாட்டின்படி, நாடாளுமன்றம் ஐக்கிய இராச்சியத்தில் எந்தவொரு சட்டத்தையும் உருவாக்க அல்லது இரத்து செய்யக்கூடிய உயரிய சட்ட அதிகாரமாகும். எந்தவொரு சட்டத்தையும் எதிர்கால நாடாளுமன்றத்தால் மாற்ற முடியும் மற்றும் நீதிமன்றங்கள் நாடாளுமன்ற சட்டத்தை மீற முடியாது. ஐக்கிய இராச்சியத்திற்கு எழுதப்பட்ட அரசியலமைப்பு இல்லை, ஆனால் எழுதப்படாத அரசியலமைப்புக் கோட்பாடுகள் பின்பற்றப்படுகின்றன. அரசியலமைப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல சட்டங்களையும் கொண்டுள்ளது.

ஒரு ‘ஒற்றையாட்சி அரசு’ என்றால், அதன் ஆட்புல ஒருமைப்பாடு உறுதிப்படுத்தப்பட்ட ஒரு அரசு என்றால், பின்னர் ஐக்கிய இராச்சியம் ஒரு ஒற்றையாட்சி நாடாக இல்லை.

*(தொடர்ச்சி 20ம் பக்கம்)*

கனடிய செய்திகள்
Canadian News

## Consulate General of India, in Toronto Ms. Apoorva Srivastava meets Indian Languages, Tamil and English Media Editors, at the Media Reception she hosted at Holiday Inn in Mississauga.

# இந்திய மொழிப் பத்திரிகைகள், தமிழ் பத்திரிகைகள் மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகள் ஆசிரியர்களைச் சந்தித்த ரொறன்ரோ இந்திய



கனடா ரொறன்ரோ மாநகரில் உள்ள இந்திய துணைத்தூதுவராலயத்தில் துணைத்தூதுவராக பணியாற்றும் ஸ்ரீமதி அபூர்வா ஸ்ரீவஸ்டவ் அவர்கள் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள இந்திய மொழிப் பத்திரிகைகள், தமிழ் பத்திரிகைகள் மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகள் ஆகியவற்றின் ஆசிரியர்களைச் சந்தித்து உரையாடினார்.





மேற்படி ஊடகதுறை ஆசிரியர்கள் மற்றும் செய்தியாளர்கள் அனைவரையும் அழைத்து அவர் நடத்திய வரவேற்புபசார வைபவத்தில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று உரையாடி அவர்கள் அனைவரதும் கருத்துக்களையும் அவர் கேட்டறிந்தார்.





துணைத்தூதுவர் ஸ்ரீமதி அபூருவா ஸ்ரீவஸ்டவ் அவர்கள் அங்கு பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றிய போது கனடா - இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக மற்றும் கலாச்சார உறவுகள் சீராக இருப்பதாகவும் அவை இன்னும் முன்னேற்றம் காணும் வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதாகவும். அத்துடன் கனடாவில் மாத்திரம் சுமார் 80 ஆயிரம் தொழில் வல்லுனர்கள் இந்திய கடவுச்சீட்டுக்களுடன் பணியாற்றி வருவதாகவும் கனடாவின் பொருளாதார மேம்பாட்டிற்காக இந்திய பிரஜைகள் அதிக பங்களிப்புச் செய்வதைக் கண்டு தான் பெருமை கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

ஓம் சாந்தி

# பிறவி பிறவியாக தேடிய பக்தரை பகவான் தேடி வந்ததன் ஞாபகார்த்தமே சிவராத்திரியாகும்.

மனிதர் பல பிறவிகளாக தம் துன்பம் தீரவேண்டுமென பக்தி செய்து கொண்டு வருகின்றனர். அதில் சிவராத்திரி விரதமும் சிவனைக் குறித்து அனுட்டிக்கும் மகத்துவமான விரதமாகும். பக்தியின் சம்பிரதாயங்கள் அனைத்தும் இறைவனைப்பற்றி தம் பதிவுகளில் இருந்து மனிதர்களால் உருவாக்கப்பட்டவை ஆகும். பலவீனத்தால் பாவம் செய்கின்ற மனிதர் தமக்கு தெரிந்த வழியில் விக்கிரகங்களையும் அமைத்து வழிபாட்டு முறைகளையும் உருவாக்கி செய்தாலும் கூட துன்பம் தீரவில்லை. மாறாக அதிகரிக்கிறது.

இதிலுள்ள சில அம்சங்களை நோக்கினால் அதில் பகவானின் அவதாரத்தையே குறிப்பது தானாக விளங்கிக் கொள்ளமுடிகிறது.

1. சிவலிங்க வழிபாடு

ஆத்மாக்கள் வந்து சரீரமெடுத்து வாழும் இப்பௌதீக உலகில் தனக்கென சரீரமெடுக்காதவரான சிவன் வந்து நன்மை செய்ததாலேயே அந்த நன்மையை அனுபவித்த மனிதரின் பதிவுதானே சிவலிங்கமாக அமைத்து வழிபாடு செய்கின்றனர்.

2. சிவலிங்கத்தின் தோற்றம்

ஒளிபுள்ளி வடிவமான சிவனும் அவரிடமிருந்தான ஒளியையும் காட்டும் மேல் பகுதியும் மனித வடிவிலிருக்கும் தன் குழந்தைகளோடு பேசி வழிகாட்டுவதற்காக ஒரு மனித சரீர ஆதாரத்தை எடுத்ததை விளக்குவதாக கீழே வட்டமான பகுதியையும் அமைத்துள்ளனர். சிவனின் வழிகாட்டல் எனும் ஞானத்தை தான் எடுத்த சரீரத்தினூடகவே தருகின்றார் என்பதையே கீழ் பகுதியிலிருந்தே அமிர்தம் பெறுவதாக காட்டுகிறார்கள்.

3. இராத்திரியில் வழிபாடு:

மனித ஆத்மாக்கள் தெய்வீகக் குணங்களைக் கொண்டவர்கள். ஆனால் பலவீனப்பட்டதால்தான் விவேகமற்றவராகி அறியாமைக்குட்பட்டு தவறான குணங்களான காமம் கோபம் பற்று பேராசை அகங்காரம் எனும் பஞ்ச விகாரங்களின் ஆதிக்கத்தினால் தாமே செய்த பாவங்களால் தாமே துன்பத்தை அனுபவிக்கின்றனர். இத்தகைய அறியாமை எனும் இருளான மனித நிலையைப் போக்க அவதரித்தமையையே பௌதீக இரவில் வருவதாக அதே மனிதரே காட்டுகின்றனர்.



4. கண் விழித்து விரதம் அனுட்டித்தல்:

அறிவுக்கண்ணை விழிப்படைய வைக்க சிவன் வந்ததை பின் தம் விளக்கத்தின் அடிப்படையில் பௌதீகக் கண் விழிப்பதாக ஏற்படுத்தி செய்கின்றனர். ஆனாலும் தம் இறைவனைச் சந்தித்த பதிவு காண்போம் என்ற திடசங்கற்பமே அவர்களது விரதம் குறிக்கிறது.

ஆனால் இவ்வளவும் சந்தித்த பதிவின் வெளிப்பாடே தவிர அவரைக் காணவைக்கும் வழியல்ல. பௌதீகக் கண்களால் காணமுடியாதவர். தற்போது அவர் வந்து பிரம்மாவின் சரீர ஆதாரத்தை எடுத்து தன்னை அறிவிப்பதுடன் தன் குழந்தைகளின் மாற்றத்திற்காக வழிகாட்டும் ஞானத்தையும் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். ஏனெனில் இதுவே வாழ்க்கை எனும் சக்கரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் சக்கரத்தின் இறுதிவேளையான கலியுகத்தின் இறுதியாகும்.

5. காலமும் கடவுளும்:

கடந்த பல பிறவிகளாக துன்பத்தை அனுபவித்தாலும் கடவுள் வரும்வரை தமக்கு தெரிந்த வழிகளில் முயற்சி செய்தது நியாயமானது. ஆனால் பழைய உலகம் முடிவுக்கு வரவேண்டிய இந்த நேரம் படைப்பவரான கடவுள் வரவேண்டும். ஆகவே வழிகாட்ட வந்துவிட்டார். ஆகவே காலத்தின்படி கடவுளிடம் கற்று ஞானோதயம் பெறவேண்டிய நேரம் பொம்மைகளோடு விளையாடும் குழந்தைகளாக பக்தியின் சம்பிரதாயங்களோடு விளையாடிக்கொண்டிருக்கலாமா? சிந்தித்து செயற்படுபவனே மனிதன் அறியாமை போக்குவதற்கே ஆண்டவனின் ஞானம் மட்டுமல்ல சக்தி பெற யோகத்தையும் கற்பிக்கின்றார்.

6. பிரம்ம குமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக் கழகம்

ஒவ்வொரு கல்பத்திலும் இறுதியில் மட்டுமே இயங்கும் இந்த இறை பல்கலைக்கழகம் மூலம் இறைவன் தற்போது உலகெங்குமுள்ள குழந்தைகளுக்காக ஆன்மீக சேவையைச் செய்து கொண்டிருக்கின்றார். அதாவது 5000 வருட சக்கரத்தில் இறுதி 100 வருடங்கள் மட்டுமே கடவுளின் காலம் ஆகும். அதுவும் கூட முடிவுக்கு வரும் இவ்வேளையிலும்

விழிப்படையாத சிவராத்திரியா? சிந்தித்து எம்மைச் சீரமைப்போமா?

**திருமதி. ஞானா. தனபாலசுந்தரம்**
**பிரம்ம குமாரிகள் உலக ஆன்மீக பல்கலைக்கழகம்**

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS C R PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1036



## செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில் மட்டக்களப்பு

" மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணி புனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்து பின்னே."

ஒவ்வொரு நாட்டிலும் பண்டைக்காலந்தொட்டு மக்கள் தங்கள் சூழ்நிலைக்கேற்ப வழிபாட்டு முறைகளை ஏற்படுத்தி வந்துள்ளனர். இவ்வாறான வழிபாட்டு முறைகள் குறித்த சமூகங்களின் பழக்க வழக்கங்களுடன் ஒன்றுபட்டுக் காணப்பட்டன. பண்டைக்காலத்திலே தாயை வழிபடும்முறை பெரு வழக்காகக் காணப்பட்டுள்ளது. இதன் வழியாக அமைந்ததே அம்மன் வணக்கமுறை எனக் கருதப்படுகின்றது. இதன் ஒரு கூறாக வீரவழிபாடும் காணப்படுகின்றது. சங்க காலந்தொட்டுத் தமிழ் மக்கள் வீரவழிபாட்டைப் பேணி வந்துள்ளனர். சங்கநூல்களிலே காணப்படும் வீர வணக்கமுறை இதனைச் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. பிற்காலத்திலே எழுந்த அண்ணமார், நாச்சிமார், மதுரைவீரன், கண்ணகை அம்மன் முதலிய தெய்வ வழிபாடுகள் இவ்வீர வழிபாட்டின்கீழ் அடங்கும். சிறுதெய்வ வழிபாடாகக் காணப்பட்ட இவ் வழிபாட்டு முறைகள் பிற்காலத்திலே பெருங் கடவுளராகப் போற்றி, ஆகமமுறை தழுவிய கோவில்களை அமைத்தும் வழிபாடியற்றி வருகின்றனர்.

சோழநாட்டிலே தோன்றி, பாண்டி நாட்டிலே கணவனைக் கொலை செய்த பாண்டிய மன்னனைப் பழிவாங்கி, சேரநாட்டிலே சேரன் செங்குட்டுவனால் பத்தினி என்று போற்றப்பட்டு, விழா எடுக்கப்பட்ட கண்ணகியைத் தெய்வமாகப் பல இனத்தவர்களும் போற்றி வழிபாடு செய்து வருகின்றனர் கண்ணகி வழிபாடு சிறு தெய்வ வழிபாட்டினுள் அடங்குகின்றது. வேதாகம காலத்தில் இவ்வழிபாடு இருக்கவில்லை. நற்றிணை நானூறு என்ற நூலிலே 216 ஆம் பாடலில், மருதனிள நாகனார் பாடிய பாடலில் "ஒரு முலையறுத்த திருமாவுண்ணி" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவே கண்ணகி வழிபாடுபற்றிய ஆரம்பம் என ஆய்வாளர் கருதுவர். கண்ணகை அம்மனுக்குரிய மந்திரமோ, சுலோகமோ, யந்திரப்பிரதிட்டையோ, வேதாகமங்களிலே காணப்படவில்லை. இவற்றினை ஆதாரமாகக்கொண்டு கண்ணகிக்குப் பிராமணர் பூசை செய்வதை ஆறுமுக நாவலர் வன்மையாகக் கண்டித்தார். இவரது கண்டனத்தைத் தொடர்ந்து, ஈழத்திலிருந்த பல கண்ணகை அம்மன் ஆலயங்கள் இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயமாகப் பெயர் மாற்றம் பெற்றுள்ளன. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் கண்டனத்திற்கு ஆதாரபூர்வமான மறுப்புக்களை இதுவரை எவருமே தெரிவிக்கவில்லை.

இவ்வாறான நிலையிலும், பத்தினித் தெய்வமாகப் போற்றப்படும் கண்ணகி அம்மன் வழிபாடு, கிழக்கிலங்கை மக்களிடம் செறிவாகப் பரவியுள்ளது. மட்டக்களப்பு மாவட்டம் எங்கும் கண்ணகி வழிபாட்டு முறையைக் காணமுடியும். மட்டக்களப்பிலிருந்து கல்முனை, அம்பாறை, அக்கரைப்பற்று, திருக்கோவில், களுவாஞ்சிக்குடி ஆகிய இடங்களுக்குச் செல்லும் பிரதான பாதையிலே, மட்டக்களப்பிலிருந்து 12 கல் தொலைவிலே செட்டிபாளையம் அமைந்துள்ளது. இந்தியாவிலிருந்து வாணிபநிமித்தம் வந்த செட்டிமார். பாளையம் இட்டுத் தங்கிய இடமாகையால், இப்பிரதேசம் செட்டி பாளையம் எனக் காரணப் பெயர் பெற்றது.

கிழக்கே கடலும், மேற்கே மட்டக்களப்பு வாவியும், தெற்கே மாற்காடு கிராமமும், வடக்கே குருக்கள்மடம் கிராமமும், செட்டிபாளையத்தின் எல்லைகளாக உள்ளன. இவ்வாலயம் ஆரம்பகாலத்தில் முட்பற்றைகள் சூழ்ந்த காட்டினுள் சிறிய ஆலயமாகக் காணப்பட்டுள்ளது. பிற்றகாலத்திலே இப்பற்றைகள் அகற்றப்பட்டு பெருவீதி அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்பகாலத்திலே மடாலயமாகக் காணப்பட்ட இவ்வாலயம், தற்காலத்திலே ஐந்துதள அமைப்புடைய இராசகோபுரம், மற்றும் இரண்டு பக்கமும் மணித்தூண்கள் கொண்ட ஆலயமாக விளங்குகின்றது.

கிரான்குளம், குருக்கள்மடம், செட்டிபாளையம், மாற்காடு, தேற்றாத்தீவு, களுதாவளை ஆகிய கிராமமக்களின் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்பட்டுவரும் செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோவில் பழமையும் பெருமையும் மிக்கதாக விளங்குகின்றது. இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரப் பகுப்பினுள் அடங்காது தனித்திருப்பது, உரைபெறு கட்டுரை என்னும் பகுதியாகும். கோவலன் கொலைக்குப் பின்னர், பத்தினித் தெய்வமாகக் கண்ணகி உயர் நிலை பெற்றதையும், மன்னர்கள் கண்ணகிக்குக் கோவில் அமைத்து வழிபட்ட வரலாற்றையும் உரைபெறு கட்டுரை விளக்குகின்றது. அத்தோடு, கண்ணகி அருளால் இம்மன்னர்கள் ஆண்ட நாடுகளும் வளமை பெற்றன என்பதையும் உரைபெறு கட்டுரை விளக்குகின்றது. இவ்வாறாக கண்ணகித் தெய்வத்தின் உயர்வால் ஈர்க்கப்பட்ட மன்னர்களுள் ஒருவனாக, இலங்கையைச் சேர்ந்த கயவாகு மன்னனும் விளங்கியுள்ளான். இம்மன்னன் கி.பி. 2 ஆம் நூற்றாண்டிலே இலங்கையை ஆட்சி செய்துள்ளான். இம்மன்னனாலேயே கண்ணகி வழிபாடு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்செய்திகளை ஈழத்து வரலாற்று நூல்களாகக் கருதப்படும் இராஜலியும், இராஜரத்னாகரவும், கஜபாகத்தாவ என்னும் பத்தினிவரலாறு கூறும் சிங்கள நூலும் குறிப்பிட்டுள்ளன.

சேரன் செங்குட்டுவன் வஞ்சியிலே கண்ணகிக்குக் கோயில் அமைத்து விழாவெடுத்தபோது, அவ்விழாவிலே இலங்கைக் கஜவாகு மன்னனும் பங்குபெற அழைக்கப்பட்டுள்ளான். இதன்பின்னர் கண்ணகித் தெய்வத்தின் அற்புதங்களைக் கேள்விப்பட்டு, இலங்கை திரும்பியவுடன் இலங்கையிலும் கண்ணகி வழிபாட்டை உண்டாக்கிப் பெருவிழாச் செய்துள்ளான். அங்கணாக்கடவையிலும், வேறுபல இடங்களிலும் கண்ணகிக்குக் கோவில் அமைத்துள்ளான். இவ்வாறாக தமிழ் மக்களிடையே கண்ணகி வழிபாடாகவும், சிங்கள மக்களிடையே பத்தினிதெய்யோ வழிபாடாகவும் ஈழத்தில் கண்ணகி வழிபாடு சிறப்புப்பெற வழிசெய்தவன் இலங்கைக் கஜவாகு மன்னன் ஆவான்.

- வளரும்...

# இலங்கை: "F" சொல்பற்றிய அதிகாரப் பகிர்வு, பிரிவினை மற்றும் தற்போதைய விவாதங்கள்

*(18ம் பக்கத் தொடர்ச்சி)*

பெரிய பிரிட்டன் **(Great Britain)** மற்றும் அயர்லாந்தின் ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்றம் 1922 இல் ஐரிஷ் சுதந்திர மாநில அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்றியது, அயர்லாந்தை (வடக்கு அயர்லாந்து நீங்கலாக) ஒரு மேலாதிக்கமாக மாற அனுமதித்தது, மேலும் அயர்லாந்தின் வெளியேற்றத்துடன் எஞ்சிய பகுதி பெரிய பிரிட்டன் மற்றும் வடக்கு அயர்லாந்தின் ஐக்கிய இராச்சியமாக மாறியது.

ஐக்கிய இராச்சிய நாடாளுமன்றமே அயர்லாந்தின் பிரிவினைக்கு வழிவகுத்தது. வடக்கு அயர்லாந்தின் பெரும்பான்மை மக்கள் ஐக்கிய இராச்சியத்திலிருந்து பிரிந்து, அயர்லாந்துடன் ஒன்றிணைவது குறித்து முடிவு செய்ய முடியும் என்பதை அது அங்கீகரித்துள்ளது. ஸ்கொட்லாந்து ஐக்கிய இராச்சியத்திலிருந்து வெளியேறலாம் என்று பெரும்பான்மையான ஸ்கொட்லாந்து மக்கள் முடிவு செய்யலாம் என்பதையும் அது ஒப்புக்கொண்டுள்ளது. மேற்கூறியவை ஒரு அரசை "ஒற்றையாட்சி" மிக்கதாக விவரிப்பது, தனக்குத்தானே, பிரிவினைக்கு எதிரான தடையாக இல்லை என்பதை மேற்கூறியவை காட்டுகிறது.

இங்கிலாந்து நாடாளுமன்றமே அயர்லாந்தின் பிரிவினைக்கு வழிவகுத்தது. வடக்கு அயர்லாந்தின் பெரும்பான்மையான மக்கள் இங்கிலாந்தில் இருந்து பிரிந்து அயர்லாந்துடன் ஒன்றிணைவது குறித்த பிரச்சினையை தீர்மானிக்க முடியும் என்பதை அது அங்கீகரித்துள்ளது. ஸ்காட்லாந்து ஐக்கிய இராச்சியத்தை விட்டு வெளியேறலாம் என்று பெரும்பான்மையான ஸ்காட்லாந்து மக்கள் முடிவு செய்யலாம் என்பதையும் அது ஒப்புக்கொண்டுள்ளது. ஒரு மாநிலத்தை 'ஒற்றையாட்சி' என்று வர்ணிப்பது, பிரிவினைக்கு எதிரான ஒரு தடையல்ல என்பதை மேற்கூறியவை காட்டுகிறது.

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை

இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் ஆங்கிலப் பதிப்பில் இலங்கை அரசை "ஒற்றையாட்சி" என வர்ணிப்பது விரும்பத்தகாதது என்று அதிகாரப் பகிர்வின் ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர். இதன்படி மத்திய அரசுக்கும் மாகாண சபைக்கும் இடையில் எழும் கருத்து வேற்றுமைகள் மத்திய அரசுக்கு சாதகமாக முடிவு செய்யப்படுகிறது.

"ஒற்றையாட்சி" என்பது பாரம்பரியமான அர்த்தத்தில், அதிகாரங்களை மாற்றியமைப்பதன் மூலம் அரசியலமைப்பு மாற்றத்தால் மத்திய அரசு திரும்பப் பெறலாம் என்று அர்த்தம் என்றாலும், சட்டமன்றம், நிர்வாகம் மற்றும் நீதித்துறை கூட ஒவ்வொரு சாத்தியமான திருப்பத்திலும் அதிகாரங்களை மாற்றியமைப்பதை குறைமதிப்பிற்கு உட்படுத்திய பல நிகழ்வுகள் உள்ளன என்று அவர்கள் வாதிடுகின்றனர். அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவான நிர்வாகம் இல்லாததால் நிலைமை மோசமடைந்துள்ளது. இதுபோன்ற ஒரு "ஒற்றையாட்சி"யான மனநிலையின் எடுத்துக்காட்டுகள் ஏராளமாக உள்ளன.


புதிய அரசியலமைப்பில் சேர்ப்பதற்கான முன்மொழிவுகளை முன்வைக்கும் போது, அதி-காரப் பகிர்வுக்கு ஆதரவான சக்திகள் மற்றும் அதிகாரப்பகிர்வு பிரிவினைக்கு வழிவகுக்கும் என்று அஞ்சுபவர்களின் அச்சத்தை வழிநடத்தல் குழு கவனத்தில் எடுத்தது. (மிகுதி அடுத்த வாரம்)

(இந்தக் கட்டுரை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டாலும் 13 ஏ திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதுபற்றி இன்று ஆதரவாகவும் எதிராகவும் நடைபெறும் வாதத்துக்கு இன்னமும் பொருத்தமானது ஆகும்.
ஆங்கில மூலத்தை **http://50shadesoffederalism.com/case-studies/sri-lanka-devolution-secession-and-current-debates-on-the-f-word/** என்ற இணையதள முகவரியில் படிக்கலாம்.
அவரது மின்னஞ்சல் **jwickramaratne@yahoo.com.**
தமிழாக்கம்: *கனடா நக்கீரன்*)



# கவிஞர் நா.தேவதாசன் அவர்களின் "திருக்குறள் கவிதைகள்" நூல் வெளியீட்டு விழா

- ஏலையா க.முருகதாசன்




**ஜே**ர்மனி, இராட்டிங்கன் நகரில் கடந்த *11.02.23* அன்று, கவிஞர் திரு. நா. தேவதாசன் அவர்களால் எழுதப்பட்ட திருக்குறள் கவிதைகள் என்ற நூல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

திருக்குறள் அதிகாரம் ஒன்றான கடவுள் வாழ்த்திலிருந்து அதிகாரம் நூற்றிமுப்பத்தி மூன்று ஊடல் உவகை வரையுள்ள குறள்களுக்கு இந்நூலில் கவிஞர் திரு. நா. தேவதாசன் அவர்கள் இரண்டடிக் குறள் வழியில், வாசிப்போருக்கு எளிதில் பொருள் விளங்கக் கூடியதாக சிறப்பாக எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருக்குறளுக்கு பொருள் எழுதியோர் பலருண்டு. முதல் பொருள் எழுதிய பரிமேலழகரிலிருந்து டாக்டர் மு. வரதராசன், கலைஞர் கருணாநிதி எனப் பலரைச் சொல்லலாம்.

இவர்கள் அனைவரும் குறள் வரிகள் எதனைச் சுட்டிக்காட்டியதோ அதன் மையக் கருத்திலிருந்து விலகாமல் அவரவர் அதற்கான பொருளைச் சுட்டி நிற்கும் வார்த்தைகளைக் கையாண்டு எழுதியிருந்தார்கள்.


கவிஞர் திரு. நா. தேவதாசன் அவர்கள், இவர்கள் அனைவரிலிருந்தும் வேறுபட்டு, சிந்தித்து இப்படியும் எழுதலாம் என ஒரு புதிய வழியில் தனித்துவமிக்கதாக எழுதியிருப்பது பாராட்ட வேண்டிய ஒரு முயற்சியாகும்.

இந்நூலில் உள்ள குறள்களைத் தவிர்த்துவிட்டுப் பார்க்கையில், திருவள்ளுவர் எவ்வாறு இரண்டடியில் பொருளுணர்த்தலாம் எனத் தனது குறள்கள் மூலம் ஒரு எழுத்துப் புரட்சி செய்தாரோ, அதைப் போன்று இந்நூலாசிரியரும் இன்றைய சமகாலத்தில் ஒரு எழுத்துப் புரட்சியைச் செய்துள்ளார் என்பதைத் துணிந்து சொல்லலாம்.

இத்தகு நூலொன்று தமிழ்நாட்டில் வெளிவந்திருந்தால் அங்கு இந்நூலின் தாக்கமே வேறாக இருந்திருக்கும்.

புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழ்க் கவிஞர் ஒருவர் எழுதிய இந்நூலைப் பெருமிதப்படுத்தும் வகையில் நாம் கொண்டாட வேண்டும்.

மண்டபநிறை சபையோர் முன்னிலையில் வெளியிடப்பட்ட இவ்விழா திருமதி. ஈஸ்வரி தேவதாசன், திருமதி. புனிதாம்பாள் ஞானசம்பந்தன் ஆகியோரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பித்து, அகவணக்கம் எனத் தொடர்ந்து திருமதி. சாந்தமலர் இரத்தினசிங்கம் அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்து, செல்வி. சுபைதா இரவீந்திரநாதன் அவர்களின் வரவேற்புரை, திரு. அம்பலவன் புவனேந்திரன் அவர்களின் ஆய்வுரை, திரு. செல்வகுமாரன் அவர்களின் வெளியீட்டுரை, திரு. நயினை விஜயன் கௌரவ விருந்தினர் உரை, திரு. ஏலையா க.முருகதாசன், திரு. சிறீஜிவகன் ஆகியோரின் சிறப்புரைகள், திரு. வ. மண் சிவராஜா திரு. ந. கதிர்காமநாதன் ஆகியோரின் வாழ்த்துரைகள் நூலாசிரியரின் நன்றியுரை என உரைகள் இடம்பெற்றிருந்தன.



# சட்டத்துறையில் கலாநிதிப் பட்டம்பெற்ற ஜெகநாதன் தற்பரன் அவர்களை கனடா உதயன் ஆசிரிய பீடம் வாழ்த்துகின்றது



**கொ**ழும்புத் தமிழ் சங்க பேரவை உறுப்பினர் சட்ட முதுமாணி. ஜெகநாதன் தற்பரன் அவர்கள் சட்டத்தில் தனது கலாநிதி பட்டத்தினை அண்மையில் பெற்றுக்கொண்டார். தற்பரன் அவர்கள் ஒரு வழக்கறிஞர், சிறுவர் உரிமைகள் செயற்பாட்டாளர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது சட்ட முதுமாணி கற்கையினை முடித்து, ஆயுத மோதல்களில் பாதிப்புற்ற சிறுவர்களின் பாதுகாப்பில் அரசுகளின் பொறுப்புடைமை குறித்து ஆய்வு செய்து முனைவர் விருதினை பெற்றுள்ளார்.

சட்டக் கல்லூரி உட்பட்ட பல்வேறு நிறுவனங்களில் விரிவுரையாளராகவும், சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் துஷ்பிரயோகம் மற்றும் அலட்சியம் ஆகியவற்றிலிருந்து சிறுவர் பாதிப்பு அடைவதனைத் தடுக்கும் சர்வதேச சங்கத்தின் மேதகு உறுப்பினராகவும் செயற்பட்டு வரும் இவர், தெற்காசியா, ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் தனது அனுபவங்களையும் ஆய்வு செய்து தனது எடுகோள்களினை ஆய்வு செய்து அனுபவ வழி நின்று சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக நிரூபித்துள்ளார்.

அரசியலமைப்புச் சட்டம், மனிதாபிமானச் சட்டம், பாதுகாப்பு என பல தளங்களில் பல ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். மேலும் அவர் சிறுவர்களுக்கான சமூக நீதி பெற்றுக் கொள்வதற்கான ஆசிய வழக்கறிஞர்களின் நிறுவனர் ஆவார்.

அத்துடன், சர்வதேச சட்டங்களில் பொறுப்புக்கூறலுக்கு ஏற்ப கடந்த இருபத்தி ஐந்து வருட காலமாக ஒரு சிறந்த பணியைச் செய்தமைக்காக அவரது சேவைகளுக்கான அங்கீகாரமாக அவருக்கு சிறப்பு கலாநிதி பட்டம் ஜப்பான் நாட்டில் தலைமை அலுவலகத்தினை கொண்டு இயங்கும் உலக அமைதிக்கான சர்வதேச பல்கலைக்கழகம் இந்தியாவில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் வழங்கி கௌரவித்திருந்தன.

கனடா உதயன் ஆசிரிய பீடம் கொழும்புத் தமிழ் சங்க பேரவை உறுப்பினரும் சட்டத்துறையில் கலாநிதிப் பட்டம்பெற்றவருமான. ஜெகநாதன் தற்பரன் அவர்களை வாழ்த்துகின்றது.

# குடும்ப தினம்

------------------------

குடும்பம் என்பது கோவில் போன்றது
குடும்பத் தலைவி ஒளிவிடும் விளக்கு
கடமை தவறாக் கணவன் பூசாரி
குழந்தைகள் உணர்வுள்ள வழிபடும் விக்கிரகம்
பேரன் பேர்த்திகள் வழிபடும் பக்தர்கள்
பேரப் பிள்ளைகள் கோவில் மணிகள்
தாரமாய் மகனால் தத்தெடுத்த காரிகை
தமது பொறுப்பை செவ்வனே செய்வரே!

ஓடியோடி ஓய்விலா உழைத்துக் களைத்தவர்
ஓரிரு நாட்கள் ஓய்ந்திட இயலோர்
கூடிக் களித்துக் கொண்டாட முடியாதார்
குடும்பமாய்த் தங்கி இருக்க வாய்ப்பற்றோர்
உண்ண நேரமும் உறங்கவும் வழியற்றோர்
உற்ற துணையுடன் உறவாட நேரமற்றோர்
வண்ணமாய் வாழ்த்துக் கூறியே கொண்டாடி
வாஞ்சை செலுத்தும் உன்னதத் திருநாளே!

வாங்கிய வீட்டில் வசிக்க நேரமின்றி
வசதியாய்க் கட்டிலில் படுக்க முடியாதோர்
தாங்கிய வீடுவிட்டுத் தனிவீடு சென்றோர்
தொழில் நாடித் தொலைநகர் ஏகினோர்
முதுமை காரணமாய் மூத்தோரகம் அடைந்தோர்
மாமன் மாமிகள் பேரன் பேர்த்திகள்
மதுவும் மாமிசமும் பரிமாறி உண்டே
மகிழ்வுடன் கொண்டாடும் தினமே இந்நாளே!

------------------------

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

# ஈரோடு இடைத்தேர்தல் நேர்மையாக நடைபெறுவது அவசியம்: தேர்தல் ஆணையம் உத்தரவாத அறிக்கை தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவு

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் நியாயமாகவும், நேர்மையாகவும் நடைபெறும் என்ற உத்தரவாதத்தை, தேர்தல் ஆணையம் அறிக்கையாக தாக்கல் செய்யுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.இதுகுறித்து அதிமுக அமைப்புச் செயலாளரும், எம்.பி.யுமான சி.வி.சண்முகம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில் கூறியிருப்பதாவது:ஈரோடு இடைத்தேர்தலில், அதிகாரிகள் ஆளுங்கட்சிக்கு சாதகமாக செயல்பட்டு வருகின்றனர். வாக்காளர் பட்டியலில், தொகுதிக்கு சம்பந்தமில்லாதவர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இறந்த வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்படவில்லை. பல வாக்காளர்களின் பெயர்கள் 2க்கும் மேற்பட்ட இடங்களில் இடம்பெற்றுள்ளன.


தொகுதியில் மொத்தம் 2 லட்சத்து 26 ஆயிரத்து 876 வாக்காளர்கள் உள்ளனர். இதில், இறந்தவர்கள் 7,947 பேரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. 30 ஆயிரத்து 56 வாக்காளர்கள் தொகுதியிலேயே இல்லை. இதைப் பயன்படுத்தி, காங்கிரஸுக்கு சாதகமாக கள்ள ஓட்டுப்போட ஆளுங்கட்சியினர் திட்டமிட்டுள்ளது தெரிய வந்துள்ளது.ஆளுங்கட்சியில் தேர்தல் பொறுப்பாளராக உள்ள அமைச்சர் ஒருவர், பணப்பட்டுவாடா குறித்து நிர்வாகிகளிடம் பகிரங்கமாகப் பேசியுள்ளார்.தேர்தல் அதிகாரியான மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் ஆளுங்கட்சிக்கு சாதகமாக செயல்படுவர்கள் என்பதால், மத்திய ரிசர்வ் படைகளை தேர்தல் பணியில் ஈடுபடுத்துமாறு தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்.மேலும், பூத் சிலிப்பை அடிப்படையாகக் கொள்ளாமல், வாக்காளர் அடையாள அட்டை அடிப்படையில் வாக்காளர்களை சரிபார்த்து, வாக்களிக்க அனுமதிக்குமாறு உத்தரவிட வேண்டும்.

தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்த தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கோரி யிருந்தார்.இந்த வழக்கு பொறுப்பு தலைமை நீதிபதி டி.ராஜா மற்றும் நீதிபதி டி.பரத சக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தேர்தல் ஆணையம் தரப்பில், இரட்டைப் பதிவு உள்ள வாக்காளர்களின் பட்டியல் தனியாகத் தயாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தேர்தல் பாதுகாப்புப் பணியில் மத்திய ரிசர்வ் படையைச் சேர்ந்த 409 போலீஸார் ஈடுபடுத்தப்பட் டுள்ளனர்.

இதுதவிர, பறக்கும் படையினரும் தேர்தல் பணியில் ஈடுபடுவர்.தேர்தல் நடைமுறைகள் அனைத்தும் கண்காணிப்புக் கேமரா மூலமாக பதிவு செய்யப்படும். புகைப்பட வாக்காளர் பட்டியல் அடிப்படையில், தகுதியான வாக்காளர்கள் மட்டுமே வாக்களிக்க அனுமதிக்கப்படுவர். கள்ள ஓட்டுப்போடுவதைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இந்த இடைத்தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்த, முடிந்த அளவுக்கு சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

அப்போது மனுதாரர் சி.வி.சண்முகம் தரப்பில், தேர்தல் ஆணையம் எடுத்துள்ள நடவடிக்கையை அறிக்கையாக தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என்று கோரப்பட்டது.அதை ஏற்ற நீதிபதிகள், ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையம் எடுத்துள்ள நடவடிக்கையை அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டு, விசாரணையை வரும் 20ம் தேதிக்கு தள்ளிவைத்துள்ளனர்.

# அரூர் அருகே 1400 ஆண்டுகள் பழைய பல்லவர் கால நடுகல் கண்டெடுப்பு




தருமபுரி மாவட்டம் அரூர் வட்டத்திற்குட்பட்ட ஆலம்பாடி என்ற கிராமத்தில் திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தைச் சேர்ந்த ச.பாலமுருகன், சி.பழனிச்சாமி, சிற்றிங்கூர் ராஜா, தண்டராம்பட்டு ஸ்ரீதர் மற்றும் விக்னேஷ்வரன் ஆகியோரைக் கொண்ட குழு கள ஆய்வு செய்தது. இதில் 2 பல்லவர்கள் கால நடுகல் கல்வெட்டுகள் கண்டறிப்பட்டன.ஆலம்பாடி கிராமத்தில் தென்பெண்ணை ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள வேடியப்பன் கோயிலில் புதைந்த நிலையில் இரண்டு நடுகற்களையும் வெளியே எடுத்து ஆய்வு செய்ததில் இரண்டு நடுகற்களிலும் வட்டெழுத்துக் கல்வெட்டு இருப்பது கண்டறியப்பட்டது.

இந்த நடுகல் கல்வெட்டை படித்து விளக்கமளித்த தொல்லியல் அறிஞர் ர.பூங்குன்றன் கூறியதாவது, "ஒரு நடுகல் வீரர் உருவம் ஒன்றும், அதில் இடது கையில் கேடயமும் வலது கையில் வாளும் அமைக்கப்பட்டுள்ளது. இடைக்கச்சையும் அணிந்து சண்டைக்கு ஆயத்தமாகும் நிலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் இடபுறத்தில் வட்டெழுத்தில் உள்ள கல்வெட்டு, பல்லவ மன்னன் மகேந்திர வர்மனின் நான்காவது ஆட்சியாண்டில் இது வெட்டப்பட்டதென்றும், இதில் காட்டி சாமி என்பவர் கீழ் வாளப்பாடி மாத விண்ணனோடு ஆநிரைகளை மீட்டு பூசலில் ஈடுபட்டு புஞ்சி என்ற ஊரை ஆளும் ராமசாத்தன் என்பவர் இறந்துபோனதை குறிப்பிடுகிறது. மற்றொரு நடுகல்லில் வீரன் உருவத்தில் வலது கையில் குறுவாளும் இடதுகையில் வில்லும் கொண்டு போருக்கு ஆயத்தமாகும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது.

இந்த நடுகல்லின் இடதுபுறம் உள்ள வட்டெழுத்தில் பல்லவ மன்னன் சிங்க விஷ்ணுவின் பதினொராவது ஆட்சி ஆண்டில் வெட்டப்பட்டதாகும். இந்த கல்வெட்டில் வேணாட்டு புஞ்சி மல்ல நக்கன் என்பவர் புஞ்சியில் நடந்த பூசலில் ஆநிரைகளை மீட்டு அதன் பின் இறந்து போனதைக் குறிப்பிடுகிறது என்றும் சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன்பே பல்லவர்கள் காலத்தில் வெட்டப்பட்ட இந்த நடுகற்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது " எனத் தெரிவித்தார். தென்பெண்ணையாற்றின் கரையே அமைந்துள்ள இந்த வேடியப்பன் கோயிலில் மண்ணில் புதைந்திருந்த நடுகற்களை மீட்டு, ஆய்வு நடுவத்தினரும் ஊர்மக்களும் இணைந்து அதே இடத்தில் அடிபீடம் அமைந்து நிலையாக நிற்கவைக்கப்பட்டது.

தென்பெண்ணையாற்றின் கரையில் ஏற்கனவே திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் பல நடுகல் கல்வெட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் இதுபோல மண்ணில் புதைந்த நிலையில் இன்னும் நடுகற்கள் கிடைப்பதினால் தென்பெண்ணையாற்றின் இருகரைகளிலும் உள்ள ஊர்களில் ஆய்வுகள் மேற்கொண்டால் இன்னும் பல அரிய வரலாற்றுத் தடங்கள் வெளிவர வாய்ப்புள்ளது என்றும் இந்த நான்கு மாவட்டங்களையும் உள்ளடக்கிய இந்த பகுதியை நடுகல் மண்டலமாக அறிவித்து நடுகற்களையும் கல்வெட்டுகளை ஆவணப்படுத்தி பாதுகாக்க தமிழ்நாடு தொல்லியல் துறை முன்வரவேண்டும் என வரலாற்று ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர்.

# மாற்றுத் திறனாளிகளை திமுக அரசு தொடர்ந்து ஏமாற்றி வருவது ஏற்புடையது அல்ல: சீமான்



"அண்டை மாநிலமான ஆந்திராவில் வழங்குவது போன்று மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகையை மாதம் ரூ.5000 மாக உயர்த்தி வழங்க வேண்டும். அரசு மற்றும் தனியார் வேலை வாய்ப்புகளில் 5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மாதாந்திர உதவித்தொகை உயர்வு, அரசு மற்றும் தனியார் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு உள்ளிட்ட மாற்றுத் திறனாளி பெருமக்களின் நீண்டநாள் கோரிக்கைகளை தமிழ்நாடு அரசு நிறைவேற்ற மறுப்பது மன வேதனை அளிக்கிறது.

தங்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளை வலியுறுத்தி மாற்றுத்திறனாளிகளை வீதியில் இறங்கிப் போராடும் நிலைக்குத் தள்ளியுள்ள திமுக அரசின் மனச்சான்றற்ற செயல் வன்மையான கண்டனத்திற்குரியது. மாற்றுத்திறனாளி சகோதர, சகோதரிகள் தங்களின் அடிப்படை உரிமைகளைக் கேட்டு அரசுக்குப் பலமுறை கோரிக்கை வைத்தும், வீதியில் இறங்கி போராடியும் கடந்த அதிமுக அரசு கண்டுகொள்ளாமல் காலங்கடத்தியது போலத் தற்போதைய திமுக அரசும் தொடர்ந்து ஏமாற்றி வருவது எவ்வகையிலும் ஏற்புடையதல்ல.கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள் விரைந்து நிறைவேற்றப்படும் என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவித்த நிலையில் இதுவரையில் அவர்களின் கோரிக்கைகள் ஒன்றுகூட நிறைவேற்றவில்லை என்பது கொடுங்கோன்மையாகும்.

ஆகவே, தமிழ்நாடு அரசு உடனடியாக..,அண்டை மாநிலமான ஆந்திராவில் வழங்குவது போன்று மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகையை மாதம் ரூ.5000 மாக உயர்த்தி வழங்க வேண்டும்.அரசு மற்றும் தனியார் வேலை வாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும்.அனைத்து மாற்றுத்திறனாளிகளின் குடும்ப அட்டையையும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களுக்கான குடும்ப அட்டையாக மாற்றித் தரவேண்டும். பெருமழை உள்ளிட்ட பேரிடர் காலங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு விடுமுறை அளிக்க வேண்டும்.மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்குவதுடன் வீடு கட்டவும், சிறு தொழில் தொடங்கவும் அரசு சார்பில் மானியத்துடன் கூடிய வட்டியில்லாக் கடன் வழங்க வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவச் சான்றிதழ் அளிக்கும் நரம்பியல் மருத்துவர்கள் பற்றாக்குறையைப் போக்கி, அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் நரம்பியல் மருத்துவர்கள் உறுதியாகப் பணியமர்த்தப்பட வேண்டும்.மாற்றுத்திறனாளிகளுக்காக தமிழ்நாடு முழுவதும் சுழற்சி முறையில் சிறப்பு மருத்துவ முகாம் நடத்துவதோடு, அம்மருத்துவ முகாம்களிலேயே அவர்களுக்கான பேருந்து மற்றும் ரயில் பயண, கட்டண சலுகை அட்டையைப் புதுப்பிக்கும் வசதியை செய்துதர வேண்டும்.மாற்றுத்திறனாளிகளுக்கான மின்கல சக்கர நாற்காலிகளைப் பழுதுபார்க்கும் சேவை மையங்கள் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட வேண்டும்.உள்ளாட்சித் தேர்தல்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு 5% சிறப்பு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும்.

அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் பேருந்து நிலையங்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்வு தளம் மற்றும் கழிவறை வசதிகளை உடனடியாக அமைத்துதர வேண்டும்.அடிப்படை உரிமைகளான மேற்கண்ட அனைத்து நியாயமான கோரிக்கைகளையும், தமிழ்நாடு அரசு உடனடியாக நிறைவேற்றித்தந்து, அனைவரையும் போலவே மாற்றுத்திறனாளி சகோதர, சகோதரிகளும் தன்மானத்துடன், சமத்துவமாக, நல்வாழ்வு வாழ்வதை உறுதி செய்ய வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்" என்று அவர் கூறியுள்ளார்.

# அன்பின் தொனி - 680

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளைவணங்காதே** - Worship not the Creations **உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**அன்பானவர்களே!**

இவ்வளவான அதிகாரத்தையும் வல்லமையையும் தேவன்தாமே அவரது பிள்ளைகளாகிய எமக்குத் தந்திருக் கும்போது, நாம் உலகஞானிகளின் பாவமான, தேவனுக்குப் பிரியமில்லாத, சத்தியத்திற்குப் புறம்பான ஆலோசனைகட்கு இடங்கொடாதபடி ஜீவிக்க, தேவஆவியானவரின் வழிநடத்துதலோடுவாழக் கற்றுக்கொள் வோம். மேலும் உலகஞானத்தைக் குறித்து பரிசுத்தவேதாகமம் கீழ்க்கண்டவாறுவிபரிக்கிறது:

ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார். இந்தப்படி, தேவனுடையபைத்தியம் என்னப்படுவது மனுஷருடையஞானத்திலும் அதிகஞானமாயிருக்கிறது, தேவனுடையபலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிகபலமாயிருக்கிறது. எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள், மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார், பலமுள்ள வைகளை வெட்கப்படுத்தும்படிதேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாத வைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமானஎவனும் தேவனுக்குமுன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார். அந்தப்படி, நீங்கள் அவராலேகிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக, அவரேதேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார். **- 1 கொரிந்தியர் 1: 24-31**

சத்தியத்தை அறிந்தநாம் ஒருவரைஒருவர் நேசிப்போம், அன்புகாட்டுவோம், இரங்கி மற்றவர்களுக்காக பாரத்தோடு ஜெபிப்போம், இரக்கத்திற்கும் கொலைக்கும் சம்பந்தம் இல்லை என்பதை நிரூபிப்போம்.

**கருச் சிதைவு** - Abortion

இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன். **- சங்கீதம் - 127: 3**

பிள்ளைகள் கர்த்தரால் கிடைக்கும் ஒரு ஆசீர்வாதம். திருமணமாகிய அநேகதம்பதிகளுக்குப் பிள்ளைப் பாக்கியம் இல்லாமல் ஏங்கிக் கிடக்கின்றனர். அப்படிப்பட்ட குழந்தை இல்லாதநிலையில் இருக்கும் கிறிஸ்தவர்கள் அன்னாளைப்போல தேவனுடைய பாதத்தில் உபவாசத்தோடும் கண்ணீரோடும் காத்திருந்து தேவனுடைய பெரிதான கிருபையினாலே காலங்கள் தாமதித்தாலும் பிள்ளைகளைப்பெற்று சந்தோஷமாய் வாழ்ந்த, வாழ்கின்ற சம்பவங்கள் ஏராளம் ஏராளம். இப்படியாக ஒருசாரார் பிள்ளைகளுக்கா கத் தவித்துத் தவம் கிடக்கின்றபோது, இன்னுமொருசாரார் கடவுள் அவர்களுக்குக் கிருபையாகக் கிடைத்த குழந்தைப்பேறை, தாயின் கற்பத்தில் அச்சிசுகருவாய் இருக்கும்போதே அதைச் சிதைத்துவிடுகின்றனர்.

பத்துமாதங்களில் தாயின் கற்பத்தில் கருக்கட்டி வளர்ச்சியடையும் சிசு, ஒரு குழந்தையாக இவ்வுலகில் பிறந்துவளர்ந்து, அதனூடாக இன்னுமொரு பரம்பரையை உருவாக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. அப்படியாக ஒருவர் கற்பத்தில் வளரும் சிசுவை மருந்துகள் மூலாகவோ, அல்லது வேறுமருத்து வசிகிச்சகள் மூலமாகவோ அழித்துவிடுகிறார்கள். அது ஒரு கொலை என்பதை உணராதபடி தமது சுய விருப்பு வெறுப்புக் காரணங்களுக்காக சிலர் அதைத் துணிகரமாகச் செய்வதை இன்று சர்வசாதாரணமாக உலகெங்கும் காணக்கூடிய தாய் இருக்கிறது. இதன்மூலம் ஒரு சமுதாயத்தையே அவர்கள் அழிக்கிறார்கள் என்பதை சற்றும் சிந்திப்பதே இல்லை.

மேலும் சிசுச் சிதைவை (Abortion) நியாயப்படுத்தி, அது அச்சிசுவைச் சுமக்கும் தாயின் சுதந்திரம், அதை வளர்ப்பதா அல்லது அழிப்பதா என்பது அவரவருடைய தனிப்பட்டதீர்மானம் என்றும், அதுமனித உரிமை என்றெல்லாம் வாதாடி, அதற்கு ஆதரவாக ஒரு கூட்டத்தாரையும், அதை எதிர்த்து அது கொலை என்றும், வாய்பேசாத, வாதிடமுடியாத நிலையில் இருக்கும் ஒரு உயிருள்ள சிசுவை அழித்துவிடுவது பாவச்செயல் என்றும் கூக்குரல் எழுப்பும் இன்னுமொரு கூட்டத்தாரையும் இன்று உலகெங்கும் காணலாம். இன்னும் சிலர் சிசு அழிப்பை அரசாங்கம் சட்டபூர்வாக அனுமதிக்க வேண்டும் என்று சில நாடுகளில் பகிரங்கமாகக் கோருவதும், வேறுசிலர் அதை எதிர்த்து சிசுச் சிதைவை சட்டபூர்வமாகத் தடைசெய்ய வேண்டு மென்றும் வாதாடுவதையும் பல தேசங்களில் இன்று காணக்கூடியதாய் இருக்கிறது. இதை ஆதரிப்பதும், எதிர்ப்பதுமான நிலைநாளுக்கு நாள் உலகம் பூராவும் அதிகரித்துக்கொண்டேவருகிறது. இந்தநிலையில் பரிசுத்தவேதாகமம் கூறுவதைக் கவனிப்போம்:

கொலை செய்யாதிருப்பாயாக **- யாத்திராகமம் 20: 13**

கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலை செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏது வாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். **- மத்தேயு. 5: 21**

சட்டபூர்வமாகத் திருமணமான தம்பதிகளும் அவர்களுக்குத் தேவகிருபையால் கிடைத்த குழந்தையை, தாயின் வயிற்றில் சிசுவாகவளரும் ஆரம்ப மாதங்களிலேயே அழித்துவிடுகிறார்கள். அதேபோல திருமணமாகாத சில யுவதிகள் தவறானபாலியல் உறவினால் உண்டான கற்பப்பேறை அவர்களும் அப்படியே அழித்துவிடுகின்றனர். இதனால் அவர்கள் பாவத்திற்குமேல் பாவத்தைச் செய்து தமது அழிவைதாமே தேடிக்கொள்கின்றனர்.

ஒருவருடை யகற்பத்தில் வளரும் சிசு எமது கண்களுக்குக் காணமுடியாவிட்டாலும் அது வளர்ச்சி அடைகிற ஒரு உயிர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே "சிசுச் சிதைவு" ஒரு கொலை என்பதை அறிந்து நாம் அதற்கு அமைய எமது குடும்ப வாழ்க்கையைத் தேவசித்தத்தோடு நடத்தக் கற்றுக்கொள்வோம், தேவனைப் பிரியப்படுத்தி ஜீவிப்போம்.

**தொடரும்...**



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

மலேசிய மடல்

# ஜசெக சட்டமன்ற உறுப்பினர் சிவநேசன் அரசியல்வாதியா, மதவாதியா?

## மலாயாப் பல்கலைக்கழக பொருளாதார கருத்தரங்கை காரணமின்றி எதிர்க்கும் மதவாதத் தரப்பினர்



நக்கீரன்

**கோ**லாலம்பூர், பிப்.12:

மலாயாப் பல்கலைக்கழகத்தில் பிப்ரவரி 11 சனிக்கிழமை பிற்பகலில் ஒரு பொருளாதார கருத்தரங்கு நடைபெற்றது. மலாயாப் பல்கலைக்கழகத்தின் Resource Centre, Asia-Europe Institute சார்பில் இந்தக் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில், சிறப்பு கருத்துரையாளராக தமிழ் நாட்டரசின் நிதி அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அழைக்கப்பட்டிருந்தார். கருத்தரங்கின் தலைப்பு சமத்துவ வளர்ச்சி. கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர் புகழ்பெற்ற பொருளாதார அறிஞர் டத்தோ டாக்டர் ராஜா ராசையா.

இந்த நிகழ்ச்சிக்குத்தான் மலேசியாவில் உள்ள மலேசிய இந்து தரும மாமன்றம் உள்ளிட்ட பிரதான இந்து அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இதன் தொடர்பில், இந்து தரும மாமன்றத்தின் முகநூல் பக்கத்தில் மின் பதாகையும் வெளியிட்டுள்ளனர்.

திராவிட மாடல் சிந்தனை இங்கு எதற்கு என்ற கேள்வியை முன்வைத்து, "இறைவன்மீது நம்பிக்கை வைத்தல்" உள்ளிட ஐந்து கோட்பாடுகள் அடங்கிய "ருக்குன் நெகாரா" கோட்பாட்டை உயர்த்திப் பிடிப்போம் என்றெல்லாம் அந்தப் பதாகையில் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் கல்வி வளர்ச்சியிலும் பொருளாதார முன்னேற்றத்திலும் முதன்மை மாநிலமாக தமிழ் நாடு விளங்குகிறது. "எல்லார்க்கும் எல்லாமும்" என்பதுதான் இன்றைய தமிழ் நாட்டரசின் கொள்கை. அதைத்தான், தமிழ் நாட்டின் முதல்வர் மு.க. ஸ்டாலின் திராவிட மாடல் என்கிறார். காரணம், திராவிட மரபில் வந்த கட்சியின் ஆட்சி நடைபெறுவதால் அவர்கள் அவ்வாறு சொல்லிக் கொள்கின்றனர்.

அந்த மாநில அரசில் நிதி அமைச்சராகத் திகழும் தியாகராஜன், பழுத்த ஆன்மிகக் குடும்பத்தைச் சேர்ந்தவர். கையில் கயிறு கட்டி இருப்பவர். நெற்றியில் குங்குமம் இட்டிருப்பவர். மதுரை மீனாட்சி அம்மன் ஆலய வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் தியாகராஜன் குடும்பத்திற்கு வழிவழியாக இன்றளவும் பெரும் பங்குண்டு.



இப்படிப்பட்ட நிலையில், மலாயாப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பொருளாதார கருத்தங்கிற்கும் இந்து மதத்திற்கும் மலேசியாவின் ருக்குன் நெகாரா கோட்பாட்டிற்கும் என்ன தொடர்பிருக்கிறது?.

பின்னர் ஏன் மலேசியாவில் உள்ள இந்து அமைப்புகள் இந்தப் பொருளாதாரக் கருத்தரங்கை எதிர்க்க வேண்டும்?.

இன்றைய தமிழ் நாட்டு அரசாங்கத்தின் கொள்கை என்பது, சமயம் - சாதி ஏற்றத்தாழ்வு உள்ளிட்ட எல்லாவற்றையும் புறக்கணித்து, "அனைவருக்கும் கல்வி - அனைவருக்கும் மாநில முன்னேற்றத்தில் சமவாய்ப்பு" என்பதுதான்.

இந்தக் கொள்கைவழி மாநிலத்தை பலவகையாலும் முன்னேற்றி வருகின்ற-னர். இப்படிப்பட்ட உன்னத சமூக நலத் திட்டத்தின் அமலாக்க முறையைப் பற்றித்தான் இந்தக் கருத்தரங்கில் பேசினர்.

இதற்கு ஏன் இந்த மதவாத அமைப்புகள், மதவாதம் தலைக்கேறிய நிலையில் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்.

இந்தியாவில் வலச்சாரி அரசியல் சித்தாந்தம் கொண்ட பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சி, 2014இல் உருவானதில் இருந்தே உலகெங்கும் உள்ள இந்து மதவாத அமைப்புகள் திவிரத்தன்மையுடன் செயல்படுகின்றன. அதன் தாக்கம், மலேசியாவிலும் பிரதிபலிக்கிறது.

உலக அகிம்சையின் சின்னமாக அண்ணல் காந்தி அடிகளை, ஐநா மன்றத்தின் யுனெஸ்கோ அமைப்பு பிரகடனப்படுத்தி உள்ளதுடன், காந்தி பிறந்த அக்டோபர் 2-ஆம் நாளை உலக அகிம்சை தினமாகவும் ஆண்டுதோறும் அனுசரித்து வருகிறது.

அப்படிப்பட்ட காந்தியை, நாதுராம் விநாயக கோட்சே என்னும் இந்து மதவெறியன் சுட்டுக் கொன்றான். ஈரான்-ஈராக் பகுதியில் இருந்து பல ஆயிர ஆண்டுகளுக்கு முன் பிழைப்பு தேடியும் மேய்ச்சல் நிலம் நாடியும் இந்தியாவிற்கு வந்த பிராமணர்கள், இந்தியாவின் செல்வச் செழிப்பைக் கண்டு அங்கேயேத் தங்கிவிட்டனர்.

அவ்வாறு தங்க முற்பட்டவர்கள், சொர்க்கம்-நகரம் முற்பிறவி-அடுத்தப் பிறவி குறித்த கட்டுக்கதைகளைக் கற்பித்து, தங்களை உயர்சாதிக்காரர்களாகவும் அறிவாளிகளாகவும் காட்டிக்கொண்டு அந்த மண்ணிலேயே நிலைப்படுத்திக் கொண்டனர்.

தங்களின் ஆதிக்கத்திற்கு யார் குறுக்கே வந்தாலும் அவர்களை தீர்த்துக்கட்டுவது இவர்களின் வழக்கம். ஆதித்த கரிகால் சோழன், நந்த நாயனார், நெல்லை மாவட்ட ஆட்சியாளர் ஆஷ், காந்தி உட்பட்ட அனைவரும் பார்ப்பனர்களால் கொலைசெய்யப்பட்டவர்கள்.

அப்படி கொலை செய்ய முடியாமல் போனால், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக பொய்ப் பிரச்சாரம் செய்வது, இவர்களின் வாடிக்கை-குயுக்தி; இதில், அவர்கள் நேரடியாக பங்கு பெறாமல், மற்றவர்களை அதாவது, நம்முடைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களையே ஏவிவிடுவார்கள். அசோக மாமன்னர், களப்பிரர், திருவள்ளுவர், கம்பர், வள்ளலார் சுவாமிகள், பெரியார், அண்ணல் அம்பேத்கார் போன்றவர்களெல்லாம் இத்தகையத் தாக்குதலுக்கு இன்றளவும் ஆளாகி வருகின்றனர். இதற்கெல்லாம் அடித்தளம் இட்டவன் சாணக்கியன் என்னும் தகிடுதத்தக்காரன். அதனால்தான், உண்மையை உணர்ந்த பொதுமக்கள் அவனை பொதுவெளியில் எரித்துக் கொன்றனர்.

நேற்றைய மலாயாப் பல்கலைக்கழக பொருளாதாரக் கருத்தரங்கிற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களும் ஒருவகையில் பார்ப்பன அடிமைகள்தான். மதவாதம் இவர்களின் அறிவுக் கண்களுக்கு திரைபோட்டுள்ளது.



மலேசிய இந்து தர்ம மாமன்றம், சிறந்த கல்விமானும் சமூகப் பற்றாளரும், சமயச் சான்றோருமாகிய டத்தோ முனைவர் என்.எஸ். இராஜேந்திரன் பொறுப்பில் இருந்தவரை அது, ஒரு சமய மறுமலர்ச்சி இயக்கமாக இருந்தது.

அருமையான கிளியை வளர்த்து, கடைசியில் அதை கடுவன் பூனையிடம் கொடுத்தக் கதையாக என்றைக்கு இந்த அமைப்பை அ.இராதாகிருஷ்ணன் என்பவரிடம் கொடுத்தாரோ, அன்றுமுதல் அந்த சமய அமைப்பு, மதவாத அமைப்பாகவும் ஆர்.எஸ்.எஸ். சார்பு அமைப்பாகவும் மாறிவிட்டது.

தமிழர்களின் அறிவுப் பெட்டகம்-தமிழர்களின் இலக்கிய முகவரி பொய்யா-மொழிப் புலவர் திருவள்ளுவரை, ஸ்ரீவள்ளுவர் என்று குறிப்பிடுவதுடன், அப்படி குறிப்பிட்டால் என்ன என்றும் கேட்கிறார் இந்த இராதாகிருஷ்ணண்.

இப்படிப்பட்ட தமிழ் - தமிழர் விரோதி தலைமையில் உள்ள இந்து அதர்ம மாமன்றத்தின் முகநூல் பக்கத்தில், இந்தக் கருத்தரங்கிற்கு எதிராக தகவல் பதிவிட்டுள்ளதைப் பார்க்கும்பொழுது, இந்தத் தரப்பினருக்கு சமயத் தெளிவும் இல்லை; பொருளாதாரம் குறித்த புரிதலும் இல்லையெனத் தெரிகிறது.

காந்தியைக் கொன்ற கோட்சே என்ற பார்ப்பனன், தன் கையில் பளிச்சென தெரியும்படி முஸ்லிம் என்று பச்சைக் குத்தி இருந்தான்.

காந்தியைக் கொன்றதும் அல்லாமல், காந்தியைக் கொன்றது வேற்று மதத்தவர் என்று புரளி கிளப்புவதும் அதன்வழி மதக் கலவரத்தை ஏற்படுத்துவதும் கோட்சேவின் நோக்கமாக இருந்திருக்கிறது.

நல்வாய்ப்பாக, டில்லியில் மௌண்ட் பேட்டன் பிரபுவும் சென்னையில் தந்தை பெரியாரும் மதக் கலவரம் ஏற்படா வண்ணம் சமுதாயத்தியக் காத்தனர். வானொலியிலும் பேசி, காந்தியைக் கொன்றது ஓர் இந்துதான் என்றும் அதுவும் மதவெறி கொண்ட ஒரு பார்ப்பனன் என்பதையும் பொதுமக்களுக்குத் தெரிவித்து அமைதி ஏற்படுத்தினர்.

அப்படிப்பட்ட நாதுராம் விநாயக கோட்சே, ராஷ்டிரிய சுயசேவை சங்கம் என்னும் இந்து தீவிரவாத அமைப்பில் பயிற்சி பெற்றவன். இந்த சங்கம்தான் சுறுக்கமாக ஆர்.எஸ்.எஸ். என்று அழைக்கப்படுகிறது.

இந்த ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அரசியல் பிரிவுதான் பாஜக என்னும் பாரதிய ஜனதாக் கட்சி. இந்தக் கட்சியின் ஆளுக்கைக்கு இந்தியா வந்தபின், கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடப்பதை ஊரும் உலகும் அறியும்.

1925-இல் தொடங்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். அமைப்பு, இன்னும் ஈராண்டுகளில் அதன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட இருக்கிறது. அதற்குள், இந்தியாவை, ஒரேமொழி; ஒரேக் கலாச்சாரம், ஒரேத் தேர்தல், ஒரே நிருவாகம் என்றெல்லாம் மாற்றி முழுமையான பார்ப்பன ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவர துடியாய்த் துடிக்கின்னர்.

இதற்குத் தடையாக இருப்பது ஒரேயொரு மாநிலம்தான். அது தமிழ்நாடு அங்குதான் திராவிட மாடல் ஆட்சி நடைபெறுகிறது. திராவிடக் கொள்கை கொலுகொண்டுள்ளது; இதன் விளைவாகவே, இந்துத் தீவிரவாதிகளுக்கும் மதவாதிகளுக்கும் "திராவிடம்" என்னும் சொல் வேப்பங்காயாகக் கசக்கிறது.

1935-இல் இந்தியாவிற்கான அரசியல் சாசனம் முதன் முதலாக வரையப்பட்டது. அது, உருவான இடம் இலண்டன் மாநகரத்தின் பங்கிங்காம் அரண்மனை. அதன் பெயர் அனைத்து இந்திய அரசியல் சாசனம். அப்போது, ஆங்கிலேய நிருவாகத்தின்கீழ் இரண்டு-மூன்று இந்தியாக்கள் இருந்தன. அதனால், அதற்கு அனைத்து இந்திய அரசியல் சாசனம் என்று பிரிட்டிஷ் அரண்மனை பெயர் சூட்டியது.

1947-இல் இந்தியா விடுதலை அடைந்ததும், புதிய சூழலுக்கு ஏற்ப இதே அரசியல் சாசனத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய அரசியல் சட்டத்தை இயற்ற நேரு புதிதாக அரசியல் சட்ட வரைவுக் குழுவை ஏற்படுத்தினார்.

கே.எம். முன்ஷி, சாதுல்லா, அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், என்.கோபாலசாமி ஐயங்கார், கிரு'ணமாச்சாரி ஆகிய சட்டமேதையர் அந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர். இவர்களுக்கு தலைவராக இருந்தவர் மாபெரும் சட்டமேதை அண்ணல் அம்பேத்கர்.



இவர்கள் எல்லோரும் பார்த்து பார்த்து; நுணுகி நுணிகி தயாரித்த அரசியல் சாசனம் அடுத்த மூன்றாண்டுகளில் நடைமுறைக்கு வந்தது.

இப்படிப்பட்ட சட்டத்தை முதன்முதலில் திருத்த வைத்தவர் தந்தை பெரியார். அந்த சட்டத் திருத்தத்திற்குப் பெயர் "கம்யூனல் ஜி.ஓ." என்பதாகும்.

ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்ததைப் போல, சுதந்திர இந்தியாவிலும் எல்லா வேலைவாய்ப்பையும் பிராமணர்களே ஆக்கிரமித்துக் கொள்ள அனுமதிக்கக் கூடாது. எல்லா சாதியினருக்கும் அவரவர் சாதி எண்ணிக்கை விகிதாச்சாரத்திற்கு ஏற்ப அனைவருக்கும் வேலைவாய்ப்பு பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். இது, வாய்மொழி உத்தரவாக இல்லாமல், அரசியல் சட்டத்தின்படி உரிமையாக வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் போராட்டம் நடத்திய பெரியார், அரசியல் சாசன நகலையும் எரித்தார்.

இதைக் கண்டு எரிச்சல் அடைந்த நேரு, இது குறித்து அம்பேத்கரிடம் ஆலோசனை கேட்டார். பெரியா-ரின் கோரிக்கையில் நியாயமும் உண்மையும் இருப்பதால், அதற்கு செவிசாய்க்கத்தானான் வேண்டும் என்று அம்பேத்கர் கூறியதன் அடிப்படையில் இந்தியாவின் புதிய அரசியல் சட்டம் முதன்முதலாகத் திருத்தப்பட்டது.

அதன் அடிப்படையில்தான், தமிழ் நாட்டில் 69% பேர் இன்று கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் பங்கு கொள்கின்றனர். கவுண்டர், செட்டியார், பிள்ளைமார், நாடார், படையாச்சி, தேவர், முதலியார், பல்லர், பறையர், மலைவாழ் மக்கள் அருந்ததியர் உள்ளிட்ட அனைத்து சாதி மக்கள் மற்றும் கிறித்தவர்-இஸ்லாமியர் உள்ளிட்ட சிறுபான்மையினரும் அவரவருக்கு உரிய விகிதப்படியான கல்வி மற்றும் வேலைவாய்ப்பைப் பெறுகின்றனர்.

இல்லாவிடில், உடல் அலுங்காத சொகுசான வேலை அவ்வளவையும் பார்பனர்கள் அபகரித்துக் கொண்டு, ஓட்டுநர்-நடத்துனர்- மூட்டை தூக்குபவர்-கொத்தாளு-சித்தாளு என வியர்வையும் இரத்தமும் சிந்தும் வேலையாகத்தான் மற்றவர்களுக்கு, அதாவது நம்மவருக்கெல்லாம் கிடைத்திருக்கும்

இவர்களில், சிறுபான்மையின மக்களைத் தவிர, பிற அனைவரும் இந்துக்கள்-தானே; இந்துக்களின் எதிர்கால நலனுக்கும் அவர்தம் பிள்ளைகளின் எதிர்காலத்துக்கும்தானே பெரியார் குரல் கொடுத்தார்; "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் திருவள்ளுவ நெறிப்படி எல்லார்க்கும் எல்லாமும் என்பதுதானே திராவிட மாடல்!

சிந்திக்க மறுக்கும் மதவாதிகளுக்கு வேண்டுமானால் இது புரியாமல் போகலாம்; ஆனால், ஜனநாயக செயல் கட்சியின்(ஜசெக) நீண்டகால செயல்பாட்டாளரும் பேராக் மாநில ஆட்சிக் குழு உறுப்பினரும் சுங்காய் சட்டமன்றத் தொகுதியில் தொடர்ந்து 15 ஆண்டுகளாக மக்கள் பிரதிநிதியாக இருப்பவருமான சிவநேசனுக்கும் ஏன் விளங்காமல் போனது?

ஏதும் மாறுபட்ட கருத்து இருந்தால், நிகழ்ச்சி ஏற்பாட்டாளருடன் தொடர்பு கொண்டு விளக்கம் பெற்றிருக்க வேண்டும். அதைவிடுத்து, திராவிட மாடல் பேச்சும் சிந்தனையும் இங்கு எதற்கு என்று கேட்க சிவநேசன் யார்?

நான் இருக்கிறேன். நானொரு பத்திரிகையாளன்; தவிர நானும் தமிழன்தான்; நான் சார்ந்த இனத்தை மேலை நாட்டவர் திராவிடர் என்கின்றனர். மொத்தத்தில் தமிழும் திராவிடமும் ஒன்றுதான். எங்கள் கருத்தை நாங்கள் கேட்பதற்கு தடை சொல்ல சிவநேசனுக்கு என்ன உரிமை இருக்கிறது.




மலாயாப் பல்கலைகழகத்தில் நடைபெற்ற இந்தப் பொருளாதாரக் கருத்தரங்கிற்கு எதிராக நாளேட்டில் அறிக்கைவிட்டிருந்த சிவநேசனிடம் அதுகுறித்து காலையில் கருத்து கேட்டபொழுது, "அவர்கள் எல்லாம் "திக" காரர்கள், அவர்களுக்கு இங்கு என்ன வேலை? இங்கு எதற்காக அவர்கள் பேச வர வேண்டும். இந்த நாட்டில் ருக்குன் நெகாரா கோட்பாடு இருக்கிறது. அதற்கு எதிராகப் பேசும் திக காரர்களை அனுமதிக்கக்கூடாது; உள்ளூர் நாளேடுகளில் இந்தியாவைப் பற்றி அன்றாடம் 4 பக்க செய்தி வருகிறது அதை நான் படிப்பதில்லை. இங்குள்ள செய்தியைத்தான் இங்குள்ள நாளேடுகள் வெளியிட வேண்டும் என்றெல்லாம் சிவநேசன் பேசிய பொருத்தமில்லா கருத்துகளை பொறுமையுடன் கேட்டுக் கொண்ட நான்,

தியாகராஜன், தமிழ் நாட்டு அரசாங்கத்தில் நிதி அமைச்சராக இருக்கிறார். அவர் ஒரு பொருளாதார வல்லுநர்; இங்கு மலாயாப் பல்கலைக்கழகத்தில் பொருளாதார சிந்தனை குறித்துதான் பேச இருக்கிறார். இதற்கும் மதத்திற்கோ இறைக் கொள்கைக்கோ மலேசியாவின் ருக்குன் நெகாரா சிந்தனைக்கோ எந்தத் தொடர்பும் இல்லையே என்று சொல்லுவதற்குள் தொடர்ந்து குறுக்கிட்டார்.

உடனே நான், நீங்கள் சொன்ன கருத்தையெல்லாம் நான் பொறுமையாகக் கேட்டேன்; இப்பொழுது என்னுடைய கருத்தைக் கேட்க மறுப்பதுடன் தொடர்ந்து ஏன் இடைமறிக்கிறீர்கள் ஒரு மக்கள் பிரதிநிதிக்கு இது பொருத்தமல்ல என்று கூறினேன்.

அடுத்து, நீங்கள் திக-வா என்று என்னைக் கேட்டார். நான் திராவிடர்க் கழகத்தில் இல்லை; ஆனால், நீங்கள் ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளரா என்று கேட்டதும் உடனே சிவநேசன் தொடர்பை துண்டித்துக் கொண்டார்.

ஓர் அரசியல் கட்சியில் செயல்படும் சிவநேசன் ஆன்மிக சிந்தனையாளர் என்பதைவிட அப்பட்டமான மதவாதியாக இருக்கிறார். அதனால்தான், மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளிக்கவோ விள்க்கம் பெறவோ மறுத்து பின்வாங்குவதுடன் மூர்க்கத்தனமாக நடந்து கொள்கிறார்.

ஜசெக தலைமை, சிவநேசன் அரசியல்வாதியா இல்லை மதவாதியா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். மக்கள் பிரதிநிதியாக இருக்கும் சிவநேசனுக்கு, நடுநிலையோடு சிந்திக்கவும் பேசவும் முடியாமல் இருப்பது சமூக அவலம்.

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ **சங்கர் அன் கோ**

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லரை விற்பனையாளர்கள், தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

**இனிய புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

tasty தமிழா ™ TASTY தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்

Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.



இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.

காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

**SHANKAR & CO**



2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)



**SRI MARIYAMMA ASTROLOGER & JOTHIDAM**

World Famous Indian Astrologer



**Pandit: Guruji Arjunraj**

Specialist in palm, Face & Photo, Horoscope Reading

**Most Powerful Spiritualist from India**

**ARE YOUR DEPRESSED LONELY?**

**I will remove and destroy all Bad Luck, Withcraft, Obeya, Jado, Voodo & Protect your From all evils.**

**416-722-9498**



**All RELIGIONS WELCOME! & PRIVATE AND CONFIDENTAL**

OPEN7 DAYS
9AM - 8PM

I will read your past, present and future by reading your palm and face. We attained this study since 300 years in our family from fathers and forefathers. I will read the influence of effects of sun moon stars and planets on its events on your life. Please try you visit me regarding your health, family, Business, Job, Child, Astrology Vasthu,Dhrusti, Enemy,Court, Marriage, Love, Education and detailed reading and Visa all matters. I can solve it if your have any difficulty or struggle in your life then your life will be successful and bright. Please meet me once and know your readings.

- Name & Date Birth
- Hand Reading
- Past, Present and Future
- Overseas & Travel
- Marriage, Family Matters
- Husband & wife
- Children Education
- Children Mistake
- Property Court
- Enemy Problem

- Face Reading
- Horoscope
- Education & Work
- Love & Money Problem
- Divorce
- Sexual Problem
- Health & Business
- Jealousy & Black Magic
- Evill Affection
- Drinking Problem

MEET ME ONCE & SEE YOUR LIFE CHANGE 100%, REMOVAL OF BLACK MAGIC & GIVE PROTECTION

**2607 Eglinton Ave, East Scarborough, ON M1K 2S2**
**(Eraa Super Market Upstairs, Unit #6) (Brimley & Eglinton)**

# இவ்வார ராசிபலன்

**17-02-2023 வெள்ளி தொடக்கம் 23-02-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** சாதகமான சூழ்நிலை உருவாகும் வாரம். தேவைகள் அதிகரிக்கும். களவு போனப்பொருள் திரும்ப கிடைக்கும். சுபச்செய்தி தேடி வரும். நட்பு வட்டம் விரிவடையும். வாயில் தேடி வாய்ப்பு வரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பங்குத்தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். ஆபரணத் தொழிலில் கவனம் தேவை. குடும்ப சுமைக்கூடும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். வாகனத்தில் செலவு ஏற்படும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். கௌரவம் கூடும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். காரிய வெற்றி கிடைக்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். கணவன் மனைவி அன்பு அதிகரிக்கும். கலைகளில் ஈடுபாடு கூடும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். எண்ணங்கள் பலிதமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகரிக்கும். தாய்வழி தகராறு குறையும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கைகொடுக்கும் காமாட்சி, அதிர்ஷ்ட எண்: 3,5,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,C




**ரிஷபம்:** தொட்டது துலங்கும் வாரம். சாதகமான காலம். தாராளமான தனவரவு உண்டு. பூர்வீகச்சொத்துக்கள் விற்பனையாகும். விலகி சென்றவர் விரும்பி வருவர். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். வரவு திருப்தி தரும். மருத்துவச் செலவுகள் குறையும். உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்தியோக உயர்வு தாமதமாகும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். சூழ்நிலைகள் சாதகமாகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. அன்னிய தேச பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். சூழ்நிலைகள் சாதகமாக அமையும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். உயர்ந்த பதவி யோகமுண்டு. தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் காணப்படும். பெற்றோர்களிடத்தில் அன்பு அதிகரிக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: ஶ்ரீ கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 2,1,7,9
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,H




**மிதுனம்:** திட்டமிட்ட காரியம் வெற்றி தரும் வாரம். புண்ணியம் சேரும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. முயற்சிகள் அதிகம் தேவை. திடீர் செலவு ஏற்படும். எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. குடும்ப அன்யோன்யம் கூடும். பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. உத்தியோக இடமாற்றம் ஏற்படும். புதிய நட்பு உருவாகும். வாகன செலவு ஏற்படும். வராத கடன் வந்து சேரும். பணவரவு திருப்தி தரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்களின் அதிகாரம் உயரும். நட்பு பெருகும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். பேச்சில் நிதானம் தேவை. பயணத்தால் பலன் உண்டு. கமிஷன் தொழிலில் லாபம் தரும். குடும்ப கௌரவம் உயரும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன் தொல்லை தீரும். கௌரவம் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். கட்டிட தொழில் கவனம் தேவை. கமிஷன் தொழில் வளம் சேரும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். பட்டம் பதவி தேடி வரும். நட்டமில்லாத நன்மை பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஶ்ரீதேவி, அதிர்ஷ்ட எண்: 9,1,3,2
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,K




**கடகம்:** நீண்ட நாள் கனவு நிறைவேறும் வாரம். தேக ஆரோக்கியம் கூடும். புதிய முதலீடு லாபம் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலை அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. கலகலப்பான காலம். எதார்த்தமாக செயல்படவும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். விரயங்கள் அதிகமாகும். வீண்வம்பு உருவாகும். விளையாட்டுத்துறையில் லாபம் தரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். அணிகலன் சேரும். தாய்வழி உறவில் கவனம் தேவை. காரிய தாமதம் ஏற்படும். வரவு திருப்தி தரும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். பெற்றோர்களின் பாராட்டுக் கிட்டும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். மனிதநேயம் மிகுதியாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிவட்டாரப் பழக்கம் உருவாகும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: 1,4,3,9
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,S




**சிம்மம்:** அதிகாரப் பேச்ச அரங்கேறும் வாரம். உள்ளம் மகிழும். திருமண வாய்ப்புகள் கூடி வரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பேச்சுத்திறமை அதிகரிக்கும். சகோதர உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். செயல்திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்புத் தடைப்படும். மனைவியால் சச்சரவு ஏற்படும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப்பொலிவு கூடும். தாய்வழி உறவில் கவனம் தேவை. நல்லவர் நட்பு கிட்டும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். நினைத்த காரியம் நிறைவேறும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. வயிறு சம்மந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் தரும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பழைய பாக்கிகள் வசூலாகும். கணவன், மனைவி வாக்குவாதங்கள் ஏற்படும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். பண வரவு அதிகரிக்கும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்களின் பாராட்டு கிட்டும். வேலைப்பளு அதிகரிக்கும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,2,9,7
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**கன்னி:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். வார்த்தைகளில் நிதானம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. உறவினர் ஒத்துழைப்பு கிடைக்கும். திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல்நலனில் அக்கறை தேவை. ஏற்றுமதித் தொழிலில் லாபம் கிடைக்கும். திறமைகள் வெளிப்படும். பழையக்கடன் அடையும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். காதலர்கள் தம்பதியாவார்கள். கல்வியில் ஆர்வம் கூடும். தர்மச்சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். உறவினர் வருகை உண்டு. புதிய நட்பு ஏற்படும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். வாகன மாற்றம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். விரக்திகள் மறையும். பொதுவாழ்வில் புகழ் கூடும். பணவரவு திருப்தி தரும். உடன்பிறப்புகளால் உதவி கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். பெரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,U




**துலாம்:** வேண்டாத நபர்கள் விலகும் வாரம். தேக பலன் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். இல்லத்தில் அமைதி கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு திருப்தி தரும். நீண்ட நாளைய நோய் விலகும். தொழில் முயற்சி வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. சுபகாரியம் கைகூடும். ஞாபகத் திறமை அதிகரிக்கும். குடும்ப வளர்ச்சி கூடும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகள் தாமதம் ஏற்படும். மாணவர்களுக்கு சாதகமான காலம். கலைஞர்களுக்கு புகழ் கூடும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. சேமிப்பு வளரும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். அன்யோன்யம் அதிகரிக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பாதகம் விலகும். தந்தை உடல்நலனில் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. இ'ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,1,3,2
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,F




**விருச்சிகம்:** வம்பு தும்புகள் ஒழியும் வாரம். வாயில் தேடி வாய்ப்பு வரும். செய்தொழில் லாபம் தரும். பணத்தேவைகள் அதிகரிக்கும். மன ஆரோக்கியம் சிறக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். சுபகாரியங்கள் நடந்தேறும். இல்லத்தில் அமைதி பெருகும். மனதில் மகிழ்ச்சி கூடும். நட்பு வட்டம் விரிவடையும். புத்தி சாதுர்யம் பெருகும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். சிக்கனம் தேவை. கல்வியில் மேன்மை உண்டு. கடன் வசூலாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். அன்னிய தேசப் பயணம் உண்டு. வரவுகள் பெருகும். வழக்குகள் சாதகமாகும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். பூர்வீக சொத்து வந்து சேரும். புண்ணிய ஸ்தலம் பயணம் ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டு. எந்திர தொழிலால் ஏற்றம் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவார்கள். நல்லோர்களின் நட்பு கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விக்னேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,6,2,3
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,G




**தனுசு:** போட்டி, பொறாமைகள் விலகும் வாரம். பெருமைகள் கூடும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். மற்றவர் தொல்லை குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சஞ்சலம் மறையும். வீண் பழி அகலும். அரசியலில் புகழ் கூடும். திறமைகள் அதிகமாகும். பெருமைகள் பெருகும். வீண் விரயம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். புதிய தொழில் அமையும். பாராட்டு பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. காதலில் மோதல் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. நண்பரால் செலவு உண்டு. உறவுகளால் நன்மை உண்டு. முடிவுகள் சாதகமாகும். முயற்சி பலன் தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். உலோகத்தொழில் உயர்வு தரும். பழைய நட்பு பலன் தரும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. மனைவி உடல் நலம் பாதிக்கும். பிரயாணம் ஏற்படும். உணவு விடுதி லாபம் தரும். அரசுவழி ஆதாயம் உண்டு. முற்போக்கு சிந்தனை உருவாகும். மாணவர்கள் பாராட்டு பெறுவார்கள். சந்தோ'ம் பெருகும். ஆபரணச் சேர்க்கையுண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: ஈசப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 7,4,2,9
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R




**மகரம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றும் வாரம். முத்தான வாய்ப்புகள் பெருகும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கி வசூலாகும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதுமுயற்சிகள் பலன் தரும். ஆன்மீக பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். உறவுகளால் செலவு அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. மனைவியின் அன்பு அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கடன் வாங்க நேரிடும். மனநிம்மதி அதிகரிக்கும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மருத்துவச் செலவுகள் குறையும். திறமைகள் வெளிப்படும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். புதுமுயற்சிகளை தள்ளி போடவும். விளையாட்டில் கவனம் தேவை. மாற்று யோசனை பலன் தரும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். உறவினரால் உதவிகள் கிடைக்கும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலன் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை, அதிர்ஷ்ட எண்: 4,9,8,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K

(தொடர்ச்சி 27 பக்கம்)

# இவ்வார ராசிபலன்

(26 பக்கத் தொடர்ச்சி)




**கும்பம்:** குடும்ப வளர்ச்சி பெருகும் வாரம். வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். வார்த்தைகளில் நிதானம் தேவை. உறவினர் பகை ஏற்படும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். சுறுசுறுப்பு பெருகும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். சுபச்செய்திகள் வரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். தகுதிகள் மிகுதியாகும். பயணம் வெற்றித் தரும். விருந்தினர் வருகை உண்டு. வங்கி சேமிப்பு உயரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஈசப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 5,3,2,4
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,H




**மீனம்:** வீண் வம்புகள் ஒழியும் வாரம். சகோதரியினால் நன்மை உண்டு. கலைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். அணிகலன்கள் சேரும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அமையும். பழைய பாக்கிகள் வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். உடல்பொலிவு கூடும். பெருமைகள் உயரும். சிரமங்கள் குறையும். நிர்வாக அலைச்சல் கூடும். வியாபாரம் சுமாராக இருக்கும். போட்டிகள் கடுமையாகும். குடும்ப ஒற்றுமை குறையும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். பயணம் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ரங்கநாதர், அதிர்ஷ்ட எண்: 4,3,2,8
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,Z

# கடந்தவையும் கடப்பவையும் (46)

***அதையும் நினைத்தபடி நெருக்கமான அச் சாலை வழி சென்றபோது***
***வந்தது - அன்று***

***மனதுக்குப் பிடித்த தாமரைகள் நிறைந்த ஆரிய குளம் - அங்கும்***
***நினைத்தது போல் பூக்களைக் காணவில்லை - அது***

***புதிய பொலிவோடு இருந்தபோதும் - அங்கு***
***பழைய இயற்கை எழில் இருக்கவில்லை - இருந்தது***

***இடப்புறத்தில் வெண்ணிறப் பெரு விகாரை - அதன்***
***எதிர்ப்புறத்தில் ஒருவர் கரத்தினில் நீட்டிய துப்பாக்கியோடு***

***இன்னமுமா இப்படி? என்றது மனம் - அன்று நான்***
***எந்நாளும் கடந்து போகும் தலதாவிலும் இல்லையே இப்படி***

***இங்கு மட்டும் ஏன் என்பதுதான் புரியவில்லை - இதனால்தானோ***
***இங்குள்ள எதையும் இரசிக்க மனம் விரும்பவில்லை***

***எத்தனையோ இழந்த பின்பும் இன்னமும்***
***அப்படியே இருப்பதென்றால் வேதனையே***

***ஆனாலும் மக்கள் அலட்சியமாய்த் திரிகிறார்கள் - இவர்கள்***
***பேசாமல் நிற்பதினாற் போலும்***

***கோயில்களில் விழாக்களும் கோலாகலமாக நடக்க***
***சாவகச்சேரிப் பாதைவழி விரிகிறது பயணம்***

***அழகான பெரு வெளிகள் - பெரும்***
***விளம்பரப் பலகைகளோடு அங்கு - அவை***

***வெளியிடத்துச் சில இடங்களை - அங்கும்***
***நினைவினிலே கொண்டு வர - பெரிய***

***பசுமையான புற்றரைகள் பரந்திருக்க - தூரத்தே***
***பெரிய மரங்களோடு ஆலயமும் தெரியும் காட்சி மிக அழகு***

***வீதியோர ஆலயங்கள் அதிகம் அங்கு - அவ்வாறே***
***பாதையோரம் இருந்த ஒன்றில் பக்தர்கள்***

***இறங்கி நின்று கும்பிடவும், இறங்குகின்றோம் - அங்கு***
***எழும்பி நிற்க முடியாமல் ஒருவர்***

***இரண்டு கால்களும் அவருக்கில்லை - ஏனோ?***
***அலட்டியது மனது பலவாறு - ஆனாலும்***

***நினைத்தது ஒன்றைத்தான் - அன்று***
***அனைத்து இடங்களிலும் அனர்த்தங்கள் - ஆனாலும்***

***சாவகச்சேரிச் சந்தையின் மேல்***
***இயந்திரத் துப்பாக்கிகளோடு ஏவுகணைகளும் பொருத்திய***

***உலங்கு வானூர்திகள் இரக்கமின்றி மக்களை***
***உருக்குலைய வைத்தனவே - அன்று***

***எத்தனைபேர் குடல் எறிய உடல்சிதறிக் கிடந்தனராம்***
***அத்தினத்தில் அகப்பட்டாரோ இவருமென***

***தொடர்ந்து சென்ற பாதை வழி***
***தொடர்ந்தது அந்நினைவு - இது***
***நடந்ததுவும் எண்பத்தேழில் - இதுவும்***

***காந்தி தேசத்துக் கனவான்கள் - மேலிருந்து***
***பார்த்துப் பார்த்துச் செய்ததுவாம்...*** **(தொடரும்)**

-- உமா மோகன் - *Montreal- Canada* --

# கனடா வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி நடத்திய சர்வதேசக் கவியரங்கம் திருக்குறளின் மாண்பினை மீண்டும் எம் முன் கொண்டுவந்தது



12-02-2023 அன்று எமது கனடா வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி நடத்திய சர்வதேசக் கவியரங்கம் இனிதே நடைபெற்றது.!!!

இந்த விழாவிற்குச் சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்து ஆசிவழங்கிய ரொரண்டோ மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. பொன்னையா விவேகானந்தன் அவர்களுக்கும், கனடா உதயன் பத்திரிகையின் நிறுவுநர் மற்றும் பிரதம ஆசிரியருமாகிய திரு. நாகமணி லோகேந்திரலிங்கம் அவர்களுக்கும், கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் திரு. அகனி சுரேஷ் அவர்களுக்கும் வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி - கனடா சார்பில் எமது நன்றியினைக் கூறிக்கொள்கின்றோம்.



கவியரங்கிற்கு மிகச் சிறப்பாகத் தலைமைதாங்கி எல்லோரையும் மகிழ்வித்த கவியரங்கின் தலைவரும், தஞ்சைத் தமிழ் மன்றத்தின் தலைவருமாகிய திரு. கோவிந்தராஜன் பாலு அவர்களுக்கும் வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி- கனடா மிகுந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.!!!

கவியரங்கிற் பங்கேற்று மிக அருமையாகத் தெய்வப்புலவரின் புகழ்பாடிய கவிஞர்களான:

திருமதி. மணிமேகலை கைலைவாசன்,
திரு. ச. சக்திவேல்,
திருமதி. எழிலரசி கந்தசாமி,
திரு. பீ. மதியழகன்,
திருமதி. ரூபா மணிகண்டன்,
திரு. சேகர் மருது,
திருமதி. ரவீந்திரகலா சிறிபாஸ்க்கரன்
திருமதி. பூங்கோதை ஞீகரன்
திருமதி. நந்தினி ஜென்சன் றோனால்ட்
திரு. ரமேஷ் ஸ்வாமிராஜுலு
திரு. ரவிராஜன் பாலசுப்ரமணியம்
திரு. ஆனந்தராஜா கனகதுரை




ஆகிய அனைத்துக் கவிஞர் பெருமக்களுக்கும் வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி - கனடா மிகுந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறது.!!! இவர்கள் அனைவரும் உலகின் பல நாடுகளிலிருந்தும் இரவு பகலெனப் பாராது பாயிசைத்துப் பாடவந்து பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



விழாவில் நிகழ்ச்சிகளை மிக அருமையாகத் தொகுத்து வழங்கிய இலங்கை வாழ் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் - கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர். சிவக்கொழுந்து சிவசொரூபன் அவர்களுக்கும் வள்ளுவன் வழி உலக இணையப்பள்ளி - கனடா மிகுந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.!!!

விழாவில் தமிழ்மொழி வாழ்த்துப்பா இசைத்து மகிழ்வித்த மாணவர்கள் செல்வன். ஆஜுஷ்மணன் மற்றும் செல்வன். ஆக்ஷ்சுமணன் இருவருக்கும் வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளியின் மகிழ்வான நன்றி.!!!

விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த அன்புப் பெற்றோர்கள், மாணவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி நன்றியினைக் கூறிக்கொள்கிறது.!!!



கவியரங்க விழாவிற் தமது கருத்துரை வழங்கி எல்லோரையும் ஊக்கப்படுத்திய அன்புச் சபையோர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி.!!!

தெய்வப்புலவரின் புகழ்பாட இந்தக் கவியரங்கில் இணைந்துகொண்ட அத்தனை அன்பர்களுக்கும் மீண்டும் மீண்டும் மனமார்ந்த நன்றி.!!!

இங்ஙனம்
அன்புடன்,
திருமதி. ஜோதி ஜெயக்குமார்
திரு. சோமசுந்தரம் ஜெயக்குமார் நிர்வாகிகள் - கனடா வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி.

ARJUNE - LJI Journalist









26ம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்






உதயம் 1402 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 17, 2023



# Consul General of India in Toronto Ms. Apoorva Srivastava meets Indian Languages, Tamil and English Media Editors, in Mississauga

கனடா ரொறன்ரோ மாநகரில் உள்ள இந்திய துணைத்தூதுவராலயத்தில் துணைத்தூதுவராக பணியாற்றும் ஸ்ரீமதி அபூர்வா ஸ்ரீவஸ்டவ் அவர்கள் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள இந்திய மொழிப் பத்திரிகைகள், தமிழ் பத்திரிகைகள் மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகள் ஆகியவற்றின் ஆசிரியர்களைச் கடந்த வெள்ளிக்கிழமை 10ம் திகதி சந்தித்து உரையாடினார். (உள்ளே 18ம் பக்கத்தில் தொடர்ச்சி)



# யாழ் கலாச்சார மைய திறப்பு விழாவில் இடம்பெற்ற திரைமறைவுச் சம்பவங்கள்

## — யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்

”யாழ்ப்பாண மக்களின் கலாச்சாரத்தை ஊக்குவித்து மேலும் வளர்க்கவும் இலங்கையின் வடக்கு மாகாண மக்களின் கலாச்சார விழுமியங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கிலேயே இந்திய அரசால் யாழ் மாநகர சபைக்கு சொந்தமான இடத்தில் கலாச்சார மண்டபம் கட்டப்படும்” என்று தான் இந்திய அரசிற்கும்-இலங்கை அரசிற்கும் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

அப்படிக் கட்டப்பட்டுள்ள அந்த கலாச்சார மையத்திற்கான நிலம் யாழ் மாநகர சபைக்கு சொந்தமானது. (உள்ளே 13ம் பக்கத்தில் தொடர்ச்சி)

# மனோ சாட்சி

கொழும்பிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் எழுதுகின்றார் — பகுதி — 4

## தலைப்பு: “ரணிலின் சமாதானமும், சந்திரிகாவின் சமாதானமும்”



“ரணிலை ஒழுங்காக சமாதான நடவடிக்கையை முன்னெடுக்க விட்டிருந்தால் சமாதானம் வந்திருக்கும் அல்லது போரழிவு இல்லாமல் புலிகள் அழிந்திருப்பார்கள்” என்று சுனேத்ரா பண்டாரநாயக்க, தன் சகோதரி சந்திரிகாவை திட்டினார்.

- “நான் சமாதானத்தை கொண்டு வர 2000ம் வருடத்தில் தீர்வு பொதி கொண்டு வந்த போது, ரணில் பாராளுமன்றத்தில் யூஎன்பி எம்பிக்களை வைத்து சட்டமூலத்தை தீவைத்து கொளுத்தினாரே?” என்று சந்திரிக்கா பண்டாரநாயக்க, பதிலுக்கு கூறினார்.

(உள்ளே 10ம் பக்கத்தில் கட்டுரைத் தொடர்ச்சி)

# சட்டத்துறையில் கலாநிதிப் பட்டம்பெற்ற ஜெகநாதன் தற்பரனை வாழ்த்தும் கனடா உதயன் ஆசிரிய பீடம்



கொழும்புத் தமிழ் சங்க பேரவை உறுப்பினர் சட்ட முதுமாணி . ஜெகநாதன் தற்பரன் அவர்கள் சட்டத்தில் தனது கலாநிதி பட்டத்தினை அண்மையில் பெற்றுக்கொண்டார். தற்பரன் அவர்கள் ஒரு வழக்கறிஞர், சிறுவர் உரிமைகள் செயற்பாட்டாளர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது சட்ட முதுமாணி கற்கையினை முடித்து, ஆயுத மோதல்களில் பாதிப்புற்ற சிறுவர்களின் பாதுகாப்பில் அரசுகளின் பொறுப்புடைமை குறித்து ஆய்வு செய்து முனைவர் விருதினை பெற்றுள்ளார். (உள்ளே 21ம் பக்கத்தில் தொடர்ச்சி)

# கனடா — வள்ளுவன் வழி உலக இணையப்பள்ளி நடத்திய சர்வதேசக் கவியரங்கம்

12-02-2023 அன்று எமது கனடா வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி நடத்திய சர்வதேசக் கவியரங்கம் இனிதே நடைபெற்றது. இந்த விழாவிற்குச் சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்து ஆசிவழங்கிய அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் . பொன்னையா விவேகானந்தன் அவர்களுக்கும், கனடா உதயன் பத்திரிகையின் நிறுவுநர் மற்றும் பிரதம ஆசிரியருமாகிய நாகமணி லோகேந்திரலிங்கம் அவர்களுக்கும், கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகனி சுரேஸ் அவர்களுக்கும் வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி-கனடா சார்பில் எமது நன்றியினைக் கூறிக்கொள்கின்றோம்.

(உள்ளே 27ம் பக்கத்தில் தொடர்ச்சி)







